வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு




Email : news@eelanadu.lk மலர் : 04 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 191 பக்கங்கள் : 20


07 தமிழக அரசியலில் சுழன்றடித்த சூறாவளி


08 தேர்தல்களில் நம்பிக்கை இழந்தது அரசாங்கமா, மக்களா?


09 தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சி பாடசாலைகளின் தோல்வியா?


10 தனது மகனின் குழந்தையை தானே பெற்றெடுத்த தாய்

# இராணுவம் உள்ளிட்ட சகல தரப்பிடமும் மனித உரிமை மீறல் குறித்து விசாரணை

## ஐ.நா. மீளாய்வுக் குழு இலங்கைக்கு பரிந்துரை

**ஜெனிவா, ஜூன் 18**

**இலங்கையில் நடந்த அனைத்து விதமான மனித உரிமை மீறல்கள் குறித்து இராணுவத்தினர் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா. பொதுச் சபையின் மீளாய்வுக்குழு இலங்கைக்குப் பரிந்துரைத்துள்ளது.**

காணாமல் ஆக்கப்படல்கள் மற்றும் தன்னிச்சையான தடுத்துவைப்புக்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறும் அது கோரியுள்ளது.

மேலும் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உரிய பதிலைக் கூறுவதுடன் இழப்பீட்டை வழங்கல், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதுடன் அதற்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் புதிய சட்டம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக 19

## வாய்த்தர்க்கம் முற்றி கொலையில் முடிந்தது!

### மன்னாரில் நேற்றுத் துயரம்

மன்னார், ஜூன் 18

மன்னார் மாவட்டம் நானாட்டான் அச்சங்குளம் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்ட இருவர் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். சம்பவத்தில் அச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார். 19

## மேற்குலகு நோக்கி நேற்று பயணமானார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே 649 என்ற விமானத்தில் பயணமானார்.

பிரிட்டனுக்கான விஜயம் ஒன்றுக்காகவும், பிரான்ஸின் பாரிஸில் நடைபெறவுள்ள புதிய 19

## சூழ்ச்சி மூலம் ஆட்சியை யாரும் கவிழ்க்க முடியாது

### பிரதமர் தினேஷ் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசு தொடர்ந்தும் பயணிக்கும். சூழ்ச்சிகள் மூலமும், வதந்திகள் மூலமும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது.” - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். 19

## விரும்பியோ விரும்பாமலோ விரைவில் தேர்தல் நிச்சயம்!

### சுட்டிக்காட்டுகிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஜூன் 18



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முரண்பாடு, விரைவில் தேர்தல் ஒன்று நடைபெறும் எனபதை எடுத்துக்காட்டுவதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப் பில் பேசியபோதே அவர் இவ்வாறு 19

## பதில் அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, ஜூன் 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பும் வரை, பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாட்டை விட்டு வெளியேறியதன் காரணமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## சொகுசு பஸ்ஸில் கஞ்சாவுடன் சென்றவர் வவுனியாவில் கைது

வவுனியா, ஜூன் 18

சொகுசு பஸ்ஸில் கஞ்சாவை கடத்திச்சென்ற நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பஸ்ஸில் கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா பொலிஸ் புலனாய்வுப் பிரிவிற்கு தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது.

அதற்கமைய வவுனியா மணிக்கூட்டுகோபுரச் 19

## வவுனியாவில் இன்று கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு கூடுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி) ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு கூட்டம் நடைபெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டுமென, கூட்டணியிலுள்ள ஒரு பகுதியினர் தீவிரமாக வலியுறுத்தி வருகிறார்கள்.

இன்றைய கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைமைப் பதவி 19

## மா விலை எகிறியது

கொழும்பு, ஜூன் 18

கோதுமை மாவை இறக்குமதி செய்யும்போது நிச்சயமாக அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டும் என நிதிய மைச்சு வர்த்தமானி அறிவித்ததையடுத்து சந்தையில் இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை 40 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கோதுமை மா விநியோக நிறுவனங்களால் கோதுமை மாவின் விலை அவ்வப்போது அதிகரித்து வருவதால், புற்கோட்டை 19

## மின்சார கட்டணத்தை திருத்துவதில் சிக்கல்!

### பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு தலைவர் நியமிக்கப்படாமையினால்

கொழும்பு, ஜூன் 18

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய மின்சார கட்டணத் திருத்தத்துக்கு, குறித்த காலப் பகுதியினுள் அனுமதி வழங்கப்படாவிட்டால், தற்போது அமுலில் உள்ள மின்சாரக் கட்டணத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்த வேண்டியிருக்கும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசு இவ்வருட இறுதிக்குள் நீக்கவேண்டும்!

## இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் வலியுறுத்து


கொழும்பு, ஜுன் 18

இலங்கை இந்த வருட இறுதிக்குள் தனது பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்துவதும் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதும் அவசியம் என இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொராகொட தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தனது வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதை இடைநிறுத்தியுள்ளது. பல பொருட்களை இறக்குமதி செய்வதை இடைநிறுத்தியுள்ளது. இவை இலங்கை செய்துள்ள உடன்படிக்கைகளுக்கு எதிரானது.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் உடன் படிக்கை



செய்துகொண் டுள்ளதாலேயே உலக நாடுகள் இதற்கு இணங்கியுள்ளன.

கடந்த மூன்று நான்கு வருடங்களா நாங்கள் வெளி நாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யவில்லை. இப்படியே நாங்கள் தொடரமுடியாது. கடந்த 18 மாதங்களாக எங்கள் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதார ஸ்திரதன்மைக்கான ஆரம்ப நிலையை காண்கின்றோம்.

பணவீக்கம் அதிகரிக்காத வகையில் வட்டிவீதங்களை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு மத்திய வங்கி முயல்கின்றது. எரிபொருளுக்கான தேவை குறைக்கப்பட்டுள்ளது. இது செயற்கையான விதத்தில் முன்னெடுக்கப்பட்டது.

எனினும் தற்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டதும் நாங்கள் புதியசவால்களை எதிர்கொள்வோம். கட்டுப்பாட்டு சூழலை இந்த வருட இறுதிக்குள் முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

அதன் பின்னரே இலங்கை நாணயத்தின் உண்மையான பெறுமதி தெரியவரும். நாட்டுக்கு பொருளாதார வளர்ச்சி அவசியம் - என்றார். (அ)

# நிறைவுக்கு வந்தது அரச மருந்தாளர் சங்கத்தின் வேலைநிறுத்த போராட்டம்

கொழும்பு, ஜுன் 18

அரச மருந்தாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையின் 23 மருந்தாளர்களை இடமாற்றம் செய்தமைக்கு எதிராகவே இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்ட நிலையில், நேற்று சனிக்கிழமை காலை 8 மணியுடன் இப்போராட்டம் நிறைவடைந்துள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தால் பல வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கான சிகிச்சைக்கு தடை ஏற்பட்டதுடன், நோயாளிகளும் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

இதேவேளை, தமது பிரச்னைகளுக்கு உரிய தீர்வினை வழங்காவிடின், எதிர்காலத்தில் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இனவாதம், மதவாதத்தை தூண்டுவது ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை

## நாலக கொடஹேவா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 18

ஆட்சி அதிகாரத்திற்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ரணில் விக்கிரமசிங்க நான்கு கொள்கைகளை செயற்படுத்துவார் என சுதந்திர மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் எதிரிகளை அரச பலத்தைப் பயன்படுத்தி அடக்குதல், குறுகிய கால நோக்கத்திற்காக பொருளாதாரத்தை தவறாக முகாமைத்துவம் செய்வது, தேசிய வளங்களை விற்பனை செய்வது மாத்திரமல்லாது, இனவாதம் மற்றும் மதவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுவது அவரது நான்கு கொள்கைகள்.

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நடைமுறைப்படுத்திய கொள்கைகளுக்கு எதிராகவே 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 லட்சம் மக்கள் வாக்களித்தனர்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவை அவரது கட்சியினரே நிராகரித்தன் காரணமாக 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்திற்கு வர முடியாதபடி தோல்வியடைந்தார்.

தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்திற்கு தெரிவான ரணில் விக்ரமசிங்க, பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக பதவிக்கு வந்து, தற்போது வழமை போல் தனது நான்கு கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

இராணுவம் மற்றும் பொலிஸாரை பயன்படுத்தி மிகப் பெரிய அடக்குமுறையை மேற்கொண்டு வருகிறார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒளி,ஒலிப்பரப்பு அதிகார சபை சட்டமூலம் போன்ற புதிய சட்டங்களை கொண்டு வந்து எதிர்காலத்தில் மிகப் பெரிய அடக்குமுறைக்கு தயாராகி வருகிறார்.

2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அதிக வட்டிக்கு 12.5 பில்லியன் டொலர்களை குறுகிய கால வணிக கடனாக பெற்று முதலீட்டுக்கு பதிலாக பயன்பாட்டுக்காக பயன்படுத்தி நாட்டை மிகப் பெரிய கடன் பொறிக்குள் தள்ளினர்.

இவர்கள் செய்த பாவத்தையே கோட்டாபய அனுபவிக்க நேரிட்டது. தற்போதும் தொடர்ந்து கடனைப் பெற்று வருகின்றனர்.

அன்று பூகோளவியல் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார மையமாக மாறவிருந்தன ஹம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனை செய்யப்பட்ட விதத்தை நாம் பார்த்தோம்.

அதேபோல் தற்போது இலாபத்தில் இயங்கி வரும் அரச நிறுவனங்களான இலங்கை டெலிகொம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லங்கா ஹொஸ்பிடல், சிறிலங்கன் கேட்ரிங் உட்பட பல நிறுவனங்களை விற்பனை செய்ய தயாராகி வருகின்றனர்.

இவற்றை விற்பனை செய்த பின்னர் எதிர்கால சந்ததிக்கு எதுவும் மிஞ்சாது - என்றார். (அ)



# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த வியட்நாம் தூதர்

கொழும்பு, ஜுன் 18

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் குயன் திரொனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இந்த சந்திப்பு நடந்துள்ளது.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் இருந்து வரும் நீண்டகால இரு தரப்பு உறவுகள் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

தற்போது வியட்நாம் படிப்படியாக முன்னேறி வருவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தனது மகிழ்ச்சியை வெளியிட்டார்.

இதன்போது இலங்கையில் தற்போது காணப்படும் நிலைமை தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் இலங்கையை கட்டியெழுப்புவதற்கு தேவையான உதவிகளை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர், வியட்நாம் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் 33 ஆவது தியாகிகள் தினத்தை முன்னிட்டு சிரமாதானப் பணி

வடமராட்சி, ஜுன். 18

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் 33 ஆவது தியாகிகள் தினத்தை முன்னிட்டு சிரமாதான பணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் வடமராட்சி அமைப்பாளர் சித்த மருத்துவர் சிவகுமார் தலைமையில் நேற்று காலை 7:00 மணியளவில் பருத்தித்துறை மந்திகை கருகம்பன் இந்து மயானத்தில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (அ-02)

# உள்ளூர் நிர்மாணத் துறை 2024 ஆம் ஆண்டு வழமைக்கு!

கொழும்பு, ஜுன் 18

உள்ளூர் நிர்மாண துறை 2024 ஆம் ஆண்டளவில் வழமைக்கு திரும்பும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மீண்டும் சிறப்பான வலுவினை வழங்கும் பங்களிப்பாளராக பலன் தரும் தன்மையுடன் இயங்கும் என இலங்கை நிர்மாணத்துறை அமைப்பின் தலைவர் ரொஹான் கருணாரட்ன தெரிவித்தார்.

நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக சிறப்பாக செயற்பட்ட ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் அவர் தமது நன்றியையும் வெளிப்படுத்தியுள்ளார்.(அ)

# வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்படும்வரை பழைய யாப்பிற்கு அமைய செயற்படுக!

## தேர்தல் ஆணைக்குழு சுதந்திரக் கட்சிக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 18

கட்சியின் யாப்பை திருத்துவது தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் இறுதித் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை, கட்சியின் பழைய யாப்பிற்கு அமைய செயற்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு சுதந்திரக் கட்சிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், சட்டத்தரணி தயாசிறி ஜயசேகரவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பில் நீதிமன்றம் இதுவரை வழங்கியுள்ள இடைக்கால தடையுத்தரவுக்கு அமைய, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் பழைய யாப்பு செயற்படுத்தப்படும்போது, கடந்த வருடம் செப்ரெம்பர் 22 ஆம் திகதி திருத்தியமைக்கப்பட்ட கட்சியின் யாப்பு மற்றும் அதிகாரிகள் குழு ஆகியன இரத்து செய்யப்படும்.

இதற்கமைய, சுதந்திரக் கட்சியின் புதிய யாப்பிற்கமைவாக தற்போது சிரேஷ்ட உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஷான் விஜயலால் டி சில்வா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பதவிகள் இரத்தாகவுள்ளன.

அத்துடன், பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ள சாரதி துஷ்மந்தவின் பதவியும் இரத்தாகவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பழைய யாப்பிற்கமைய, சிரேஷ்ட உப தலைவர்களாக செயற்பட்ட நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரும், கட்சியின் பொருளாளராக செயற்பட்ட லசந்த அழகியவண்ணவும் தொடர்ந்தும் அந்த பதவிகளில் செயற்படவுள்ளனர். (அ)

# விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முயற்சி 13 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்!

## இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு நடவடிக்கை

புதுடில்லி, ஜூன் 18

**விடுதலைப் புலிகளை மீளுருவாக்குவதற்காக ஆயுதங்கள் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 3 இந்திய மற்றும் 10 இலங்கையர்கள் உட்பட 13 பேருக்கு எதிராக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.**

இந்தியாவிலும் இலங்கையிலும் சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகத்தைப் பயன்படுத்தி, பணத்தைப் பெற்றுக் கொண்டு விடுதலைப் புலிகளை புத்துயிர் அளிப்பதற்கு ஆயுதங்களை வாங்குவதற்காக அவர்கள் திட்டமிட்டதாக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம், 1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் மற்றும் போதைப் பொருள் மற்றும் மனோவியல் பொருட்கள் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் கடந்த வியாழக்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் எம். செல்வகுமார் , விக்கி என்ற விக்னேஷ்வர பெருமாள் மற்றும் ஐயப்பன் நந்து ஆகிய 3 இந்தியர்களுக்கு எதிராகவும் குணா, புஷ்பராஜா, மொஹமட் அஸ்மின், சுனில் காமினி பொன்சேகா, ஸ்டான்லி கென்னடி பெர் னாண்டோ, தனுக்க ரொஷான், நளின் சத்துரங்க, கமகே சுரங்க பிரதீப், திலீபன் மற்றும் தனரத் தினம் நிலுக்ஷன் ஆகியோருக்கு எதிராகவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

குற்றச்செயல்கள் மூலம் கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி அவர்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர் எனவும் இவர்களிடம் இருந்து போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பிலான பல ஆவணங்கள், பெருமளவு பணமும் தங்கப்பாளங்க ளும் கைப்பற்றப்பட்டதாக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

# அணுமின் நிலையம் குறித்து இன்னும் இறுதி முடிவில்லை

கொழும்பு, ஜூன் 18

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மேற்கொண்டதை போன்று அணுமின் நிலையத்தில் முதலீடு செய்வதற்கான ரஷ்யாவின் முன்மொழிவை முன்னெடுத்துச் செல்வது குறித்து அரசாங்கம் இதுவரை இறுதி நிலைப்பாட்டை எட்டவில்லை என மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

ரஷ்ய அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம், இரண்டு அணு உலைகளை இயக்கி 300 மெகாவாட் ஆற்றலை உற்பத்தி செய்யும் அணுமின் நிலையத்தை உருவாக்க முன்வந்துள்ளது.

ரொசாட்டம் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது, அணுசக்தி துறையில் முதலீடு செய்வதற்கான இந்த திட்டத்தை பரிசீலிக்க இலங்கை ஒப்புக்கொள்வதாக, ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, அணுமின் நிலையம் குறித்து முடிவெடுப்பதற்கு முன்னர் பல விடயங்களை கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதனால் இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என கூறினார்.

குறிப்பாக பாதுகாப்பு அம்சங்களை கவனத்திற்கொள்ள வேண்டும் என்றும் அத்தோடு அணுசக்தி தொடர்பான சர்வதேச மாநாடுகளை ஆராய வேண்டும் என்பதனால் அரசாங்கம் எந்த இறுதி நிலைப்பாட்டையும் எட்டவில்லை என்றும் மாபா பத்திரன குறிப்பிட்டார்.

(அ)

# இலங்கை குடும்பமொன்றின் மாதாந்த செலவு ரூபா 76,124!

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் 2023ஆம் ஆண்டுக்கான சமீபத்திய அறிக்கைகளின்படி, இலங்கையில் குடும்பமொன்றின் மாதாந்தச் செலவு இவ்வருடம் 76,124 ரூபாவாக அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

கணக்கெடுப்புத் தரவுகளின்படி, கடந்த வருடம் இலங்கையில் ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவு சுமார் 63,820 ரூபாவாகும் என அவர் கூறினார்.

இலங்கை குடும்பம் ஒன்றின் மாதாந்த செலவில் 53 வீதம் அதாவது 40632 ரூபா உணவுக்காக செலவிடப்பட வேண்டியுள்ளது. மீதமுள்ள 35,492 ரூபாய் (மொத்த செலவில் 47 சதவீதம்) உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படுகிறது என்று பேராசிரியர் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் 60 வீதமான குடும்பங்களின் மாதாந்த வருமானம் 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் குறைந்துள்ளதாக அத்துக்கோரள தெரிவித்தார்.

இலங்கை குடும்பங்களின் உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படும் பணத்தின் பெரும்பகுதி கடனை மீளச் செலுத்துவதற்கு செலவிடவேண்டியுள்ளதாகவும், இது உணவு அல்லாத செலவினங்களில் 23 வீதமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படும் பணத்தில் 14 வீதம் கல்விக்காகவும், 15 வீதம் மருத்துவம் மற்றும் சுகாதாரத்துக்காகவும், 13 வீதம் எரிபொருளுக்காகவும், 10 வீதம் ஆடைகளுக்காகவும், 6 வீதம் போக்குவரத்துச் செலவுகளுக்காகவும் ஒதுக்கப்படுவதாக வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில், இலங்கையின் பொருளாதாரம் 11.5% எதிர்மறையாக இருந்தது. இதன் காரணமாகவே இந்த பணவீக்க நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# காற்று மாசுபாடு இருதயநோய் அபாயத்தை அதிகரித்துள்ளது

## மருத்துவர் அனிது பத்திரன எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 18

காற்று மாசுபாடு உலகின் ஏனைய பகுதிகளைப் போன்று இலங்கையிலும் இருதய நோய் அபாயத்தை அதிகரித்துள்ளதாக இருதய நோய் நிபுணர் அனிது பத்திரன தெரிவித்தார்.

காற்று மாசுபாடு நீண்ட காலமாக ஒரு குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்திவந்த நிலையில் தற்போது மனித ஆரோக்கியத்தில் தற்போது தாக்கத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

இதனால், காற்று மாசுபாடு இதய நோயை உருவாக்கும் முக்கிய காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் இருதய நோய் நிபுணர் அனிது பத்திரன கூறினார். இலங்கையில் காற்று மாசு பாடு அதிகரித்து வருவதால், காற்று மாசுபாட்டுடன் தொடர்புடைய நோய்களைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என்றும் அவர் தெரிவித்தார்.

காற்று மாசுபாடு இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமல்லாமல், உயர் குருதி அழுத்தம், கொழுப்பு, நீரிழிவு, புற்றுநோய் மற்றும் நீண்ட கால நுரையீரல் பிரச்னை கொண்ட நோயாளிகளையும் தாக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# முட்டையை 44 ரூபாக்கு மேல் விற்றால் சட்ட நடவடிக்கை!

## வர்த்தகர்கள் மூவருக்கு ரூ.1லட்சம் அபராதம்

மன்னார், ஜூன் 18

மன்னாரில் முட்டை மற்றும் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் மூவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்து மன்னார் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மன்னார் நகர் பகுதியில் தொடர்ச்சியாக பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக மன்னார் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபைக்கு கிடைக்க பெற்ற முறைப்பாடு தொடர்பில் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த வழக்கு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வர்த்தகர்கள் மூவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டமையைத் தொடர்ந்து மன்னார் நீதிமன்ற நீதிபதி குறித்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் தலா ஒரு லட்சம் அபராதம் விதித்தார்.

இந்நிலையில் முட்டை 44 ரூபாய்க்கு அதிகமாகவும் கீரி சம்பா அரிசி 260 ரூபாய்க்கு அதிகமாகவும் விற்பனை செய்யும் பட்சத்தில் மன்னார் நுகர்வோர் அதிகார சபையிடம் முறையிடுமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினர் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா சட்டவிரோத சிங்களக்குடியேற்றங்களை மாவட்ட நிர்வாகத்துக்குள் உள்ளீர்க்க நடவடிக்கை!

வவுனியா, ஜூன் 18

வவுனியா வடக்கின் எல்லை பகுதிகளில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் குடியேற்றம் செய்யப்பட்ட சிங்கள கிராமங்கள் சிலவற்றை வவுனியா மாவட்டத்தின் நிர்வாகத்திற்குள் உள்ளெடுப்பதற்கான அவதானம் ஒன்றை செலுத்துமாறு தேசிய எல்லை நிர்ணயக் குழுவினால் வவுனியா மாவட்ட நிர்வாகத்திற்கு பரிந்துரை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதன்போது தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அதன் அடிப்படையில்,

வவுனியா வடக்கின் எல்லை பகுதிகளில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு அரசின் ஆதரவுடன் பெரும்பான்மையின குடியேற்றங்கள் போர் முடிவடைந்த பின்னர் ஏற்படுத்தப்பட்டது.

அவற்றில் சில கிராமங்களின் நிர்வாகச் செயற்பாடுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து முன்னெடுப்பதற்கான அவதானம் ஒன்றை செலுத்துமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் வவுனியா மாவட்ட நிர்வாகத்திற்கு முன்மொழிவு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தவகையில் போகஸ்வெவ-1,போகஸ்வெவ-2, வெகரதென்ன, கம்பிலிவெவ, நாமல்கம, நந்திமித்திரகம, சலினிகம, ஆகிய கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தாங்கள் அனுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் அரசநிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதுடன் பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்து வருகின்றோம்.

எனவே எம்மை வவுனியா மாவட்ட நிர்வாகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்தே குறித்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்துமாறு தேசிய எல்லை நிர்ணய குழுவால் மாவட்ட நிர்வாகத்திற்கு பரிந்துரை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக இன்றையதினம் ஆராய்ந்த வவுனியா மாவட்ட நிர்வாகம் அதனை வவுனியா மாவட்டத்திற்குள் உள்ளீர்ப்பதற்கான சாதகமான தீர்மானம் ஒன்றை எடுப்பதாக தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் அரச நிர்வாகங்களால் பெரும்காடுகளை அழித்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட பெரும்பான்மையினக் குடியேற்றங்களால் பல சிங்கள கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை உட்பட பல இடங்களில் இருந்தும் அங்கு மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

அந்த கிராமங்கள் உரிய கட்டமைப்புகளை கொண்டிராதமையால் தற்போது அவற்றில் நிர்வாகச் சிக்கல்கள் இருப்பதைக் காரணம்காட்டி அவற்றை வவுனியாவுடன் இணைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவி கோருகிறது மொட்டு

கொழும்பு, ஜூன் 18

பொதுஜன பெரமுனவின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, மாவட்ட மட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாக அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எமது கட்சியின் சார்பில் போட்டியிட்டு மாவட்ட மட்டத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்ற சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

அவர்களுக்கு கட்டாயம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவேண்டும் என்பது குறித்து கடந்த சில வாரங்களாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடினோம்.

இதற்கு அமைய மாவட்டத் தலைவர்களுக்கு முக்கிய பொறுப்புகளை வழங்க அரசாங்கம் இணங்கியுள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி அல்லது அரசாங்கத்தின் வேறு முக்கிய பதவிகள் இவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித்த அபேகுணவர்தன, எஸ்.எம்.சந்திரசேன, விமலவீர திஸாநாயக்க, சீ.பி.ரத்நாயக்க உள்ளிட்டோருக்கு இந்தப் பதவிகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளது.

இதன் மூலம் நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய பதவிகள் இவர்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அந்த சிரேஷ்ட உறுப்பினர் மேலும் கூறினார். (அ)




# வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு ரூபா 7 மில்லியன் பெறுமதியான மருந்து

வவுனியா, ஜூன் 18

கனேடியத் தமிழ் பேரவையினால் வவுனியா வைத்தியசாலைக்கு 7 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகள் நேற்று முன்தினம் மாலை வழங்கப்பட்டன.

கனேடியத் தமிழ் பேரவை ஆண்டுதோறும் தமிழ் கனேடியர்களின் நிதியுதவியின் ஊடாக பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

இந்நிலையில் இலங்கையில் தற்போது நிலவிவரும் மோசமான பொருளாதார நெருக்கடியினைக் கருத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு தலா 7 மில்லியன் பெறுமதியான மருத்துவப் பொருட்களை கனேடியத் தமிழ் பேரவை வழங்கியுள்ளது.

அந்தவகையில் வவுனியா வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் செந்தூரப்பதி ராஜா, வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், அமைப்பின் பிரதித் தலைவர் ரவீனா ராஜசிங்கம், மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# வரி செலுத்தாத மதுபான நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்படும்

கொழும்பு, ஜூன் 18

அரசுக்கு செலுத்தவேண்டிய பல கோடி ரூபாய் கலால் வரியை செலுத்தாத மதுபான நிறுவனங்களின் உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்படும் என அனைத்து மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கும் கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் கலால் வரி செலுத்தாத பல மதுபான நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் கூறியுள்ளது.

இது தொடர்பில் கலால் ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க தெரிவிக்கையில்-

கலால் திணைக்களத்திற்கு கலால் வரி செலுத்தத் தவறிய மதுபான நிறுவனங்கள் உடனடியாக வரி செலுத்துமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்ந்தும் பணத்தை செலுத்த தவறினால், அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியிருக்கும் - என்றார். (அ)

# தனியார் வகுப்பு ஆசிரியர்களுக்கு இனி கற்பித்தல் அனுமதிப்பத்திரம்!

கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் தனியார் வகுப்பு ஆசிரியர்களுக்கு கற்பித்தல் அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பில் கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் முன்மொழியப்பட்டுள்ளது.

அண்மையில் கல்வி பற்றிய துறை சார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இராதாகிருஷ்ணன் தலைமையில் கூடியது.

இதன்போது, நாடளாவிய ரீதியில் தனியார் வகுப்புக்களை நடத்தும் தனியார் ஆசிரியர்களின் தரம் குறித்து குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் தனியார் ஆசிரியர்களின் தகுதிகள் மற்றும் தரம் குறித்து சமூகத்தில் இடம்பெறும் கலந்துரையாடல் தொடர்பிலும் பேசப்பட்டது.

அதன்படி, தனியார் ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தி அவர்களின் தொழிலுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதே சிறந்தது என கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு குழு பரிந்துரைத்தது.

ஏனைய நாடுகளில் தனியார் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு அந்தத் தொழிலுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதுடன், இலங்கையிலும் அவ்வாறானதொரு முறையைப் பின்பற்றுவது பொருத்தமானது என கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

தனியார் வகுப்பு ஆசிரியர்களை ஒழுங்குபடுத்தி அவர்களுக்கு சட்டரீதியாக தொழில் அங்கீகாரம் வழங்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு குழுவில் தலைவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும், சர்வதேச பாடசாலைகளைக் கண்காணிக்கவும் ஒழுங்குப்படுத்தவும் கல்வி அமைச்சில் ஒரு விசேட பிரிவை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இறக்குமதி கட்டுப்பாடு தளர்வால் டொலரின் பெறுமதி உயர்வடைவு

கொழும்பு, ஜூன் 18

கடந்த வாரம் பல பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் பின்னர் அமெரிக்க டொலருக்கான தேவை கணிசமான அளவு அதிகரித்துள்ளமையே இந்த நாட்களில் டொலரின் பெறுமதி வலுவடைவதற்கு முக்கிய காரணம் என பொருளாதார மற்றும் நிதிச் சந்தை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ஜூன் 09ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 286 பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நிதியமைச்சு தளர்த்தியுள்ளதாகவும் இதன் காரணமாக குறுகிய காலத்தில் குறித்த பொருட்களின் இறக்குமதிக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் அந்த பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதுடன் அமெரிக்க டொலர் மேலும் உயரும் என்ற எதிர்பார்ப்பும் இந்த நிலைமையை ஏற்படுத்தியிருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பொருட்கள் நீண்ட காலத்திற்குப் பின்னர் அகற்றப்படுவது வழமையானது எனவும், அப்பொருட்களுக்கான இறக்குமதித் தேவை உடனடியாக அதிகரிக்கும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும், ரூபாவுக்கு நிகரான டொலரின் தினசரி உயர்வு அடுத்த சில நாட்களில் மிதமானதாக இருக்கும் என பொருளாதார மற்றும் நிதி ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

# வாகனங்கள் இறக்குமதிக்கு இப்போது அனுமதியில்லை

கொழும்பு, ஜூன் 18

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தற்போதைய நிலையில் அனுமதிக்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ரூபாவின் மீள் பெறுமதி வீழ்ச்சியானது தேவை மற்றும் விநியோகத்தினால் ஏற்படுகின்ற ஒரு சாதாரண நிலைமை என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "இந்த நாட்களில் அத்தியாவசிய எரிபொருள் கொள்வனவிற்காக பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஒரே நேரத்தில் சுமார் 75 முதல் 80 மில்லியன் டொலர்களை கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது.

அதை சந்தை மற்றும் மத்திய வங்கியிடம் இருந்து கொள்வனவு செய்தது.

இதனால் டொலரின் பெறுமதி சற்று அதிகரித்தது.

நம் நாட்டில் சிலர் டொலரில் முதலீடு செய்கின்ற நிலையில் அவர்களும் டொலரினை கொள்வனவு செய்ய ஆரம்பித்துள்ளனர். இவற்றின் விளைவாகவே டொலரின் பெறுமதி 320 ரூபா யாக எகிறியது.

அத்துடன் நேற்று முன்தினம் மீண்டும் 306 ரூபாய் என்ற நிலைக்கு வந்ததையும் பார்த்தோம். இது ஒரு அசாதாரணமான சூழ்நிலை அல்ல, தேவை மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் நிகழும் சாதாரண ஒரு விடயம்.

எனினும் தற்போதைக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க முடியாது என குறிப்பிட்டார். (அ)

# ஷானி உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கு ஒக. 25 வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 18

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரான ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர, சி.ஐ.டி. முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் மெண்டிஸ், சி.ஐ.டி.யின் முன்னாள் பொலிஸ் அதிகாரி பிரேமதிலக ஆகியோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒகஸ்ட் 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கம்பஹா நீதிவான் நீதிமன்றம் இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

கம்பஹா நீதிவான் விடுமுறையில் இருந்த நிலையில் மேலதிக நீதிவான் ஒருவர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெலிவேரிய பகுதி ஆயுத கிடங்கு விவகார விசாரணைகளில், சந்தேக நபர்களைக் கைது செய்ய புதிதாக சாட்சியங்களை உருவாக்கியதாக கூறி, இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் சி.சி.டி. எனும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். இந்த வழக்கில் 3 ஆவது சந்தேக நபராக, தற்போது நாட்டிலிருந்து வெளியேறி சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள சி.ஐ.டி.யின் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா பெயரிடப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அவரை கைது செய்ய பிடியாணையையும் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Eelanadu
18.06.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி ஆனி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பௌத்தமயமாக்கலுக்கு யார் காரணம்?

பௌத்த மயமாக்கலுக்கு தமிழ் அரசியலவாதிகளும் துணைபோவதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் குற்றம்சாட்டியிருக்கின்றது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதே குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றது. ஒரு கட்சியை, பிறிதொரு கட்சி குற்றம்சாட்டுவதிலேயே, கடந்த 14 வருடங்கள் சென்றிருக்கின்றது. ஆனால் தமிழ் மக்களுக்கான கோரிக்கைகளில் சிறிதளவுகூட முன்னேற்றங்களை காண்பிக்க முடியவில்லை. 2015 இல், ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, சில விடயங்களை வெற்றி கொள்வதற்கான சூழல் உருவாகியது - ஆனால் அதனை சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூர நோக்கோடு கையாளவில்லை.

ஒப்பீட்டடிப்படையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இரண்டு வருடங்கள் நிலைமைகள் சுமூகமாக இருந்தன. மைத்திரிபால சிறிசேன கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பதற்கு தயாராக இருந்தார். ஆனால் பின்னர் - ரணில் - மைத்திரி உள்முரண்பாடுகளால், நிலைமைகள் சடுதியாக மாறிவிட்டன. இலங்கைத் தீவின் அரசியல் முற்றிலுமாக இனவாதமயப்பட்ட அரசியல். இந்தப் பின்புலத்தில் ஆட்சிக்கு வருபவர்கள் எவராக இருப்பினும், அவர்கள் தங்களுக்குள் பல்வேறு சமரசங்களை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதனைத் துல்லிமாக கணித்தே தமிழர் தரப்புக்களும் அரசியலை முன்னெடுக்கவேண்டும். தமிழில் ஒரு கூற்றுண்டு - காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள். அதாவது வாய்ப்புக்கள் கிடைக்கின்றபோது, அதனை உச்ச அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வாய்ப்புக்களை தவறவிட்டுவிட்டு, மற்றவர்களை குற்றம்சாட்டுவதில் பயனில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள், இலங்கை சுதந்திரமடைந்ததாக கூறப்படும் 48 இலிருந்து, தங்களின் சிங்கள - பௌத்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். சிங்கள மக்களை நாடு முழுமைக்கும் பரவல்படுத்தும் வேலைத்திட்டத்தின் இன்னொரு பரிமாணமே, பௌத்தமயமாக்கல். இலங்கையின் அரசியல் யாப்பு அதற்கான சட்ட அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றது.

இன்று, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை, தென்னிலங்கை பௌத்த சக்திகள் தொடர்ந்தும் எதிர்த்துவருவது, மாகாண சபை முழுமையான அதிகாரத்துடன் இயங்குநிலையில் இருக்குமாயின், தங்களது மேலாதிக்க நிகழ்சிநிரலை வடக்கு-கிழக்கில் - முக்கியமாக வடக்கில் முன்னெடுக்க முடியாமல்போகலாமென்று அவர்கள் அச்சப்படுகின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையில் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபை இயங்கியபோது, அவ்வாறானதொரு சூழல் நிலவியது. இதன் காரணமாகவே மாகாண சபை முழுமையான அதிகாரத்துடன் இயங்கக் கூடாதென்று, தென்னிலங்கை சிங்கள தேசியவாதத் தரப்புக்கள் கருதுகின்றன. அதற்கு தமிழ்ச் சூழலிலுள்ளவர்கள் சிலரும் துணை போகின்றனர் - அறிந்தோ, அறியாமலோ.

பௌத்த மயமாக்கலுக்கு யார் காரணமென்றால், சிங்கள - பௌத்த தரப்புக்கள்தான் காரணம். ஆனால் அதனை தடுப்பதில், அனைத்து தமிழ்க் கட்சிகளுமே தோல்வியடைந்திருக்கின்றன. இதில் ஒருவர் நல்லவர் - ஒருவர் கூடாதவரென்று, ஒருவரையொருவர் குற்றம்சாட்டிவிட்டு, மற்றவர்கள் தங்களை புனிதர்களாக காண்பிக்கும அரசியலால் எவ்வித பயனுமில்லை. முதலில் தமிழ்த் தேசியத்தை பெயரில் வைத்திருக்கும் கட்சிகள், மற்றவர்களை குற்றம்சாட்டுவதில் சுகம் காணும் அற்ப அரசியலை கைவிட வேண்டும். விடயங்களை சுயவிமர்சனத்தோடு அணுகி, சவால்களை துல்லியமாக மதிப்பிட்டு, தங்களால் என்ன செய்ய முடியுமென்று சிந்திக்க வேண்டும். உடனடி - இடைக்கால - நீண்டகால அடிப்படையில், அரசியலை கையாளும் பொறிமுறையை அறியவேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர், தங்களுக்குள் ஒருவரையொருர் குற்றம்சாட்டுவதால், அரச தரப்பு கட்சிகளின் செல்வாக்குத்தான் தமிழ் மக்கள் மத்தியில் பலமாக வேரூன்றும் சூழல் உருவாகும். ஏற்கனவே அது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

# கோட்டாபய வழியிலேயே ரணிலும் பயணிக்கின்றார்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 18**

**கோட்டாபய ராஜபக்ஷ பயணித்த அதே வழியில்தான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பயணிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதிக்கும், ஜனாதிபதியை அந்தப் பதவிக்கு அமர்த்திய மொட்டுக் கட்சியினருக்கும் இடையில் தற்போது முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

மொட்டுக் கட்சியினர் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதியிடம் கேட்க, ஜனாதிபதியோ இன்று தருகிறேன் நாளை தருகிறேன் என்று கூறுவதால்தான் இந்த முரண் பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அரசியல் சூதும், அரசியல் விளையாட்டும் இன்னும் ஒன்றரை வருடங்களுக்கு மட்டும்தான் நாட்டில் நீடிக்கும். பொய்யான செய்திகளைப் பரப்புவதில், ஜனாதிபதியும் அரசாங்கங்கமும் கைத்தேர்தவர்களாக இருக்கிறார்கள்.

ரணிலும் - சஜித்தும் இணையவுள்ளார்கள் என்றெல்லாம்கூட தற்போது செய்திகள் வந்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், ஒரு போதும் பதவிக்கு ஆசைப் பட்டு மக்களை ஏமாற்றமாட்டோம் என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன்.

நாம் ஒரு பதவிக்கு சென்றால்கூட, அது மக்களின் ஆணையால் தான் இருக்குமே ஒழிய, ஊடக விளையாட்டுக்களால் அல்ல.

கோடீஸ்வரர்களுக்கு சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுத்துதான், முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ இந்த நாட்டையே அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றார்.

இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், கோட்டாபய ராஜபக்ஷ பயணித்த அந்தப் பாதையில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

ராஜபக்ஷ நிழல் அரசாங்கத்தின் ஊடாக ராஜபக்ஷக்களை அவர் தொடர்ச்சியாக பாதுகாத்து வருகிறார். திருடர் கூட்டத்தை பாதுகாக்கும் ஜனாதிபதியுடன் நாம் ஒருபோதும் இணையப் போவதில்லை-என்றார்.

(அ)

# ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் எடுத்துச் சென்ற விலை மதிப்பற்ற பொருட்கள் மீள இலங்கைக்கு

*கொழும்பு, ஜூன் 18*

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் (1656 முதல் 1796 வரை) இலங்கையில் இருந்து நெதர்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்ட விலை மதிக்க முடியாத மிகப் பழமையான ஆறு ஆயுதங்களை இலங்கைக்கு வழங்க அந்நாட்டு அரசு உறுதியளித்துள்ளது.

இலங்கையின் பாரம்பரிய சிற்பங்கள் அடங்கிய பீரங்கி, லெவ்கே திஸாவுக்கு சொந்தமான வைரம் பதிக்கப்பட்ட வாள் உள்ளிட்டவை இவற்றில் அடங்கும்.

இந்த புராதன பொருட்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கொழும்பு அருங்காட்சியகத்தில் விசேட குடிலில் வைக்கப்படும். இந்த குடில் நெதர்லாந்து அரசின் கண்காணிப்பின் கீழ் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்த புராதன பொருட்களுக்கு காலநிலையால் எவ்வித சேதங்களுக்கு ஏற்படாத வகையில் குடில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் இந்த பொருட்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட உள்ளன.

வெள்ளி, தங்கம் மற்றும் மாணிக்கக்கல் பதிக்கப்பட்ட வெங்கல பீரங்கி, மரத்தினால் செய்யப்பட்ட துப்பாக்கி, வண்டி, கனமான பிடியுடன் கூடி 136 வைரகற்கள் பதிக்கப்பட்ட வாள் உறை, அழகான சிறிய சிற்பங்களுடன் கூடிய இரண்டு துப்பாக்கிகள், இரும்பு வாள், இரும்பு உறை, தங்கமுலாம் பூசப்பட்ட சிறி துப்பாக்கி குழல், வெங்கல துப்பாக்கி என்பன இதில் அடங்கும்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க, நெதர்லாந்து அரசிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த பொருட்களை இலங்கைக்கு வழங்க அந்நாட்டு அரசாங்கம் இணங்கியுள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -82

# இதுவும் ஒரு துயரப் பகிர்வே

**கணபதி சர்வானந்தா**

“மிகவும் கவலையான செய்தி” எனத் தலைப்பிட்டு கலாநிதி ஆறு திருமுருகன் பின்வரும் இச் செய்தியைத் தனது முகநூலிலே பதிவிட்டிருந்தார். அது இரண்டு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களின் தற்கொலைச் செய்திகள் பற்றியதாக இருக்கக் கண்டேன்.

தற்கொலை தாய் தந்தை உறவுகளை எவ்வாறு வருத்தும்.

பல்கலைக்கழக மாணவர்கள் !

எத்தனை நூல்களை படித்திருப்பீர்கள்? நண்பர்கள் எவ்வளவுபேர் உங்கள் அருகே..?

இரண்டு எதிர்கால பொறியியலாளர்களை இன்றைய தினம் இழந்து நிற்கிறோம்.

வரணி மத்திய கல்லூரியின் பெருமைசேர் மாண வனும், பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாண வனுமாகிய ந. குகதீஸ்,

யாழ் இந்துக்கல்லூரியின் பெருமைசேர் மாணவனும், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனுமாகிய வி. அபிநஜன்,

அவர்களின் இத்தனை வருட கடின உழைப்பின் அறுவடையை அவர்களும் அனுபவிக்கவில்லை. அவர்கள் குடும்பமும் அனுபவிக்கவில்லை. இந்தச் சமூகமும் அனுபவிக்கவில்லை. அவர்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போம்.

அவர்களது மரணத்துக்கான காரணம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் எத்தனையோ தடைகளை தாண்டி இவ்வளவு தூரம் முன்னேறி வந்த அந்த இளம் பொறியியல் மாணவர்களை மன ரீதியாக பலப்படுத்தி யிருக்க வேண்டியதும் சமூகத்தின் பொறுப்பு.

கல்வியோடு மன உறுதியையும், சிக்கல்களை சமாளிக்கும் வலிமையையும் சிறு வயதிலிருந்து சொல்லிக்கொடுப்பது அனைவரினதும் கடமையாகிறது.

வாழ்வின் எல்லை வரை வாழ்வோம் – வாழ வைப்போம் – என அப் பதிவு காணப்பட்டது.

உண்மையிலேயே மளனோ பலத்தை, மனத் தைரியத்தைக் கொடுக்கவல்ல திறனைச் சிறுவயதிலேயே தொடங்க வேண்டும். நாம் சிறுவர்களாக இருந்த காலத்தே அப்படியான விடயங்கள் உப கதைகளாகவும், ஆன்மிகக் கதைகளாகவும் எமக்குச் சொல்லித்தரப்பட்டன. அது மட்டுமல்லாது பாடசாலைகளில் சொல்லித்தந்தவை போக வீடுகளில் பாட்டி கதைகளாகவும் அவை சொல்லித்தரப்பட்டன. கதை சொல்லிகளாகவும் பொக்கிஷங்களாகவும் குடும்பங்களில் காணப்பட்ட பாட்டிகள் எமது சமூகத்திலே ஒழிந்துபோனதில் இருந்தே மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டதாகப் பலர் குறை கூறுகிறார்கள்.

ஒழுக்க நெறிக்குள் மாணவர்களை வைத்திருக்கும் வழிகாட்டல் நிறைந்த கல்வித் திட்டமாக இருந்த கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றமும் வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்கும் கல்வி உதவ வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொண்டிராத சமூகச் சிந்தனையுமே இது போன்ற முறைகேடான முடிவுகளை மாணவர்கள் எடுக்கக் காரணமாகின் றன.

இதனை அறிந்த சில சமூக நிறுவனங்கள் மாணவர்களுக்குரிய பொது அறிவை வளர்ப்பதற்குரிய வழிமுறையாக , அவர்களை வளர்த்துச் செம்மைப்படுத்த அவர்கள் நூல்களை வாசிக்க வேண்டும் என்ற முயற்சிகளைச் சில செயற்திட்டங்களுக்கூடாக மேற்கொண்டு வந்த போதிலும் அவை அதிகபட்ச வெற்றியைத் தராததற்குரிய முக்கிய காரணமாக, அதனை நோக்கிய அறிவைச் சமூகம் கொண்டிருக்கவில்லை என்பதனையே முதன்மைப்படுத்தலாம்.

தொழில் துறைகளைப் பெற்றுக்கொள்ள மட்டும் உதவும் ஒரு கருவியாகப் பலரால் கல்வி ஏற்றுக்கொள்ளப் பட்டதைத் தொடர்ந்து வாழ்க்கையை செவ்வனே நகர்த்திச் செல்லக் கல்வியின் அவசியம் என்ற விடயம் புறந்தள்ளப்பட்டுவிட்டது.

ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் தவறான முடிவுகளை எடுப்பதைத் தடுக்கும் வல்லமை கல்விக்கு இருக்க வேண்டும். சிந்தித்துச் செயலாற்ற இக் கல்வி முறை பயன்பட வேண்டும். வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு திருப்பு முனையிலும் சரியான முடிவைப் பெற்று நல் வழி செல்லக் கல்வி உதவவேண்டும்.

பாடசாலை நாட்களில் அதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த முடியாது போகலாம். மாணவனை ஒரு முழுமைக்குள் உள்ளடக்குவான அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றி பல் கலைக் கழகங்கள் சிந்திக்கலாம்.

எனது வாசிப்பின்படி தமிழ் நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்கள் பல புலமையாளர்களை அழைத்து மனோபலத்தை வளர்ப்பதற்குரிய வகுப்புகளையும், சந்திப்புகளையும் நடத்துகிறார்கள். அனுபவப் பகிர்வுகளாகவும் அவை திட்டமிடப்படுகின்றன. கல்விசாரக் கல்வி முறை என்ற படி பொது விடயங்களை ஆராய்ந்து அறிவு பெறுவது என்ற வகையில் அவை நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணலாம்.

எமது பல்கலைக் கழங்களிலும் இது போன்ற அனுபவப் பகிர்வகளும், திறன் வளர்ச்சிச் சந்திப்புகளும் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவற்றினூடாக மாணவர்கள் தமது பிரச்சிகைளை மனம் திறந்து பேசக் கூடியதான சூழ்நிலைகளையும் உருவாக்க வேண்டும்.மனம் திறத்து பேசினாலே பாதிப் பிரச்சினைகள் இல்லாது போய்விடும். பரீட்சைகளுக்கு மட்டும் தம்மைத் தயார்படுத்தும் கல்விமுறைகளில் இருந்து விலகி பொது அறிவினை வளர்க்கக் கூடிய வகையில் மாணவர்கள் தம்மை செம்மைப்படுத்தும் நடைமுறைகளைத் தம்மிடையே ஏற்படுத்தலாம். அதற்கான சுதந்திரம் பல்கலைக் கழக மாணவர்களுக்கு உண்டு என எண்ணுகிறேன்.

ஒரு பரந்த வெளியில் தம்மை உட்படுத்தச் சிந்திக்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாகத் தம்மை வளர்த்தெடுக்கக் கூடிய விடயங்கள் பல உண்டு. அதற்கு அதிகம் தேடல்களே புது வழிகளைத் திறக்கும் என நம்புவோமாக. •

# இந்தவார ராசிபலன் 18.06.2023 - 24.06.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 03
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பிரதமை

### மேஷம் [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நெருங்கிய நண்பர்கள் உதவியுடன் முக்கியமான சில காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பணவரவுகள் கைக்கு வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த சில சலுகைகளை உயர் அதிகாரிகளின் மூலம் பெறலாம். சொந்தத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் பெற முடியும். கூட்டுத் தொழிலில் அதிக லாபம் பெற கூட்டாளிகளுடன் கவனமாக ஆலோசிக்க வேண்டி வரும். வியாபாரத்தை மாற்றி அமைக்கத் திட்டமிடுவீர்கள்.

### ரிஷபம் [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சிறுசிறு தாமதங்கள் உண்டானாலும், உங்கள் செயல்களில் எதிர்பார்க்கும் வெற்றிக்கு குறைவிருக்காது. உத்தி யோகஸ்தர்கள், பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கப் பெறு வார்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் மனதிற்கு தெம்பளிக்கும். அலுவ லகத்தில் வீண் விவாதங்களை தவிர்ப்பது, பல சிக்கல்களில் இருந்து உங்களை பாதுகாக்கும். சொந்தத் தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்கள் திறமையால் வாடிக்கையாளர்களை கவர்வீர்கள். மூலப் பொருட்களை இருப்பு வைத்திருப்பது நல்லது.

### மிதுனம் [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

புதிய நண்பர்களைச் சந்திப்பதால் மாற்றங்களைப் பெறுவீர்கள். எதிலும் நிதானமான போக்கு அவசியம். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் புதிய திருப்பம் ஏற்படும். பொறுப்புகள் கைமாறிப் போகும். உயர் அதிகாரிகளால் பாராட்டு கிடைக்கப் பெறலாம். சொந்தத் தொழிலில் எதிர்பார்த்த லாபம் பெற அதிக முயற்சிகள் தேவைப்படும். கூட்டுத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காமல் போகக்கூடும். கூட்டாளிகளில் ஒருவர் மனவேறுபாடு காரணமாகப் பிரிந்து செல்ல நேரலாம்

### கடகம் [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உத்தியோகத்தில் எதிர்பார்க்கும் மாற்றங்களை அடைவீர்கள். அவசர காரியம் ஒன்றை செய்ய நேரிடும். பணிகளில் கவனம் இல்லாவிட்டால், உயர் அதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காவீர்கள். சொந்தத் தொழிலில் புதிய வாடிக்கையாளர் வரவினால் எதிர்பாராத வளர்ச்சியும், பணவரவும் வந்துசேரும். கூட்டுத்தொழிலில் எதிர்பாராத போட்டிகள் உருவாகி, வியாபாரத்தை பாதிக்கலாம். சாமர்த்தியத்தால் அவைகளை வெற்றி கொள்வீர்கள்.

### சிம்மம் [ மகம், பூரம், உத்திரம் 1 ]

கொடுக்கல் - வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்கள் சிலரது கோரிக்கைக்கு உயர் அதிகாரியின் ஒப்புதல் கிடைக்கும். சகப் பணியா ளர்களுடன் சுமுகமாக நடந்துகொள்வது, கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளின் தலையீடு காரணமாக, நிர்வாகத்தில் அசவுகரியம் உண்டாகும். பிரச்சினைகள் தோன்றி மறையும். இல்லத்தில் சுபகாரியம் நடத்த திட்டமிடுவீர்கள். கலைஞர்கள் பணியில் சுறுசுறுப்பாக இருப்பீர்கள்.

### கன்னி [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பழைய பிரச்சினை ஒன்று தலைதூக்கலாம். இருந்தாலும், உங்கள் முயற்சியால் வெற்றியும், அதனால் பொருளாதார மேன்மையும் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் பணியை, உயர் அதிகாரிகள் பாராட்டும் சந்தர்ப்பம் உண்டாகும். எதிர்பார்த்த காரியங்கள் இடையூறு இன்றி நடைபெறும். பணிகளில் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. வீண் பேச்சுக்களை தவிர்க்கவும். சொந்தத் தொழிலில் உற்சாகமான சூழ்நிலை இருக்கும். வர வேண்டிய பணம் தேடி வருவதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

### துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

வார முயற்சியோடு செய்யும் சில காரியங்களில் நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம். நண்பர்களின் ஒத்துழைப்பு தகுந்த சமயத்தில் கிடைத்து சில காரியங்களில் வெற்றி அடைவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் முன்னேற்றமான மாற்றங்களைச் சந்திப்பார்கள். அலுவலகம் பற்றியோ, அதிகாரிகளைப் பற்றியோ, வீண் பேச்சில் ஈடுபடவேண்டாம். சொந்தத் தொழில் நன்றாக நடைபெறும்.

### விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நினைத்த காரியங்களை எளிதில் முடித்து எதிர்பார்க்கும் ஆதாயங்களைப் பெறுவீர்கள். நீண்ட காலமாக எண்ணியிருந்த செயல் ஒன்றினை முடிக்கக் காலம் கனிந்து வரும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வுடன் இடமாற்றம் தேடி வரும். சொந்தத் தொழிலில் புதிய முறைகளைப் புகுத்த முயற்சிப்பீர்கள். கூட்டுத்தொழிலில் கூடுதலான ஆதாயம் கிடைக்கும்.

### தனுசு [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எடுத்த காரியங்கள் எதிர்பார்க்கும் வெற்றியைப் பெறும். வர வேண்டியவை தாமதமின்றி கிடைக்கும். வீடு அல்லது மனை வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. சம்பள உயர்வும், இடமாற்றமும் கிடைக்கும். சகப் பணியாளர்களுடன் சுமுகமாக உறவாடுங்கள். சொந்தத் தொழில் ஆதாயம் தருவதாக இருக்கும். கூட்டாளிகளின் ஆலோசனைப்படி புதிய தொழில் தொடங்க முயற்சி மேற்கொள்ளலாம்.

### மகரம் [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உங்கள் பணிகளின் மூலம் வரவு வந்தாலும், அதற்கு நிகரான செலவுகளும் இருக்கும். நிலம் அல்லது வீடு விற்பனையில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. கடிதப் போக்குவரத்து நிம்மதியை தரும். உத்தியோகஸ்தர்களில் சிலர் செய்த தவறினால், அலுவலகத்தில் சலசலப்பு உருவாகும். உயரதிகாரிகளின் அனுசரிப்பால் பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள். சகப் பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம்.


### கும்பம் [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நீங்கள் எடுத்துக்கொண்ட செயல்கள் சிலவற்றில் தாமதம் இருந்தாலும், முடிவில் வெற்றியை அடைவீர்கள். தென் திசைச் செய்தி தென்றலாக தேடிவரும். பிரிந்தவர்கள் உங்களைத் தேடிவர வாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வுக்காக சிறிது காலம் பொறுமை காக்க வேண்டியது அவசியம். வேலைகளில் கவனமாக இல்லாவிட்டால் கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களிடம் சுமுகமாக நடந்து கொள்வது பிரச்சினைகளைத் தவிர்க்கும்.

### மீனம் [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகளில் ஏற்படும் தாமதங்களை சவாலாக ஏற்று பணியாற்றுவீர்கள். பண வரவுகள் தள்ளிப்போகலாம். சகோதர வழி உறவுகளில் நன்மை ஏற்படும். பயணங்களால் அலைச்சலும், செலவும் உண்டாகும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அவசரமாக செய்த பணியொன்றில் ஏற்பட்ட தவறால், மனவருத்தம் வந்துசேரும். உயர் அதிகாரிகளின் விருப்பப்படி பணியை விரைந்து செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத்தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்க, சிறிது காலம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். வரவேண்டிய பணத்துக்காக அலைச்சலை சந்திக்க நேரலாம்.

# தமிழக அரசியலில் சுழன்றடித்த சூறாவளி



சென்னை மடல்
-பகவான் சிங்-

தமிழக அரசியலில் சுனாமி, வெப்பப் புயல், நில நடுக்கம் ஆகியவற்றின் ஒரு கலவை தாக்கி வருகிறது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முக்கிய புலனாய்வு அமைப்பான அமலாக்கத் துறையினர், தமிழகத்தின் சக்தி வாய்ந்த அமைச்சரான செந்தில் பாலாஜியின் வீட்டிற்குச் செவ்வாயன்று (ஜூன் 13) வந்ததிலிருந்து புயல் வீசத் தொடங்கியது. அப்போது தான் தனது காலை நடைப் பயிற்சியிலிருந்து வந்த அமைச்சரின் மீது, ஊழல், கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல் முதலிய நிதி மோசடிக் குற்றங்கள் சாட்டப்பட்டன. அவரைக் குளிக்கக் கூட அனுமதிக்காமல் அமலாக்கத் துறையினர் பல மணி நேரங்கள் தொடர் விசாரணை நடத்தியதில் அவர் உடல், மன ரீதியாக உளைச்சலை எதிர்கொண்டார் என்று கூறப்படுகிறது.

அதிக நெஞ்சு வலி ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் கூறியதால், அவர் ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு புதனன்று பொழுது புலர்வதற்கு முன் அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் நெஞ்சைப் பிடித்துக்கொண்டிருப்பதும் மருத்துவமனைக்குச் செல்ல அவர் காரில் வலுக்கட்டாயமாகப் படுக்க வைக்கப்பட்டதும் வீடியோவாக வைரலானது. தன்னைக் காரில் ஏற்ற முயன்ற ஒருவரை அவர் காலால் எட்டி உதைப்பதையும் அவர் காரின் பின் சீட்டில் படுத்திருப்பதையும் காட்டும் அந்த வீடியோ பரபரப்பாகப் பரவியது. அமைச்சர் கைது செய்யப்பட்டது பற்றியும் அவர் மீதான நடவடிக்கைகளுக்கு அமலாக்கத் துறை கூறும் காரணங்களையும் எனது ஈழநாடு வாசகர்கள் படித்திருக்கக்கூடும்.

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக ஆட்சிக் காலத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த போது, அத்துறைப் பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்த பலரிடமிருந்து செந்தில் பாலாஜி லஞ்சம் பெற்று ஏமாற்றியதாக அமலாக்கத் துறை குற்றம் சாட்டுகிறது. அமைச்சரின் வீடு, தமிழகத் தலைமைச்

செயலகமான புனித ஜோர்ஜ் கோட்டையில் உள்ள அவரது அலுவலக அறை, இன்னும் அவருடன் தொடர்புடைய சில இடங்கள், அவருக்கு நெருக்கமானவர்களின் இடங்கள் எனப் பல சோதனைகளுக்குப் பிறகு அமலாக்கத்துறை கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஆனால், நெஞ்சு வலி காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால், மேல் விசாரணைக்காக அவரைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியவில்லை. மருத்துவமனையில் அவருக்கு ஆஞ்சியோகிராம் செய்யப்பட்டு, பை-பாஸ் அறுவைச் சிகிச்சை செய்யப்படவேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள்.

அமலாக்கத்துறை நடவடிக்கையையடுத்து ஸ்டாலின் செய்த சிம்ம கர்ஜனையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். கைதைத் தொடர்ந்து, திமுக முதல்வர் ஒரு தொலைக்காட்சி அறிக்கையில், பாஜக அல்லாத மாநில அரசுகளை மிரட்ட மத்திய மோடி அரசு தனது கட்டுப்பாட்டில் உள்ள அமலாக்கத் துறை, வருமான வரித் துறை மற்றும் மத்தியப் புலனாய்வுப் பிரிவு(மிகக் கடும் குற்றங்களைப் புலனாய்வு செய்யும் மற்றொரு மத்திய அமைப்பான சிபிஐ) ஆகியவற்றை ஏவி விடும் போக்கின் தொடர்ச்சியே இது என்று குறிப்பிட்டிருந்தார். “ஒரே ஆயுதத்தை வெவ்வேறு மாநிலங்களுக்கு வெவ்வேறு வடிவங்களில் மத்திய அரசு பயன்படுத்தி வருகிறது” என்றார் அவர். “கருத்தியல் மூலமாக எதிர்கொள்ள முடியாமல், எதிர்க்கட்சித் தலைவர்களை எதிர்க்க இவர்கள் கையிலெடுக்கும் ஆயுதம் இந்தச் சோதனைகள். பாஜக ஆளும் உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் குஜராத்தில் இது போன்ற எந்தச் சோதனைகளும் மேற்கொள்ளப்படாது” என்று கூறிய ஸ்டாலின், பாஜக மத்தியில் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், பத்தாண்டுகளில் நாடு முழுவதிலும் மொத்தமாக வெறும் 112 அமலாக்கத் துறைச் சோதனைகளே நடைபெற்றன என்றும் 2014 மே மாதம் மோடி பொறுப்பேற்ற பிறகு, சுமார் 3000 சோதனைகள் நடந்துள்ளன என்றும் இவற்றில் 0.05% தான் குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் எஞ்சிய அனைத்தும் மாநில அரசுகளை மிரட்டல் உருட்டல் செய்யவே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இப்படி, சோதனை மிரட்டல்களுக்கு உட்பட்டவர்கள், பாஜவில் சேர்ந்துவிட்டால், அவர்கள் புனிதர்களாகிவிடுகிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு நமது அதிமுகவே ஒரு உதாரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு, அதிமுகவைத் தனது கொத்தடிமைக் கூடாரமாக மாற்றவே அவர்கள் மீது சில சோதனைகளை ஏவிவிட்டதாகவும் கர்ஜித்திருக்கிறார் ஸ்டாலின். “அது போன்ற அடிமைக் கட்சியன்று திமுக. சுவற்றில் அடித்த பந்து மீண்டும் வந்து முகத்தில் அடிப்பது போலத் தான் திமுக




## செந்தில்பாலாஜின் கைதினால் கடும் கோபமடைந்த ஸ்டாலின்

தொண்டர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். மிரட்டிப் பணிய வைக்க நினைத்தால், குனிய மாட்டோம், நிமிர்ந்து நிற்போம், கொள்கைக்காகக் கடைசி வரை போராடுவோம், திமுகவைச் சீண்டிப்பார்த்தால் தாங்க மாட்டீர்கள், எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும். இது மிரட்டலல்ல, எச்சரிக்கை. எதையும் தாங்கும் இதயம் உண்டு இதையும் தாங்கிக் கடந்து செல்வோம், நாற்பது தொகுதிகளிலும் வெல்வோம் (2024 பாராளுமன்றத்தேர்தலில்)” என்று முழங்கியிருக்கிறார்.

ஸ்டாலினின் வெறுப்புக்குள்ளானவரும் பாஜக மாநிலத் தலைவருமான அண்ணாமலை முதல்வரின் உரைக்குப் பதிலடி கொடுத்துள்ளார். “ஜெயலலிதா ஆட்சியின்போது, செந்தில் பாலாஜியின் ‘பணத்துக்குப் பணி’ என்ற மோசடி விவகாரத்தை எழுப்பி அதற்கான நடவடிக்கையைக் கோரியவர் இதே ஸ்டாலின் தான். இப்போது அதே வழக்கில் அதே மனிதரை ஸ்டாலின் ஆதரிப்பது ஏன்? “ என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை மிரட்ட மோடி அரசாங்கம் இந்த அமைப்புகளைப் பயன்படுத்துவதில்லை என்றும் மாறாக, தமிழகத்தில் பாஜக தொண்டர்களை மிரட்ட, ஸ்டாலின் தான் மிரட்டல் தொனியில் சொற்களைப் பயன்படுத்தி ஒரு முதல்வரின் தகுதிக்குப் பொருந்தாத விதத்தில் பேசியுள்ளார் என்றும் கூறிய அண்ணாமலை, பாஜகவைச் சேர்ந்த பலர் இம்முறையில் மிரட்டப்பட்ட நிகழ்வுகள் ஏற்கெனவே நிகழ்ந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

“பாஜகவின் எந்தத் தொண்டரையாவது ஸ்டாலின் அரசாங்கம் கைது செய்து பார்க்கட்டும். அனைத்துத் தொண்டர்களும் தெருவில் இறங்கிப் போராடுவார்கள். கைது செய்து அடைக்க உங்கள் சிறைகள் போதாது. இது பழைய பாஜக இல்லை, இப்போது திருப்பிக் கொடுப்போம்” என்று அண்ணாமலை செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். வரும் நாட்களில் மேலும் கைதுகள் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டார். திமுகவிற்குப் பண மழை கொட்டச் செய்யும் கருவியாக நீண்ட காலமாக செந்தில் பாலாஜி இருப்பதாகத் தொடர்ந்து குற்றம் சாட்டிவரும் அவர், முதல்வரும் மற்ற கேபினட் அமைச்சர்களும் மட்டுமல்லாமல், முதல்வரின் மருமகன் சபரீசனும் கூட அவசர அவசரமாக மருத்துவமனை சென்று அவரைப் பார்த்தது ஏன் என்ற கேள்வியையும் எழுப்பினார்.

ஜூன் 11 அன்று, மோடியின் ஒன்பதாண்டு காலச் சாதனை விளக்கக்கூட்டமொன்றில் உரையாற்ற வேலூர் வந்திருந்த அமித்ஷா அண்ணாமலையை வெகுவாகப் புகழ்ந்தார்.

ஒன்பது ஆண்டுகளில் தமிழக மக்களுக்காக பாஜக அரசு என்ன செய்துள்ளது என்று ஸ்டாலின் பகிரங்கமாக எழுப்பிய கேள்விக்குத் தான் விடை கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

முந்தைய காங்கிரஸ் அரசை விட, குறிப்பாக, திமுக அங்கம் வகித்த காங்கிரஸ் அரசை விட, மோடியின் அரசு தமிழகத்துக்குக் கொண்டு வந்துள்ள நல்ல திட்டங்கள் குறித்து அமித்ஷா இட்ட நீண்ட பட்டியலை இங்கே மீண்டுமொரு முறை குறிப்பிடுவது ஈழநாடு வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்காது.

திமுகவையும் காங்கிரஸையும் “2ஜி, 3ஜி, 4ஜி” சக்திகள் என்று வர்ணித்த அமித்ஷா, இது 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான முறைகேடு(மன்மோகன் சிங் ஆட்சியில் திமுகவின் ஆ ராசா தொலைதொடர்புத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், கருணாநிதி மகள் கனிமொழியுடன் சேர்ந்து கைது செய்யப்பட்டார்) மட்டுமன்று என்றும் 2ஜி என்பது காலம் சென்ற முரசொலி மாறனின் இரண்டாவது தலைமுறையையும் 3ஜி என்பது கருணாநிதியின் மூன்றாவது தலைமுறையையும் 4 ஜி என்பது காந்தி குடும்பத்தின் நான்காவது தலைமுறையையும் குறிப்பிடும் என்றும் அவர்களின் வாரிசு அரசியலின் ஊழலையும் சுட்டிக்காட்டினார். வரும் 2024 மக்களவைத் தேர்தலிலும் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் பாஜகவின் பிரச்சாரத்திற்கு முக்கிய கோஷமாக இந்த ‘2ஜி,3ஜி,4ஜி’ முழக்கம் இருக்கக்கூடும்.

கழகங்களின் ஆதிக்கத்தை ஒடுக்க பாஜக வகுத்த காவி திராவிடத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது நடக்கும் நிகழ்வுகளின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. பாரம்பரிய இந்துத்வா சித்தாந்தத்துடன், கழகங்களிடம் கற்ற களப் போராட்டம் இரண்டும் சேர்ந்த கலவையைக் கொண்டு புதிதாக சமூக-அரசியல் வியூகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. “இது பழைய பாஜக இல்லை, இப்போது நாங்கள் திருப்பி அடிப்போம்” என்ற அண்ணாமலையின் முழக்கத்தை நினைவு கூருங்கள். அந்தக் கால பாஜக என்பது படித்த, மென்மையான போக்கு கொண்ட உயர் சாதியினரின் கட்சி என்று கருதப்பட்டது. கழகங்கள் மட்டுமல்லாமல், பெரும்பாலான ஊடகங்களாலும் சாதுவான பிராமணர்களின் கட்சி என்று ஏளனம் செய்யப்பட்டது. ஆனால் இன்று, கட்சியில் பெரும்பாலும் பிற்பட்ட வகுப்பு மற்றும் தலித் இனத்தைச் சேர்ந்த ஆண்கள் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் கழகங்களையும் அவற்றின் அரசாங்கங்களையும் நேரடியாக எதிர்க்கச் சற்றும் தயக்கம் காட்டமாட்டார்கள். தங்கள் அரசியல் எதிரிகளைத் தாக்குதலை எதிர்கொள்ள, கத்தி, கோடரி எடுக்கவும் இவர்கள் அஞ்சமாட்டார்கள்.

பரபரப்பான தமிழக அரசியல் சூழலில் அண்ணாமலை ஒரு புதிய அஸ்திரத்தை எடுத்துள்ளார். திமுக-அதிமுக ஆகிய இரு கழகங்களும் இணைந்து ஊழலில் திளைத்துத் தமிழ்நாட்டைச் சீரழித்துள்ளதாக அண்மையில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் அவர் குற்றம் சாட்டினார். தேர்தல் கூட்டணியில் இருந்து கொண்டே அதிமுக தலைமை குறித்து இப்படி ஒரு கருத்தைக் கூற எப்படி முன்வந்தார் என்று எடப்பாடி பழனிச்சாமி- ஓ பன்னீர்செல்வம் என்ற இரு முன்னாள் முதல்வர்களும் அவரை எதிர்த்து, ஒன்றாகக் குரலெழுப்பினர். அண்ணாமலையின் குற்றச்சாட்டு அவரது அரசியல் முதிர்ச்சியின்மையைக் காட்டுகிறது என்று எடப்பாடி விமர்சித்திருக்கிறார். (தேர்தல் பிரசாரத்தின் போது கூட்டணிக்கு இது

(18ஆம் பக்கம் பார்க்க)

செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, உடனடியாக, தமிழகத்தில் வழக்குகளை விசாரிக்க சிபிஐ-க்கு வழங்கப்பட்டிருந்த ‘பொது அனுமதி’யை தி.மு.க அரசு திரும்பப்பெற்றது.

இதற்கு எதிர்வினையாக, அண்ணாமலை, ஸ்டாலினுக்கு இப்போது தனது முறை வரும் (கைது செய்யப்படுவதற்கு) என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்று ருவீட் செய்துள்ளார். முந்தைய திமுக ஆட்சியில்(கருணாநிதி முதல்வராக இருந்தபோது) மெட்ரோ ரயில் திட்டத்தில் ஒரு ஒப்பந்தத்திற்கு ஆதரவாக 200 கோடி ரூபாய் வாங்கியிருப்பதாக ஸ்டாலின் மீது தான் ஏப்ரலில் வைத்திருந்த குற்றச்சாட்டை அவர் நினைவு கூர்ந்தார். “சிபிஐ தனது வீட்டுக் கதவை விரைவில் தட்டும் என்று தமிழக முதல்வர் அச்சம் கொண்டுள்ளதால் மாநில அரசு அனுமதியின்றித் தமிழகத்தில் சிபிஐ நுழைவதைத் தடை செய்யும் அதீத நடவடிக்கையை எடுத்துள்ளார்” என்று ருவீட் செய்துள்ளார் அண்ணாமலை, அச்சுறுத்தும் வகையில். பாஜக அல்லாத பல முதல்வர்களும் அண்மைக் காலத்தில் தங்கள் மாநிலங்களில் சிபிஐ விசாரணைக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியைத் திரும்பப் பெற்றுள்ளனர்.

# தேர்தல்களில் நம்பிக்கை இழந்தது அரசாங்கமா, மக்களா?



வீரகத்தி தனபாலசிங்கம்

நாட்டு மக்களின் மனநிலையை உண்மையில் புரிந்துகொண்டவர்களாகத்தான் எமது அரசியல்வாதிகள் அண்மைக்காலமாக தேர்தல்களைப் பற்றி பேசுகிறார்களா என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை. தேர்தல்கள் வேண்டும் என்று கேட்பவர்களுக்கும் தேர்தல்கள் தற்போதைக்கு வேண்டாம் என்று கூறுபவர்களுக்கும் இது பொருந்தும்.

இரு வாரங்களுக்கு முன்னர் நுவரேலியாவில் நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய சட்ட மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களில் இளைஞர்கள் உட்பட அதிகப்பெரும்பான்மையானவர்கள் தேர்தல்களில் மாத்திரமல்ல, அரசியல் கட்சி முறைமையிலும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றும் சகல கட்சிகளும் சேர்ந்து பெறக்கூடிய வாக்குகளும் கூட மொத்த வாக்குகளில் ஐம்பது சதவீதத்தை தாண்டப் போவதில்லை என்றும் கூறியிருந்தார்.

பொருளாதார நெருக்கடி, அதன் விளைவான மக்கள் கிளர்ச்சி மற்றும் அதற்கு பின்னரான அரசியல் நிகழ்வுப்போக்குகள் குறித்து மக்களின் மனநிலையை அறிவதற்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்திருக்கக் கூடிய உள்ளூராட்சி தேர்தல்களுக்கு நிதி நெருக்கடியை காரணம் காட்டி இடையறாது இடையூறுகளைச் செய்து காலவரையறையின்றி அவற்றை தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை அரசாங்கம் உருவாக்கிய நிலையில், மக்கள் தேர்தல்களை விரும்பவில்லை என்று ஜனாதிபதி எவ்வாறு கண்டறிந்துகொண்டாரோ தெரியவில்லை.

மக்களுக்கு தேர்தல்களில் அக்கறை இல்லை என்று ஜனாதிபதி கூறிய அந்த மகாநாட்டில் உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணை செய்யும் உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களும் கலந்துகொண்டார்கள். விக்கிரமசிங்கவைப் போன்று இவ்வாறு வேறு எந்த ஜனாதிபதியும் கருத்து வெளியிட்டதாக நாம் அறியவில்லை.

ஆனால், ஜனாதிபதி தேர்தலைப் பற்றி மாத்திரம் விக்கிரமசிங்கவும் அவரது ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல்வாதிகளும் அடிக்கடி பேசுகிறார்கள். ஜனாதிபதி தேர்தலை மாத்திரம் மக்கள் விரும்பக்கூடும் என்று அவர்கள் நினைக்கிறார்களோ என்னவோ?

கடந்த வாரம் கூட ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்தன அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். அதற்கான சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது என்றும் தங்களது கட்சியின் வேட்பாளரான ஜனாதிபதி விக்கிரமசிங்கவை பல கட்சிகள் ஆதரிக்கும் என்றும் கூறியிருந்தார். உரிய காலத்துக்கு முன்கூட்டியே அந்த தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி விரும்புகிறார் என்பது ஏற்கெனவே தெரிந்ததே.

கடந்த வருடம் ஜூலையில் பதவியில் இருந்து விலகிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் எஞ்சிய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருட முற்பகுதியில் நடத்துவதற்கு விக்கிரமசிங்கவை அரசியலமைப்பு அனுமதிக்காது. மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியே தனது பதவிக்காலத்தின் நான்கு வருடங்கள் நிறைவடைந்த நிலையில் உரிய காலத்துக்கு முன்கூட்டியே - அதுவும் அவர் இரண்டாவது பதவிக் காலத்துக்கு மக்களின் ஆணையை பெறவிரும்பும் பட்சத்தில் - தேர்தலை நடத்த முடியும். பதவி விலகிய அல்லது மரணமடைந்த ஒரு ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக்காலத்துக்கு பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதிக்கு அந்த அதிகாரத்தை அரசியலமைப்பு வழங்கவில்லை. இது பற்றி ஏற்கெனவே பல தடவைகள் கூறப்பட்டிருக்கிறது.

அதனால், அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து பாராளுமன்றத்தினால் தெரிவாகும் ஜனாதிபதியும் உரிய காலத்துக்கு முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு வகை செய்வதற்கு விக்கிரமசிங்கவுக்கு யோசனை இருப்பதாக கூறப்பட்டது. பாராளுமன்றத்தில் அதை நிறைவேற்றுவதற்கு தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுக்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு தேவை.

எதிர்க்கட்சிகள் அத்தகைய ஆதரவை தருவது குறித்து முதலில் சந்தேகங்கள் இருந்தபோதிலும், தற்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை அரசாங்கம் கொண்டு வந்தால் எதிர்க்கட்சிகள் ஆதரவை வழங்கக்கூடிய சாத்தியம் இருப்பதாக தோன்றுகிறது.

அடுத்த வருடத்துக்கு காத்திராமல் சாத்தியமானால் இவ்வருடமே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கட்டும் என்று



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கூறியிருக்கிறார். கடந்த வாரம் அவரது ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தேவையானால் முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு வகைசெய்யக்கூடிய சட்டங்களுக்கு பிரேமதாசவினதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஆதரவை வழங்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான சூழல் உருவாக்கப்பட்டு வருகிறது என்ற ருவான் விஜேவர்தனவின் அறிவிப்பின் அர்த்தம் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது என்பதாக இருக்கலாம். ஆனால் ஜனாதிபதியைப் பொறுத்தவரை தன்னால் வெற்றி பெறக்கூடியதாக பல அரசியல் கட்சிகளின் ஆதரவு கிடைக்கக்கூடிய- தனக்கு வாய்ப்பான சூழலை உறுதிசெய்யாமல் விபரீதமான அரசியல் விளையாட்டில் இறங்குவார் என்று எதிர்பார்க்கமுடியாது.

பொருளாதார நிலைவரத்தில் ஏற்பட்டு வருகின்ற ஒப்பீட்டளவிலான மேம்பாடு காரணமாக நாட்டு மக்கள் மத்தியில் தனக்கு குறிப்பிடத்தக்க ஆதரவு வளர்ந்து வருவதாக ஜனாதிபதி நம்புகிறார். ஆனால், பொருளாதார நெருக்கடியை தணிப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்காக மாத்திரம் மக்கள் அமோகமாக வாக்களித்து அவரை அடுத்த தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாக்கிவிடுவார்கள் என்று கூறமுடியாது. தேர்தல்கள் என்று வரும்போது அதில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துவது வழமை. கட்சி அரசியல் அந்த காரணிகளில் முக்கியமான ஒன்று.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை வெறுமனே தனது ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது குறித்து நினைத்துப் பார்க்க முடியாது. இன்று தென்னிலங்கையின் முக்கியமான அரசியல் கட்சிகளில் மிகவும் குறைந்த வாக்கு வங்கியையும் பலவீனமான கட்சிக் கட்டமைப்புகளையும் கொண்டது என்றால் அது ஐக்கிய தேசிய கட்சியாகவே இருக்கமுடியும்.

ஆனால், பாராளுமன்றத்தில் தங்களுக்கு ஒரேயொரு ஆசனமே இருக்கின்ற போதிலும், தங்கள் தலைவர் ஜனாதிபதியாக ஆட்சியதிகாரத்தில் இருப்பதால், ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல்வாதிகள் சிலர் அரசாங்கப் பேச்சாளர்கள் போன்று நடந்துகொள்வதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தனது கட்சியை கணிசமான அளவுக்கு மீளக்கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை விக்கிரமசிங்கவுக்கு கூட இருப்பதாக தெரியவில்லை. அதனால் தான் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது வங்குரோத்து நிலையில் இருந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்கவே தவிர, அரசியல் செய்வதற்கு அல்ல என்று அடிக்கடி கூறுகிறார்.

ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரிக்கக் கூடும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ராஜபக்சாக்களைப் பொறுத்தவரை கடந்த கால தவறுகளுக்காக தங்களை பொறுப்புக்கூற வைக்காத ஒரு அரசாங்கமே மீண்டும் பதவிக்கு வருவதை உறுதிசெய்யக்கூடிய வியூகங்களையே அவர்கள் வகுப்பார்கள். அதற்கு இன்றைய அரசியல் தலைவர்களில் விக்கிரமசிங்கவை தவிர அவர்களுக்கு பொருத்தமான தெரிவு இருக்க முடியாது.

ஆனால், பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தப்படுவார் என்று அவர்கள் இப்போது பேசுகிறார்கள். அந்த வேட்பாளர் ஒரு ராஜபக்சவை தவிர வேறு எவருமாக இருக்கமுடியாது. தங்களது குடும்ப அரசியல் ஆதிக்கத்தை மீட்டெடுக்கும் கனவில் ராஜபக்சாக்கள் இருக்கிறார்கள்.

மக்கள் தங்களைப் பற்றி எத்தகைய எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் பொதுஜன பெரமுன மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க, தற்போது ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்துவருவதாக கூறப்படும் நிலையில் அரசியல் நெருக்கடி ஏற்படுமாக இருந்தால் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு அவர் போகக்கூடிய சாத்தியம் இருப்பதாக குறிப்பாக பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்துவரும் நிலையில் ஆறு மாதங்களில் திடீர்ப் பொதுத்தேர்தல் ஒன்று வரலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கடந்த வாரம் கூறினார்.

“நாமல் ராஜபக்சவை தற்போது முன்னரங்கத்துக்கு கொண்டுவருவதற்கு ராஜபக்ச குடும்பம் அக்கறை காட்டக்கூடும். ஆளும் தரப்பில் இருந்து எதிர்த்தரப்புக்கு அவரை மாறச்செய்து எதிர்க்கட்சி தலைவராக்குவதற்கு அவர்கள் முயற்சிப்பார்கள். அவ்வாறு நிகழும்பட்சத்தில் ஜனாதிபதி தனிமைப்படுத்தப்பட்டு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை இழக்கும் நிலை உருவாகும். அதனால் ஆறு மாத காலத்திற்குள் பொதுத்தேர்தலுக்கு போகவேண்டிய நிர்ப்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்படும்” என்று மரிக்கார் கூறினார். தான் கூறுவது நிச்சயம் நடக்கும். குறித்து வையுங்கள் என்று வேறு அவர் குறிப்பிட்டார். இதே கருத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த பிரதி தலைவரான லக்ஸ்மன் கிரியெல்லவும் கூறினார்.

அதேவேளை கடந்த வாரம் ஜனாதிபதியுடனான சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச சகிதம் கலந்துகொண்ட பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் தங்களது கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் இருப்பதாகவும் அத்தகைய வேறுபாடுகள் இல்லாத விவகாரங்களில் தீர்மானங்களை எடுப்பதில் மாத்திரம் ஜனாதிபதியுடன் இணங்கிப் போக முடியும் என்றும் கூறினார்.

எந்த தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் மீண்டும் தங்களால் ஆட்சிக்கு வரமுடியும் என்றும் ராஜபக்சாக்கள் வீறாப்பு பேசினாலும், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுப்பதில் தாங்கள் எதிர்நோக்கக் கூடிய சிக்கல்களை அவர்கள் நன்கு அறிவார்கள்.


இவ்வருட தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகள் சகலதுமே ஐக்கிய மக்கள் சக்தியும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுமே மக்கள் ஆதரவில் முன்னிலையில் இருப்பதையும் பொதுஜன பெரமுனவினதும் ஐக்கிய தேசிய கட்சியினதும் செல்வாக்கு மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்ததையும் வெளிக்காட்டின. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு எடுத்த நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் இடையூறுகளைச் செய்ததற்கு இதுவே முக்கிய காரணம்.

உள்ளூராட்சி தேர்தல்களையோ, மாகாணசபை தேர்தல்களையோ அல்லது பாராளுமன்ற தேர்தலையோ நடத்தினால் ஏற்படக்கூடிய பின்னடைவுக்கு பிறகு ஜனாதிபதி தேர்தலுக்கு முகங்கொடுப்பதில் உள்ள பிரச்சினையை ஜனாதிபதி நன்கு புரிந்துகொண்டுள்ளார். அதனால் தான் வேறு எந்த தேர்தலிலும் அக்கறை காட்டாமல் ஜனாதிபதி தேர்தல் ஒன்றைப் பற்றி மாத்திரமே அவர் பேசுகிறார். அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக வேறு எந்த தேர்தலும் நடத்தப்படக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால், பொதுஜன பெரமுனவுடன் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் எதிர்பாராத வகையில் நிலைவரத்தை மாற்றிவவிடவும் கூடும். இரு தரப்பினரும் தங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை உணர்ந்தவர்களாக சஞ்சலமான அரசியல் சகவாழ்வை தற்போதைக்கு தொடருவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

மாகாணசபை தேர்தல்களை முதலில் வடக்கிலும் கிழக்கிலும் பிறகு கட்டங்கட்டமாக ஏனைய

(18ஆம் பக்கம் பார்க்க)

# தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சி பாடசாலைகளின் தோல்வியா?



கந்தையா அருந்தவபாலன்

யாழ் மாவட்ட அரச அதிபர் தனியார் கல்வி நிலையங்களுக்கான(Tuition Centers) காலவரையறைகளை அறிவித்ததைத் தொடர்ந்து அந்நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் மீண்டும் எழுந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. வழமை போலவே சிறார்களின்உடல்,உள ஆரோக்கியத்தையும் ஆளுமையான இளையோர் சமூகத்தையும் விரும்புவோர் தனியார் கல்விநிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்மறையான கருத்துக்களையும், அந்நிலையங்களினால்நன்மை பெறுவோர் நேர்மறைக் கருத்துக்களையும் வெளிப்படுத்தி வரும் அதேவேளை இதனுடன்நெருங்கிய தொடர்புடைய கல்வித் துறை சார்ந்தவர்களோ அதற்கும் தமக்கும் எந்தத் தொடர்பும்இல்லாதவர் போல் காணப்படுகின்றனர்.தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களுக்கு அவசியமானவைதானா? அவசியமானால் யாருக்கு, எப்போது அவசியம்? அவற்றினால் ஏற்படக் கூடிய சாதக, பாதகவிளைவுகள் எவை? அந்நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிமுறைகள் தேவையா? போன்றகேள்விகளுக்கு நாம் விடை காண வேண்டுமாயின் நாம் பாடசாலைகளின் பலம், பலவீனம் பற்றி அறிவதுஅவசியமாகும். ஏனெனில் தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைக் கல்வியையே வழங்கி வருவதுடன்ஒரு காலத்தில் அவை பாடசாலைக் கல்விக்கான குறை நிரப்பிகளாக இருந்து இன்று பதலீடுகளாக மாறிவிட்டது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் பாடசாலைச் செயற்பாடுகளுக்கு சவாலாகவும் இருந்துவருவதை அவதானிக்க முடிகிறது.ஒப்பீட்டு ரீதியில் பாடசாலைகளில் பௌதிக, ஆளணி வளங்களுடன் கல்விக்கான நேரமும் பன்மடங்கு உயர்வாக இருந்தபோதும் அதே கல்வியை மீளவும் கற்க மாணவர்கள்ஏன் தனியார் கல்வி நிலையங்களை நாடுகிறார்கள் என்பது பாடசாலகளின் பலவீனத்துடன் பெரிதும்தொடர்புபட்டதொன்றாகவே பார்க்கப்படுகிறது.பாடசாலைகளின் பலவீனம் என்பது தனியே பாடசாலையுடன் மட்டும் தொடர்புபட்ட ஒன்று அல்ல. அது நாட்டின் கல்வி முறைமையுடனும்அரசியல்,நிர்வாகக் கட்டமைப்புகளுடனும் சமூக எதிர்பார்ப்புகளுடனும் நெருங்கிய தொடர்பு உடையது. ஆனால் தொடர்புடைய சகல தரப்பினர் விடும் தவறுகளையும் சேர்த்துப் பாடசாலைகளே சுமக்கின்றன.

மாணவர்கள் பாடசாலைக் கல்வியைப் பெறத் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்வது என்பது பாடசாலை குறித்த தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யவில்லை என அவர்கள் எண்ணுவது அல்லது உண்மையில் பூர்த்தி செய்யாமலே விடுவது என்பதனாலாகும்.இத்தேவை தொடர்பாக ஆராயும்போதுவகுப்புகளின் தரங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஒன்றுக.பொ.த சாதரண தரமும் அதற்குக்கீழானவையும். மற்றது க. பொ.த உயர்தரம். ஏனெனில் இரு வகுதிகளிலுமுள்ள மாணவர்க்கானகல்விக்கான தேவை வேறானவை. சாதாரண தரம் மற்றும் அதற்குக் கீழானவைக்கான கல்விபோட்டிக்குரிய ஒன்றல்ல. (தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை போட்டிக்குரியது என்றாலும் அதுகூடவிமர்சனத்துக்குரியதாகவே பார்க்கப்படுகிறது.) அதாவது தரம் பத்து வரையான பரீட்சைப் பேறுகள்வெறும் மதிப்பீடுகளாக இருப்பதுடன் தரம் பதினொன்று பொதுப் பரீட்சைப் பேறுகள் உயர் தரத்துக்குச்செல்வதற்கும் கற்கைப் பிரிவுகளைத் தெரிவதற்கும் அடிப்படையாக அமைகின்றன. சாதாரண தரப்பரீட்சைப் பேறுகளை மட்டும் கொண்டு உயர்தரக் கற்கைப் பிரிவுகளைத் தேர்ந்தெடுப்பது கூட தவறாக அமைவதுண்டு. எனவே உண்மையில் இத்தரங்களிலுள்ள மாணவர்களுக்கு தனியார் கல்வி அவசியமாஎன்ற நியாயமான கேள்வி எழுவது இயல்பு. ஏனெனில் கிராமம் நகரம் என்ற வேறுபாடுகளின்றி எல்லாப் பாடசாலைகளிலும் எல்லாப் பாடங்களுக்கும் இன்று போதிய, தகுதியான ஆசிரியர்கள் உள்ளனர். அத்துடன் அத்தரங்களுக்கான பாட உள்ளடக்கங்களும் கடினத்தன்மையும் குறைவாகும். இதனால் ஆரம்பத்திலிருந்து பாடசாலைக் கல்வியை ஒழுங்கான முறையில் தொடரும் எந்தவொரு சாதாரணமாணவனுக்கும் மேலதிக தனியார் கல்வி நிலையங்கள் அவசியமில்லை.மீத்திறன் குறைந்த ஒருசிலமாணவர்க்கும், ஒருசில பாடங்களில் குறிப்பாகக் கணிதம்,ஆங்கிலம் போன்றவற்றில் கூடிய கரிசனைதேவைப்படும் மாணவர்களுக்கும் மேலதிக கற்றல் அவசியப் படலாம். அவர்களுக்குக் கூட இன்று பெரும்பாலான பாடசாலைகளில் மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.உண்மையில் இத்தரங்களிலுள்ள மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு அவசியமாகத் தேவைப்படுபவை தனியார்கல்வி நிலையங்களன்று. பதிலாக பாடசாலைகள் தமது வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலைமேம்படுத்து தல், மாணவர்கள் தாம் கற்றவற்றை மீள்பார்வை செய்தலும் பயிற்சிகளும், பெற்றோர்கள்தம்பிள்ளைகளின் கற்றலுக்கான சூழ்நிலையைப் பேணுதல் என்பவை மட்டுமே.



சாதாரண தரம் வரையான கல்விக்கும் உயர் தரக்கல்விக்கும் இடையில் பல விடயங்களில் வேறுபட்டநிலைமகள் காணப்படுகின்றன. உயர் தரப்பரீட்சை என்பது இடைநிலை மாணவர்க்கான பொதுப் பரீட்சை எனக் குறிப்பிடப்பட்டாலும் அது அடிப்படையில் ஒரு போட்டிப் பரீட்சையாகவே காணப்படுகிறது. ஏனெனில் இலங்கையில் பல்கலைக் கழகங்கள் உட்பட உயர் கல்வி நிலையங்கள் மற்றும் தொழில் சார்கல்வி நிலையங்களுக்கான மாணவர் உள்ளீர்ப்பானது இப்பரீட்சைப் பேறுகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக் கழகத்துக்குத் தகைமை பெறும் மாணவர்களில் நாலிலொருவருக்கேவாய்ப்புக் கிடைக்கிறது. அதிலும் பொறியியல், மருத்துவம் போன்ற மகத்துவமிக்க துறைகளுக்கானவரையறுக்கப்பட்ட அளவிலான இடங்கள் மிக உயர்வான புள்ளிகள் பெறுவோருக்கே வழங்கப்படுகின்றன. இலங்கையில் அரச பல்கலைக் கழகங்களே உயர்கல்விக்கான பிரதானவழங்குநராக உள்ளன.தனியார் பல்கலைக் கழகங்கள் போதிய வளர்ச்சி பெறாமை, அவற்றுக்கான உயர்கட்டணங்கள், அவை தொடர்பான எதிர்மறையான அபிப்பிராயங்கள், மருத்துவம் போன்ற சிலதுறைகளுக்கு அனுமதியின்மை போன்ற பல காரணிகள் அரச பல்கலைக்கழகத் தெரிவுக்கான போட்டியை மேலும் அதிகரிக்கின்றன.

மேலும் இலங்கையின் கல்வி முறைமை முழுக்க முழுக்க பரீட்சை மையமானதொன்று. கல்வியியலாளர்களின் பிரபல வாசகங்களான அறிவு, திறன், மனப்பாங்கு எல்லாமே இங்குபரீட்சைகளைச் சுற்றி மையம் கொண்டதாகவே உள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல பெற்றோர், ஆசிரியர்கள் கல்வி நிர்வாகிகள் எல்லோருமே அதை நோக்கித்தான் ஓடவேண்டியுள்ளனர். பாடத்திட்டங்களில் எத்தகைய செருகல்களைச் செய்தபோதிலும் இறுதியில் எல்லாவற்றையும்தீர்மானிப்பது எழுத்துப் பரீட்சைப் பேறுகள் மட்டுமே. இங்கு பரீட்சைகளில் தோற்பவர்களுக்கு மட்டுமல்லவெற்றி பெறுபவர்களில் கணசமானோர்க்குக் கூட அவர்கள் பயணித்த பாதை அத்துடன் மூடப்பட்டுவிடுகிறது. அவர்கள் தொடர்ந்து பயணிப்பதற்குப் பொருத்தமான மாற்றுப் பாதைகள் கூட இன்னும்போது மான அளவில் இடப்படவில்லை.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் மாணவர்களது்ம் பெற்றோர்களதும் எதிர்பார்ப்புகளை உச்ச அளவில் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு பாடசாலகள் மீது சுமத்துப் பட்டுள்ளது. இப்பொறுப்பை அவைசரியான வகையில் நிறைவேற்றத் தவறுமிடத்து தனியார் கல்வி நிலையங்களை நோக்கிய மாணவர்களின்நகர்வு தவிர்க்க முடியாத்தாக மாறுவதுடன் அது நியாயமான தொன்றாகவும் மாறிவிடுகிறது. இவற்றைக்கருத்திற் கொண்டு பாடசாலகள் எவ்வளவு தூரம் தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றன? குறிப்பிட்டசில பாடசாலைகளில் குறிப்பாகக் கிராமப்புற பாடசாலைகளில் ஓரிரு பாடங்களுக்கு உரிய ஆசிரியர்இல்லை என்பது உண்மை எனினும் அவர்கள் மட்டும் தனியார் கல்வி நிலையங்களுக்குச்செல்லவில்லையே. எல்லா மாணவர்களும் தானே செல்கிறார்கள். நாற்பது மாணவர்களையும் ஆசிரியர் தனித்தனியாக அறிந்து கற்றல் - கற்பித்தல் நிகழும் ஒரு வளமான வகுப்பறையில் இருந்து நானூறு, ஐந்நூறு அல்லது அதை விடக் கூடிய மாணவர்களின் முகமறியா ஆசிரியரின் கொட்டில் வகுப்பறையை நோக்கி அவர்கள் செல்வதற்கான காரணம் என்ன?

கற்பித்தல் என்பது ஒரு கலை. அதுவும் பரீட் சையை நோக்கிய கற்பித்தல் என்பது சிறப்பான கலை. ஆனால் இது நுண்கலைகளைப் போன்று தனித்துவமானதன்று. ஆர்வம்,ஈடுபாடு,அயராத முயற்சியுடைய எவரும் இக்கலையில் வல்லவராக முடியும் என்பதுடன் தனக்கே உரித்தான சிறப்பானஅணுகுமுறையையும் கையாள முடியும்.அப்படியிருந்தும் பல ஆசிரியர்கள் இதில் பின்தங்கி விடுகிறார்கள்என்பதுதான் கசப்பான உண்மை.அரச துறையிலுள்ள முக்கிய பண்பு கடமையச் சரியாகச் செய்தாலும் செய்யாவிட்டாலும் சம்பளம் கிடைக்கும் என்பது. அதுமட்டுமல்ல தனித்திறமைகளுக்கேற்ப வெகுமதிகள்அங்கு வழங்கப்படுவதில்லை. இதனால் இற்றைப்படுத்தல், திட்டமிடல்,புத்தாக்கம்,கவர்ச்சியானகற்பித்தல் முறைகள் போதுமான அளவு இடம் பெறுவதில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு உண்டு. இதற்கு மேலாக மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் தமது ஆசிரியரின் பொறுப்பையும் குறைத்து விடுகின்றனர். தனியார் துறை அப்படியானதன்று. சிறப்பாக இயங்கினால் மட்டுமே நிலைத்திருக்க முடியும் என்பதுடன் திறமைக்கேற்ப வெகுமதிகளும் பெருகும். இதில்ஆச்சரியமான விடயம் என்னவெனில் தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்த,கற்பிக்கின்ற மிகப்பிரபலமான ஆசிரியர்களிடம் கற்ற மாணவர்களே ஆசிரியர்களாக வருகின்றபோதும் அந்த ஆசிரியர்போல இவர்கள் ஏன் கற்பிக்க முயலவில்லை அல்லது அந்த பிரபல ஆசிரியரால் ஏன் அவ்வாறு தம்போன்றஆசிரியர்களை உருவாக்க முடியாமல் போனது என்பதாகும்.

நகரத்துப் பிரபலமான பாடசாலைகள் என்று சொல்லப்படுபவை கூட தனியார் கல்வி முறையை ஊக்குவிப்பவையாகவே காணப்படுகின்றன. மீத்திறன் கூடிய மாணவர்களைச் சுவீகரித்துக் கொள்ளும்அவை அதே போல பிரபல ஆசிரியர்களையும் கவர்ந்து கொள்கின்றன. ஆனால் அங்கு கற்பித்தற்செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன என்பது வெளிப்படையானது. இரண்டு வருடங்களைக் கொண்ட உயர்தரவகுப்பில் ஒரு வருடம் மட்டுமே பாடசாலைக்கு மாணவர்கள் ஒழுங்காக வருகின்றனர்.அதன் பின் அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வதற்கும் அனுமதி அட்டைக்கும் வருகிறார்கள்.அப்பாடசாலையைப்பொறுத்த மட்டில் எங்கு படித்தேனும் விளம்பரத்துக்கு தமது மாணவர்கள் சிறந்த பேறுகளைப் பெற்றுத்தந்தால் போதும் என்ற நிலை. அங்கு பிரபலமான ஆசிரியர்கள் இருப்பதால் சில வேளைகளில் ‘உடையாரின் பொல்லுப்போல’ ஆசிரியரின் வாகனம் பாடசாலையில் நிற்க ஆசிரியரோ தனியார் கல்விநிலைய்தில் நிற்கும் சம்பவங்களும் நிகழ்வதுண்டு.இப்பாடசாலகள் தனியார் கல்வி நிலையங்களின் நேரஅட்டவணைகளை அனுசரித்துச் செயற்படுவது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

தனியார் கல்வி நிலையங்களின் பெருக்கத்துக்கு தனியே ஆசிரியர்களிலோ அல்லதுபாடசாலைகளிலோ குறைகாண முடியாது. இதில் மாணவர்களினதும் பெற்றோரினதும் பங்கும் கணிசமாகஉள்ளது. தனியார் கல்வி அவசியமா இல்லையா என்பதற்கப்பால் அது ஒரு நடப்புவழக்கமாக(Fashion)மாறிவிட்டது. மாணவனுக்கு தன்மீதும் ஆசிரியர் மீதும் நம்பிக்கையில்லை. நம்பிக்கையான மாணவரையும் அது தாழ்வுச் சிக்கலுக்குள் தள்ளிவிடுகிறது. பாடசாலையில் மிகச்சிறந்தமுறையில் ஆசிரியர் கற்பித்தாலும் மாணவர் தனியார் நிலையங்களுக்குச் செல்வதால் நல்லஆசிரியர்களையும் சலிப்படையச் செய்துவிடுகிறது.அதேவேளை பெற்றோர்களின் அறியாமையும்அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகளும் கூட இதை ஊக்குவிக்கிறது. பெற்றோர் தம்மக்களை அவையத்தில்முந்தியிருக்கச் செய்ய முனைவதில் தவறில்லை. ஆனால் தம்பிள்ளைகளின் நிலையறியாது தமதுவிரும்பங்களை அவர்கள் மீது திணிக்க முயல்வது தான் தவறு. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தமது சமூகப் பெருமைக்காகப் தமது பிள்ளைகளை வருத்துவது. இதுபடித்தவர்களையும் விட்டு வைப்பதில்லை.இதற்கான ஒரே நிவாரணி தனியார் கல்விதான் என அவர்கள்தவறாக நம்புவது. அதுவும் பலர் ஒன்றுடன் மட்டும் திருப்திப் படுவதில்லை.இவ்வாறிருக்கும்போது பாவம்ஒன்றுமறியாத மாணவன்தான் என்ன செய்வான்?

மேற்கூறிய எல்லாத்தரப்பினரதும் பலவீனங்களைத் தமது மூலதனமாக தனியார் கல்வி நிலையங்கள்மாற்றிக் கொள்கின்றன.நுகர்வோர் பலவீனங்கள் தானே வியபார

(18ஆம் பக்கம் பார்க்க)



# தனது மகனின் குழந்தையை தானே பெற்றெடுத்த தாய்

## ஓரினச் சேர்க்கையாளரான மகனுக்கு தானே குழந்தை பெற்றுக்கொடுத்த பெண்ணைப் பற்றிய கதை இது

அமெரிக்காவின் ஒரு மாநிலம் நெப்ராஸ்கா. இந்த மாநிலத்தைச் சேர்ந்த செசிலி எலெட்ஜ் என்ற பெண்ணுக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 59 வயது. அவருடைய மகன் மேத்யூ எலெட்ஜ் ஓர் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

அவர் ஒரு தன்பாலின ஈர்ப்பாளராகவும் இருந்த நிலையில், முடி அலங்காரம் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த இலியட் டாஃபெர்ட்டி என்பவருடன் நெருக்கமான பழக்கம் ஏற்படுகிறது.

இந்த பழக்கத்தின் தொடர்ச்சியாக இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்து, அதன்படியே தங்களது மணவாழ்க்கையைத் தொடங்கினர்.

இந்த திருமணத்துக்குப் பின் சில மாதங்கள் கழித்து, "நமக்கு ஒரு குழந்தை வேண்டும்," என இருவரும் விரும்பினர். இது தொடர்பாக பலவித ஆலோசனைகளை மேற்கொண்ட பின், கருத்தரிப்பு மையத்தில் பணியாற்றும் மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெற்றனர்.

அந்த ஆலோசனையின் அடிப்படையில் ஒரு வாடகைத் தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள மேத்யூவும், டாஃபெர்ட்டியும் முடிவெடுத்தனர். அவர்கள் இருவரும் ஒமாஹாவில் வசித்து வந்த நிலையில், ஒருமுறை அருகில் வசித்து வந்த மேத்யூவின் தாய் செசிலியைச் சந்திக்கச் சென்றனர். அவரிடமும் குழந்தை பற்றிப் பேசியுள்ளனர்.

இது போன்ற தொடர் ஆலோசனைகளில், ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்ப்பதற்குப் பதிலாக தங் களது சொந்த குழந்தையைப் பெற்றுக் கொள்ளவே மேத்யூ மற்றும் டாஃபெர்ட்டி தம்பதியினர் விரும்பினர். ஆனால் அது போன்ற குழந்தையை எப்படிப் பெற்றெடுப்பது?

இது குறித்து மேத்யூ, தனது தாய் செசிலியுடன் ஆலோசித்த போது, மகனுடைய குழந்தையை அவரே பெற்றுத்தர சம்மதம் தெரிவித்தார். இதைக் கேட்டதும் டாஃபெர்டிக்கு சிரிப்பு தான் வந்தது.

"உண்மையிலுமே அனைவரும்



சிரித்தனர்," என பிபிசியிடம் செசிலி தெரிவித்தார்.

"அவருடைய எண்ணம் உண்மையிலுமே உணர்வுப்பூர்வமான மிக அழகான எண்ணமாகத் தெரிந்தது," என்கிறார் டாஃபெர்ட்டி. "அந்த வயதில், மகனுக்காக ஒரு குழந்தையைபெற்றுத்தர அவர் விரும்பினார் என்றால், அது எவ்வளவு பெரிய எண்ணம்? ஒரு சுயநலமற்ற போக்கு," என அவர் ஆச்சரியப்பட்டார்.

பின்னர் செசிலி எலெட்ஜ் பல்வேறு மருத்துவ ஆலோசனைகளில் பங்கேற்று, அவருக்கு ஏராளமான உடல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக, அவருடைய மகனின் குழந்தையை அவர் பெற்றுக்கொடுக்க மருத்துவர்கள் சம்மதித்தனர்.

"உடல் நலம் குறித்து எனக்கு அதிக அக்கறை உள்ளது," என்றார் செசிலி. ஆனால், "ஒரு குழந்தையைப்பெற்றெடுக்க முடியுமா என சந்தேகப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை," என்றார்.

இதையடுத்து செசிலியின் மகன் மேத்யூவிடம் இருந்து விந்தணு பெறப்பட்டு, அவருடைய கணவர் டாஃபெர்ட்டியின் சகோதரியிடம் இருந்து கருமுட்டை பெறப்பட்டு செயற்கை கருவூட்டல் மூலம் கரு உருவாக்கப்பட்டது. பின்னர் அந்த கரு, செசிலியின் கருப்பைக்குள் செலுத்தப்பட்டது.



செயற்கை கருவூட்டல் செய்யப்பட்டு ஒரு வாரம் கழித்து, கருத்தரிப்பு குறித்து வீட்டிலேயே பரிசோதனை செய்வதற் கான உபகரணங்களை மேத்யூவும், டாஃபெர்ட்டியும் வாங்கி வந்தனர். அது போன்ற பரிசோதனையை மேற்கொள்ள வேண்டாம் என மருத்துவர்கள் அறிவுறுத்தியிருந்த போதும், அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

"மருத்துவர்களின் ஆலோசனையை அந்த இருவராலும் பின்பற்ற முடியவில்லை. அவர்களுக்கு கொஞ்சமும் பொறுமையின்றி, அந்தப் பரிசோதனையை மேற்கொண்டனர்," என்கிறார் சிசிலி.

ஆனால் அந்தப் பரிசோதனையின் போது, அவருடைய வயிற்றில் கரு எதுவும் இல்லை என்றே தெரியவந்தது. இதனால் செசிலி கடுமையாக அதிர்ந்துவிட்டார். இதையடுத்து, அவரைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் மேத்யூ அன்று மாலை மீண்டும் அங்கே வந்தார். அப்போது தான் அவர்கள் அந்த பரிசோதனை முடிவை முழுமையாக



பார்க்காமல் விட்டது தெரியவந்தது.

ஆம். செசிலியின் வயிற்றில் கரு வளர்ந்து கொண்டிருந்ததை அப்போது தான் அவர்கள் உறுதி செய்தனர்.

"அது உண்மையிலுமே ஒரு சந்தோஷமான நேரம்," என்கிறார் செசிலி. காலையில் அந்தப் பரிசோதனை முடிவை முழுமையாகக் கவனிக்காதது குறித்து அவருக்கு அப்போது சிரிப்பு தான் வந்தது.

இந்த கருத்தரித்தல் குறித்து அனைவரும் ஆதரவு கருத்துக்களையே கூறிய போதிலும், செசிலியின் மற்ற இரண்டு குழந்தைகளும் இது குறித்து கடுமையாக அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

"இருப்பினும், நான் எனது மகனுடைய குழந்தையைப் பெற்றெடுக்கத் தயாராக இருந்தேன் என்பதை அனைவரும் உணர்ந்த பின், எல்லோருமே எனக்கு முழு ஆதரவை அளித்தனர்," என்கிறார் செசிலி.

இது மட்டுமின்றி நெப்ராஸ்காவில் வசித்து வந்த ஓரினச் சேர்க்கை எதிர்ப்பாளர்களும் செசிலிக்கு எதிரான விமர்சனங்களை முன்வைத்தனர். 2015-ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப் பின் படி, தன்பாலின திருமணம் சட் டப்படி செல்லும் என்ற போதிலும், இந்த எதிர்ப்புக்கள் எழுந்தன. ஆனால் அவர்களைத் தண்டிக்கப் போதுமான சட்டங்கள் இல்லை.

செசிலிக்கு மகப்பேறு காலத்திய மருத்துவ செலவினங்களை ஏற்க, அவரது மருத்துவ காப்பீட்டு நிறுவனம் மறுத்து விட்டதாகவும், எவ்வளவு போராடியும் அதற்கான செலவுகளைப் பெற முடியவில்லை என்றும் அவர் கூறுகிறார்.

ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பவர் தான் அக்குழந்தையின் தாய் என சட்டம் கூறும் நிலையில், உமா லூயிஸ் பிறந்த பின், அவளுக்காக பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழில், செசிலியின் பெயரும், அவருடைய மகன் மேத்யூவின் பெயரும் இடம்பெற்றிருந்தனவே ஒழிய, டாஃபெர்ட்டியின் பெயர் இடம்பெறவில்லை.

"நாங்கள் இருவரும் கணவன் - மனைவியாக வாழ்வதற்கு எதிரான வெறும் ஒரு சிறிய தடங்கலாகவே இதை உணர்கிறேன்," என்கிறார் மேத்யூ.


6 ஆண்டுகளுக்கு முன்பு, டாஃபெர்ட்டியைத் திருமணம் செய்துகொள்ளப் போவதாக மேத்யூ பணியாற்றிவந்த பள்ளி நிர்வாகத்துக்குத் தெரிவித்ததால் அவரை "ஸ்கட் கத்தோலிக்க உயர் நிலைப் பள்ளி" நிர்வாகம் பணி நீக்கம் செய்தது ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக இடம்பிடித்திருந்தது.

ஆனால் பள்ளி நிர்வாகத்தின் இந்த முடிவுக்கு அப்போது கடுமையான எதிர்ப்புக்கள் எழுந்தன. ஒருவர் தன்பாலின ஈர்ப்பாளராக உள்ளதாலேயே அவரைப் பணி நீக்கம் செய்தது தவறு எனச்சுட்டிக்காட்டி, பள்ளி நிர்வாகத்துக்கு எதிராக இணைய வழியில் எழுப்பப்பட்ட புகாரில் சுமார் 1,02,995 பேர் ஆதரவு கையொப்பமிட்டிருந்தனர்.

ஓரினச் சேர்க்கையாளர்கள் மீது இச்சமூகம் காட்டும் வெறுப்புக்கு எதிரான ஒரு போராட்டமாகவே தன் குடும்பத்தைப் பற்றிய கதையை பலருக்கும் பகிர விரும்பியதாக செசிலி கூறுகிறார். ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு உண்மையில் நல்ல எதிர்காலம் உள்ளது என்பதை அனைவருக்கும் உணர்த்த விரும்பியதாகவும் அவர் கூறுகிறார்.

"நான் தனிப்பட்ட முறையில் அந்த வெறுப்புக்களை நினைத்து மனம் வருந்தவில்லை. எல்லாவற்றுக்கும் பின்னால் எனக்கென்று ஒரு குடும்பம் இருக்கிறது, உறவினர்கள் - நண்பர்கள் இருக்கின்றனர், இந்த சமூகத்தில் பலர் இருக்கின்றனர்," என்றார் மேத்யூ.

தற்போதைய நிலையில், "இந்தச் சின்னக் குழந்தையை நன்றாக வளர்த்து வருகிறோம். அன்பும், பாசமும் நிறைந்த குடும்பத்தில் அவள் வளர்ந்துவருகிறாள். இவளுடைய எதிர்காலத்தில் மட்டுமே நான் கவனம் செலுத்துகிறேன்," என்கிறார் மேத்யூ.





# யாழ்.- கொழும்பு விமான சேவை இன்றைய நிலையில் அவசியமா?

யாழ்ப்பாணம்-கொழும்பு இடையிலான உள்ளூர் விமான சேவையை விரைவாக ஆரம்பிக்கவேண்டும் என்ற கருத்து பலரிடமும் இப்போது வலுத்து வருகின்றது.

புலம்பெயர் தமிழ் மக்களும் அடிக்கடி முக்கிய அலுவல்களுக்காக கொழும்பு சென்று வருவோரும் இந்தக் கருத்தை அதிகளவில் முன்வைத்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் கொழும்பு விமான நிலையத்துக்கு வந்து தாமதமின்றி இரத்மலானை சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் விரைவாக வந்துவிடமுடியும் எனக் கருதுகிறார்கள்.

அத்துடன் அடிக்கடி கூட்டங்கள் மற்றும் தேவைகளுக்காக கொழும்பு செல்வோர், மருத்துவ தேவைக்கு கொழும்பு செல்வோர் உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்பட வேண்டியது கட்டாயம் என்கிறார்கள்.

ஆயினும் இந்த விமான சேவையை ஆரம்பிப்பதில் தொடர்ந்தும் இழுபறி நிலை இருந்துகொண்டேயிருக்கிறது.

இது பற்றி யாழ். மக்கள் என்ன சொல்கிறார்கள்? கருத்துக்கள் இங்கே......!

## உள்ளூர் விமானசேவை மிகவும் பயனுடையது

**மைக்கல்**
*சமூக ஆர்வலர்*



ஒரு நாட்டின்- நகரத்தின் அபிவிருத்தியை பார்ப்பதாக இருந்தால் அதன் போக்குவரத்து என்பது மிகவும் முக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. போக்குவரத்து வசதிகள் வேகமாகவும் விவேகமாகவும் உலகம் முழுவதிலும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற இந்த நிலையிலே முன்னர் இருந்த உள்ளூர் விமான சேவைகள் தற்போது நடைபெறாமல் இருக்கின்றமை மிகவும் கவலைக்குரிய விடயமாகின்றது.

உள்ளூர் சேவைகள் யுத்த காலத்திலும் செயற்பட்டு வந்தது. யுத்த காலத்தில் செயற்பட்ட இந்த விமான சேவை மூலம் பலர் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அவசர நோயாளர்கள் பலர் உடனடியாகக் கொழும்புக்குச் சென்று தமது வைத்திய தேவையை பூர்த்தி செய்து தற்போது உயிர் காக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

அதேபோல யுத்த காலத்திற்கு முன்னர்கூட உள்ளூர் விமான சேவைகள் மிக நேர்த்தியாக இடம்பெற்றிருந்தன. நான் கூட பல தடவைகள் விமானத்தில் கொழும்பு சென்று வந்து எனது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து இருக்கின்றேன்.

ஆனால் இன்று அவ்வாறான ஒரு நிலை இல்லை. நாங்கள் கொழும்பு செல்லவேண்டுமாக இருந்தால் பஸ்களில் அல்லது வாடகை வாகனங்கள் அல்லது தனி வாகனங்களில் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. அதற்கு ஏழு தொடக்கம் எட்டு மணித்தியாலங்கள் செல்கின்றது.

அந்த ஏழு தொடக்கம் எட்டு மணித்தியாலங்கள் என்பது ஒரு ஆபத்தான பயணமாகவே அமைகின்றது. குறிப்பாக வாகனங்கள் வேகமாகப் பயணிக்கின்றன. அதேபோல் நீண்ட தூரம் பயணிப்பதனால் விபத்துக் கள் ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

நாளாந்தம் ஏ-9 பாதையில் பல்வேறுபட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக கொழும்பு செல்வோர் மிகவும் பயத்துடன் பயணிக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஆனால் இந்த உள்ளூர் விமான சேவைகள் இடம்பெறுமாக இருந்தால் ஒரு மணித்தியாலத்தில் கொழும்பிற்குச் சென்று விட முடியும். அதாவது ஒரு மணித்தியாலம் எந்தவித பயமும் இன்றி எந்தவித ஆபத்தையும் சந்திக்காது கொழும்பை சென்றடைய முடியும்.

அதேபோல நமக்கு நேரமும் மிகுதியாகிறது. குறிப்பாக ஏழு தொடக்கம் எட்டு மணித்தியாலங்கள் பிரயாணம் செய்து கொழும்பு சென்றடைவதைவிட ஒரு மணித்தியாளத்தில் நாங்கள் கொழும்புக்கு. சென்றடைவது என்பது மிகவும் பொருத்தமான விடயமாகும்.

குறிப்பாக அவசர தேவைகள் உடையோர் அதாவது அரச உத்தியோகத்தர்கள் குறிப்பாக கொழும்பில் உள்ள கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளில் கலந்துகொள்ளச் செல்வோர்கூட விமான சேவை செயற்படுமாக இருந்தால் தமது பயணங்களை இலகு படுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆனது இந்த உள்ளூர் விமான சேவை ஆரம்பிப்பதற்காக ஏன் தயங்குகின்றது. குறிப்பாக வர்த்தகர்கள்கூட நீண்ட நேரம் அதாவது பொன்னான நேரங்களை இந்தப் பயணத்தில் வீணாக்குகின்றார்கள். உள்ளூர் விமான சேவைகள் செயற்படுமாக இருந்தால் அவர்களது நேரங்கள் மீதப்படுத்தப்படும். அத்தோடு விபத்துகளில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வெளிநாடுகளில் இருந்து வருவோர் கூறுகின்றார்கள், தாங்கள் லண்டனிலிருந்து 10 தொடக்கம் 12 மணித்தி யாலத்துக்குள் இலங்கைக்கு வந்து விடுகின்றோம். ஆனால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு எட்டு மணித்தியாலங்கள் பயணிக்க வேண்டிய உள்ளது. எனவே இது மாற்றப்படவேண்டும். குறிப்பாக உள்ளூர் சேவையை ஆரம்பிப்பதில் என்ன தயக்கம்? ஏன் இந்த அரசாங்கம் இவ்வாறு செயல்படுகின்றது என நாங்கள் கேள்வி கேட்க விரும்புகின்றோம்.

குறிப்பாக இந்தியாவிலிருந்து விமானங்கள் இலங்கைக்கு வர முடியும் என்றால் ஏன் கொழும்பிலிருந்து இந்த விமான சேவை ஆரம்பிப்பதற்கு அரசு தயங்குகிறது. எனவே இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் அது பொதுமக்களுக்கு ஒரு சாதகமான விடயமாக அமையும். குறிப்பாக 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில்கூட உள்ளூர் விமான சேவைகள் இடம்பெற்றன.

அதாவது உள்ளூர் விமான சேவைகள் வாரத்தில் மூன்று தடவைகள் இடம்பெற்றன. எனவே அவ்வாறான விமான சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



## அரசு ஏன் தயக்கம்?

**ச.பிரபாகரன்**
வலி.வடக்கு

நாட்டில் உள்ள அரசியல்வாதிகள், அதிகாரிகள் இந்த விடயத்தில் மிகவும் கவனம் எடுக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. குறிப்பாக அண்மைய நாட்களில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என அனைவரும் கூறுகின்றார்கள். ஆனால் சொந்த நாட்டில் எமது யாழ்ப்பாண மாவட்டம் பிரித்து ஆளப்படுகின்றதா என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

குறிப்பாக இரத்மலானையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விமான சேவை ஆரம்பிப்பதற்கு எவரும் தயாராக இல்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் செல்வதாக இருந்தால் ஒரே ஒரு மார்க்கமே காணப்படுகின்றது.

அதுவும் நீண்ட நேரங்கள் பயணித்து தான் நாங்கள் கொழும்புக்கு செல்லவேண்டி உள்ளது. இதனால் பலர் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

யுத்த காலத்தில் கூட உள்ளூர் விமான சேவைகள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. ஏன் தற்போது இந்த விமான சேவை நடத்த முடியாது?

தற்போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இந்த விடயத்தை அரசாங்கத்திடம் பேசக்கூடாது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கதைப்பதில் வல்லவர்களாக இருக்கிறார்கள். தவிர இவ்வாறான வேலைத் திட்டங்களைச் செயற்படுத்த தயாராக இல்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வோர் 8 மணித்தியாலங்கள் வீணடிக்கவேண்டியுள்ளது.

விமான பயணத்தில் ஒரு மணித்தியாலத்தில் கொழும்புக்குச் சென்று கொழும்பில் எமது வேலைகளை முடித்து உடனடியாகவே நாங்கள் யாழ்ப்பாணம் திரும்பக்கூடிய காணப்படுகின்றது.

எனவே இந்த விடயங்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என கூறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் சந்திப்புகளின்போது தெரியப்படுத்த வேண்டும். அத்தோடு கொழும்புக்கான பயணத்தில் மக்கள் மிகவும் ஆபத்துடன் பயணிக்கின்றார்கள்.

அதாவது பலர் நித்திரை கொள்வதில்லை. ஏன் என்றால் விபத்துக்கள் சம்பவிக்கலாம் என்ற பயத்துடன் பயணிக்கின்றார்கள். ஏ-9 வீதியில் ஒவ்வொரு நாளும் அதிகளவில் விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

எனவே எமது பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு உள்ளூர் விமான சேவையை அரசாங்கமானது விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என்பது எனது கருத்தாகும்.

**அறிக்கையிடல்**
**REPORTING**
**என். குகராஜ்**

## பஸ்ஸில் பயணிப்பதால் 8 மணித்தியாலங்கள் வீண்

**ராஜேந்திரம்**
நல்லூர்

யாழ்ப்பாணம்-கொழும்பு உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்படும் எனப் பல தடவைகள் கூறப்பட்டது. ஆனால் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. எனது குடும்பத்தினர் கொழும்பில் தான் உள்ளார்கள். நான் அடிக்கடி கொழும்புக்கு சென்று வருகின்றேன்.

அடிக்கடி பஸ்ஸில் சென்று வருகின்றேன். ஆனால் விமான சேவை ஆரம்பித்தால் விமான சேவையில் கொழும்புக்குச் செல்ல முடியும் இலங்கை-இந்தியா பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறுகின்றோம்.

ஆனால் இலங்கையில் உள்ள பலாலி-இரத்மலானை விமான சேவை ஆரம்பிப்பதற்கு யாரும் அழுத்தம் கொடுக்கவில்லை.

குறிப்பாக சாதாரணமாக ஒரு விமான சேவை ஆரம்பித்தால் கொழும்புக்கு இங்கிருந்து 8 மணித்தியாலங்கள் பயணிக்க தேவையில்லை.

ஒரு மணித்தியாலத்தில் கொழும்புக்குச் சென்று விட முடியும். குறிப்பாக நான் கூட கடந்த வாரம் ஒரு சத்திர



சிகிச்சை செய்திருந்தேன். ஆனால் கடும் சிரமத்துக்கு மத்தியில் தனி வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி மிகுந்த சிரமத்துடன் கொழும்பு சென்று வந்தேன்.

விமானப் போக்குவரத்திற்கான கட்டணம் அதிகளவு எனக் கூறமுடியாது. குறிப்பாக தற்பொழுது பஸ் கட்டணம்கூட 3500 ரூபா ஆகிவிட்டது. எனவே தற்பொழுது 8 மணித்தியாலம் பஸ்ஸில் பயத்துடன் பயணிப்பதை விட விமானத்தில் ஒரு மணித்தியாலத்தில் சென்று விட முடியும்.

எனவே உள்ளூர் விமான சேவையை ஆரம்பித்தால் அனைத்துக்கும் இலகுவாக இருக்கும்.




## வருகிறது தலைநகரம் -2

சுந்தர்.சி நடித்துள்ள 'தலைநகரம் 2' படம் வரும் எதிர்வரும் 23ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு இயக்குநர் சுந்தர். சி நாயகனாக அறிமுகமான படம் 'தலைநகரம்'. சுராஜ் இயக்கத்தில் உருவான இந்தப் படத்தில் வடிவேலு, ஜோதிர்மயி, பிரகாஷ்ராஜ், போஸ் வெங்கட் உள்ளிட்ட பலர் சுந்தர். சியுடன் நடித்திருந்தனர். இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. வடிவேலுவின் 'நாய் சேகர்' கதாபாத்திரம் பிரபலமானது.

தற்போது இப்படத்தின் இரண்டாம் பாகமாக ' தலை நகரம் 2' உருவாகியுள்ளது. இந்த படத்தில் சுந்தர். சி தவிர்த்து, பாலக் லால்வானி, தம்பி ராமையா, 'பாகு பலி' பிரபாகர், ஆயிரா, ஜெய்ஸ் ஜோஸ், விஷால் ராஜன், சேரன் ராஜ் உள்ளிட்ட பலர் நடித்துள் ளனர்.

## இசையும் வசமாகும்

கார்த்தியின் 'விருமன்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமான அதிதி ஷங்கர், அடுத்து சிவகார்த்தி கேயன் ஜோடியாக 'மாவீரன்' படத்தில் நடிக்கிறார்.

'விருமனி'ல் மதுரவீரன் என்ற பாடலைப் பாடிய அதிதி, 'மாவீரனி'ல் யுகபாரதி எழுதிய 'வண்ணாரப் பேட்டையில' என்ற பாடலை சிவகார்த்தியேனுடன் இணைந்து பாடியிருக்கிறார்.

இது குறித்து அதிதி கூறுகையில், "இது என் இரண்டாவது பாடல். 'மதுரை வீரன்' கிராமத்து உணர்வுள்ள பாடல். அதில் என் குரலே வித்தியாச மாக இருந்தது. 'வண்ணாரப்பேட்டை' இனிமை யான காதல் பாடல். சிவகார்த்திகேயனுடன் இணைந்து பாடியது சிறந்த அனுபவத்தைக் கொடுத்தது. சிறு வயதில் இருந்தே இசைக் கற்று வருகிறேன். வாய்ப்புக் கிடைத்தால் கண்டிப்பாக தொடர்ந்து பாடுவேன் - என்றார்.






## விஜயுடன் சேரும் மிருணாள்

தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டா தற்போது குஷி படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து மீண்டும் கீதா கோவிந்தம் பட இயக்குநர் பரசுராம் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கிறார்.

காதல் கதையை மையப்படுத்தி உருவாகும் இந்த படத்தில் விஜய் தேவரகொண்டாவுக்கு ஜோடியாக நடிக்க இதுவரை அவருடன் இணைந்து நடிக்காத நடிகை நடிக்க வேண்டும் என்று படக்குழுவினர் முடிவு செய்தனர். இந்நிலையில் இப்போது இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்க சீதா ராமம் பட நடிகை மிருணாள் தாகூர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

## அதிக தியேட்டர்களில் லியோ




லோகேஷ் கனகராஜ் இயக்கும் லியோ படத்தில் நடித்து வருகிறார் விஜய். இந்த படத்தில் அவருடன் த்ரிஷா, பிரியா ஆனந்த், சஞ்சய் தத், அர்ஜுன், மிஷ்கின் உட்பட பலர் நடிக்க, அனிருத் இசை அமைக்கிறார். இந்தப் படம் இந்த ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் தேதி திரைக்கு வருகிறது.

தற்போது படம் இறுதிக்கட்டத்தை நெருங்கி வருகி றது. இந்த நிலையில் விஜயின் முந்தைய படங்களை காட்டிலும் இந்த படத்துக்கான வியாபாரம் விறுவிறுப் பாக நடக்கிறது. மேலும் உலகம் முழுக்க அதிகளவில் வெளியிடவும் திட்டமிட்டு வருகின்றனர். அதன் ஒருபகுதியாக லியோ படத்தை அமெரிக்காவில் 1500 திரையரங்குகளில் வெளியிட திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

## சிம்புவை இயக்கும் சூர்யா

அஜித் நடித்த வாலி படத்தில் இயக்குநர் ஆனவர் எஸ். ஜே. சூர்யா. அன்பே ஆருயிரே படத் தில் அவரே நாயகனாகவும் ஆன வர். சமீபகாலமாக நாயகன், வில் லன் என வலம் வந்து கொண்டி ருக்கிறார் எஸ். ஜே. சூர்யா.

மாநாடு பட வெற்றிக்க பிறகு ஷங்கர் இயக்கி வரும் கேம் சேஞ் சர், விஷால் நடிக்கும் மார்க் அன் ரனி, கார்த்திக் சுப்பராஜ் இயக்கும் ஜிகர்தண்டா 2 ஆகிய படங்களில் வில்லனாக நடித்து வருகிறார். அதோடு இந்தியன் 2 படத்திலும் அவர் வில்லனாக நடித்து வருவ தாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், நடிகர் சிம்புவை வைத்து புதிய படம் ஒன்றை எஸ். ஜே. சூர்யா இயக்கவுள்ளார். இதில் சிம்பு இரு வேடங்களில் நடிக்க வுள்ளார்.



# இங்கிலாந்தின் வியூகம் ஆஸியிடம் பலிக்குமா...?



இங்கிலாந்து தன் துடுப்பாட்ட அணுகுமுறையை மட்டுமல்ல ஒட்டுமொத்த டெஸ்ட் கிரிக்கெட்டின் அணுகுமுறையையே மாற்றி பல வெற்றிகளைக் குவித்து வருவது நாம் அறிந்ததே. பயிற்றுநர் பிரெண்டன் மக்கலம் ஒரு நியூசிலாந்து நாட்டவர். இங்கிலாந்தின் அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ்/ம் நியூசிலாந்து நாட்டவர். இவர்களின் கிரிக்கெட் தத்துவம், அதிரடி முறை 'பாஸ்போல்' (Bazball) என்று கிரிக்கெட் வட்டாரங்களில் பிரபலமாகியுள்ளது. ஆனால், இத்தகைய அணுகுமுறையை ஆஷஷ் தொடரில், அதுவும் அவுஸ்திரே லியாவுக்கு எதிராக நடத்திக் காட்ட முடியுமா என்பதே பலரது கேள்வியாக உள்ளது.

5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட பரபரப்பான ஆஷஷ் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமானது. மக்கலம் - ஸ்டோக்ஸ் கூட்டணி உத்திகளால் அக்கறையற்ற போனால் போகட்டும் போடா ஆட்ட அணுகுமுறையின் மூலம் கடந்த 13 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து 11இல் வென்றுள்ளது.

இங்கிலாந்து வீரர்கள் மனதிலிருந்து முதலில் கலைந்த மிகப்பெரிய 'அழுக்கு மேகம்' என்னவெனில் வெற்றி - தோல்வியைக் கண்டு பயப்படாதே, அணியாக இருந்தாலும் வெற்றியோ, தோல்வியோ எதுவாக இருந்தாலும் சரி, மக்களுக்காக, பொழுதுபோக்கு எண்ணத்துடன் அடித்து ஆடு, உனக்கு நீயே சந்தோசமாக ஆடு என்பதே அந்தத் தாரக மந்திரம், மனதிலிருந்து சொந்த, தேச வெற்றிகளைத் தூக்கி விட்டால் முடிவு தேசத்துக்காக ஏகப்பட்ட வெற்றிகள் என்ற பலன் கைகொடுக்கிறது என்பதே மெக்கல்லமின் பயிற்றுவிப்பு ஸ்ரைல். அதில் இதுவரை வெற்றி கண்டுள்ளனர்.

ஆனால், அத்தகைய அணுகுமுறைக்கு கடும் நெருக்கடி, மற்றும் சவால் அளிப்பது இந்த ஆஷஷ் தொடர் என்றால் மிகையாகாது. ஆனால், பென் ஸ்டோக்ஸ் முற்றிலும் வெற்றியை மனதிலிருந்து எடுத்துவிடவில்லை.

"நாங்கள் ஆஷஷ் தொடரை வெல்லவே விரும்புகின்றோம். நானும் ஆஷஷ் வெல்ல விரும்புகிறேன். ஆனால், வெற்றி என்பதையே குறிக்கோளாகக் கொண்டு வெறித்தனமாக அதன் பின்னால் செல்லும் அணியாக அல்ல. "இப்போது", "இங்கே" என்பதில் கவனம் செலுத்த வேண்டும். எங்கள் திறமைக்கேற்ப ஆடினால் எந்த அணியையும் வீழ்த்த முடியும்" என்கிறார்.

இந்த சவாலில் இங்கிலாந்து வெற்றி பெறுகிறதோ இல்லையோ, ஆஷஷை வெல்கிறதோ இல்லையோ, ஆனால், டெஸ்ட் கிரிக்கெட்டை ஆரோக்கியமான ஒரு கட்டத்துக்கு நகர்த்திச் செல்வதில் இந்த ஆஷஷ், இங்கிலாந்தின் அணுகுமுறை மாற்றத்தாலும் அதற்கான அவுஸ்திரேலியாவின் பதில் என்ன என்பதிலும் சுவாரஸ்யத்தையும் மக்களின் எதிர்பார்ப்பையும் அதிகரிக்கவே செய்துள்ளது.

வெற்றி - தோல்விகளைப் பற்றி கவலைப்படாத இங்கிலாந்து, அதிரடி அணி அவுஸ்திரேலியாவுக்கு ஓர் அச்சுறுத்தல்தான். அவுஸ்திரேலியா அணி இதற்குப் பழக்கப்பட்டதல்ல. ஆனால், அதே வேளையில் இதை அப்படியே எதிர்ப்பில்லாமல் வாங்கிக் கொள்ளவும் மாட்டார்கள். அவர்களிடத்திலும் மாற்று உத்திகள் இருக்கவே செய்யும்.

ஆனால், இங்கிலாந்து துடுப்பாட்டக்காரர்களுக்கு ஆடுகளத்தைப் போட்டு அதில் 300 அல்லது 350 ஓட்டங்களை 75 ஓவர்களில் அடித்து சகல விக்கெட்களையும் இழந்து நையாண்டி செய்தால் அவுஸ்திரேலியா நிச்சயம் 450 ஓட்டங்களுக்கும் மேல் அடித்து இங்கிலாந்தை மண்ணைக் கௌவச் செய்யும். உண்மையான ஆடுகளத்தைப் போட்டு அதில் இங்கிலாந்து அதிரடி துடுப்பெடுத்தாடும் பட்சத்தில் இரு அணிகளுக்குமே சம வாய்ப்புகள் இருக்கும். எட்ஜ்பாஸ்டன் ஆடுகளம் வறண்டு காணப்படுகிறது. ஆகவே புதிய பந்து மற்றும் வானிலையினால் ஏதாவது அற்புதங்கள் நிகழ்ந்தால்தான் உண்டு.

# மாற்றத்துக்கு தயாராகும் இந்திய அணி!



இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலம் எதிர்பார்த்ததைவிட வேகமாக மாற்றங்களுக்கு தயாராகி கொண்டிருக்கிறது அல்லது தயாராக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது என்றே தோன்றுகிறது. அதுவும் முக்கியமாக டெஸ்ட் கிரிக்கெட் அணி பெரிய அளவிலான மாற்றத்தை எதிர்நோக்கி காத்திருக்கிறது. இந்திய அணி தொடர்ச்சியாக இரு முறை ஐ. சி. சி. உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் தோல்வியை சந்தித்துள்ளது.

இந்த இரு தோல்விகளும் ரோஹித் சர்மா, விராட் கோலி, புஜாரா உள்ளிட்டோர் தங்களது டெஸ்ட் கிரிக்கெட்டின் கடைசி காலக்கட்டத்தை நோக்கி பயணிப்பதை உணர்த்துவதாக உள்ளது. டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இரு தொடர்களுக்கான காலக் கட்டத்தில் இந்திய அணி மோசமான செயல்திறனை வெளிப்படுத்தவில்லைதான். இரு முறையும் இறுதிப் போட்டியில் கால்பதித்துள்ளது. ஆனால் தற்போது லண்டன்ஓவல் மைதானத்தில் முடிவடைந்த சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் மிகுந்த சோர்வு காணப்பட்டது.

இந்திய வீரர்களிடம் இருந்து தீப்பொறி போன்றதொரு ஆட்டத்தை காண முடியவில்லை. உலகில் உள்ள அனைத்து அணிகளையும் வெல்லும் திறன் கொண்ட நிலையில் செய்த தவறுகளை மீண்டும் இந்திய அணி மேற்கொண்டது. வீரர்களின் செயல்திறன் ஒருபுறம் இருக்க, பயிற்சியாளர் மற்றும் உதவி பயிற்சியாளர்களின் செயல்திறனும் கேள்விக்குள்ளாகி இருக்கிறது. வீரர்கள் தெரிவில் வேகப்பந்து வீச்சை நம்பி, துடுப்பாட்டத்தை இந்திய அணி கோட்டைவிட்டது.

பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட் ஓவல் ஆடுகளம் 400 ஓட்டங்களுக்கு மேல் குவிக்கப்படக்கூடியது அல்ல என்று கூறுகிறார். அப்படி இருக்கும் போது வேகப் பந்து வீச்சில் ஏன் ஒழுக்கத்துடன் செயல்பட்டு ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்த முடியாமல் போனது? போட்டி முடிந்த பின்னர் பல்வேறு கேள்விக்கணைகள் இந்திய அணி மீது பாய்ச்சப்படுகின்றன. இது ஒருபுறம் இருக்க இந்திய டெஸ்ட் அணியில் இளம் வீரர்களை கொண்டுவருவதற்கான காலக்கட்டத்துக்குள் பயணிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடிய 11 வீரர்களில் பெரும்பாலானோர் 35 வயதை எட்டும் நிலையில் உள்ளனர். இந்த வரிசையில் விராட் கோலி, ரவீந்திர ஜடேஜா இருக்கின்றனர். அஜிங்க்ய ரஹானே, சேதேஷ்வர் புஜாரா ஆகியோர் 35 வயதையும், அணித்தலைவர் ரோஹித் சர்மா, ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் 36 வயதையும் கடந்துவிட்டனர்.

அடுத்த ஐ. சி. சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் 2025ஆம் ஆண்டு நடைபெறுகிறது. ஒருவேளை இந்திய அணி மீண்டும் ஒரு முறை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றால் தற்போது 35 வயதை கடந்துள்ள வீரர்களின் உடல் தகுதி, செயல் திறன்அந்த நேரத்தில் எப்படி இருக்கும் என்பதுதான் கேள்வியாக உள்ளது.இதுவே தற்போது இந்திய கிரிக்கெட் அணி தேர்வுக்குழுவினரை சிந்திக்க தூண்டி உள்ளது. மாற்றம்என்பது விளையாட்டில் ஒரு தொடர்ச்சியான செயல்முறை மற்றும் இயற்கையானது. இந்தவகையில் நீண்ட கால செயல்பாட்டை கருத்தில் கொண்டு இளம்வீரர்களின் பக்கம் தங்களது பார்வையை திருப்ப தேர்வுக் குழுவினர் ஆயத்தமாகக்கூடும்.

உத்வேகத்துடன் உள்ள இளம்வீரர்களின் வரவானது அணியின் உணர்வையும் கட்டமைப்பையும் மாற்றும். இதனால் அனுபவம் உள்ள வீரர்களுடன் சரியான கலவையில் இளம் வீரர்களை தேர்வு செய்வது தேர்வுக் குழுவினரின் முக்கிய பணியாக இருக்கும். இது எதிர்வரும் மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணத்தில் பிரதிபலிக்கக்கூடும்.

ஜூனியர் கிரிக்கெட்டில் இருந்து சர்வதேச அரங்கிற்கு நகரும் இளம் வீரர்களுக்கு ஒரு சிறந்த பாலமாக விளங்கும் தலைமை பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட், மூத்த வீரர்களை சரியாக கையாளவில்லை என்ற குற்றச்சாட்டும் எழாமல் இல்லை. இது அவர், அபாயங்களை பொருட்படுத்தாதவர் என்ற தோற்றத்தை அளிக்கிறது. மேலும் சமீபகாலமாக இந்திய "ஏ" அணியின் சுற்றுப்பயணங்கள் வறண்டுவிட்டன, ஐ. பி. எல். தொடரின் செயல்திறன் அடிப்படையில் வீரர்கள் தேசிய அணியில் இடம்பிடிக்கின்றனர். இது வீரர்களின் செயல் திறனில் எதிர்பார்ப்பைவிட குறைவாக உள்ளது.

இந்தியா குறிப்பிட்ட வகை வீரர்களை உருவாக்க வேண்டும். பேட்டிங்கிலும் பங்களிப்பு செய்யக்கூடிய மிதவேக பந்து வீச்சாளர், இடது கை தொடக்க ஆட்டக்காரர், மற்றும் நடுவரிசை இடதுகை துடுப்பாட்ட வீரர்கள் இளம் வேகப்பந்து வீச்சாளர்கள் மற்றும் ஒரு சுழற்பந்து வீச்சு, சகலதுறை உள்ளடக்கிய கலவையாக இருப்பது அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக நவீன கால கிரிக்கெட்டுக்கு தகுந்தபடி துணிச்சலுடன் கூடிய செயல்திறனை வெளிப்படுத்தும் வீரர்களை அணிக்குள் புகுத்துவது காலத்தின் கட்டாயம். இதற்கான தூரம் வெகு தொலைவில் இல்லை.

தற்போதைக்கு மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணம் மட்டுமே உள்ளது. இதன் பின்னர் இந்திய அணி ஆண்டின் இறுதியில்தான் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. இதனால் மாற்றங்களை கொண்டுவருவதற்கான கால அவகாசம் தெரிவு குழுவினருக்கு அதிகமாகவே இருக்கிறது.

துணிச்சலுடன் கூடிய செயல்திறனை வெளிப்படுத்தும் வீரர்களை இந்திய அணிக்குள் புகுத்துவது காலத்தின் கட்டாயம்.

# ஆனந்தசங்கரி - 90 நமது அரசியல் வரலாற்றின் சாட்சியம்!

மாலி



தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி 90 வயதை எய்துகிறார். இலங்கையில் தமிழர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்னையை இலங்கையின் சுதந்திரத்திலிருந்து பார்த்தால், சுதந்திரத்தின் 75 ஆண்டுகளில், தலைவர் இரா. சம்பந்தன், ‘தொடர்ந்தும் எம்மை ஏமாற்ற முடியாது!’ என்று, கடந்தவாரம் ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவைச் சந்தித்து கூறியமை தலைப்புச் செய்தியாகியிருக்கிறது.

இரா. சம்பந்தனும் 90 வயதானவர். ஆனந்தசங்கரியைவிட நான்கு மாதங்கள் மூப்பானவர். அரசியல் வாழ்விலும் இருவருமே சம வயதுடையவர்கள். சம்பந்தன் 1956இல் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்தார். ஆனந்தசங்கரி 1955இல் இலங்கை சமசமாஜ கட்சியில் இணைந்தார்.

முற்போக்கான அரசியல் சிந்தைகொண்ட பலரின் அரசியல் தொடக்கம் அப்போது சமசமாஜ கட்சி சார்ந்திருந்தது. ஆனால், இடதுசாரிக் கட்சிகளின் கொள்கைகளில் இன உரிமை தொடர்பில் பின்னர் ஏற்பட்ட மாற்றம், அரசியலில் ஈடுபடத் தலைப்பட்டவர்கள் அக்கட்சிகளிலிருந்து விலகி, வேறு கட்சிகளில் இணைய நிர்ப்பந்தித்தது. 1959 கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மேயர் வி. ஏ. சுகததாசவுடன் கொட்டாஞ்சேனையிலும், பின்னர் பாராளுமன்ற தேர்தலில் கிளிநொச்சி தொகுதியில் 1960, 1965 தெ்ர்தல்களிலும் சமசமாஜ கட்சி வேட்பாளராக போட்டியிட்டு தோல்வியுற்ற ஆனந்தசங்கரி, 1966இல் கரைச்சி கிராமசபைத் தலைவராகவிருந்தபோது சமசமாஜ கட்சியிலிருந்து விலகி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸில் இணைந்தார். கரைச்சி கிராமசபை தரமுயர்த்தப்பட்டபோது கிளிநொச்சி நகர சபையின் முதல் தலைவரான ஆனந்தசங்கரி, கிளிநொச்சி நகரின் பிதாமகர் என்ற ஸ்தானத்தைப் பெறுபவர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வாலிப முன்னணி தலைவராகவிருந்தபோது 1970 பொதுத் தேர்தலில் முதன்முதலாக பாராளுமன்றத்துக்கு ஆனந்தசங்கரி கிளிநொச்சி தொகுதியிலிருந்து தெரிவானார். பொதுவாக, தேர்தலில் வெற்றிகளே அரசியலில் உந்துதலையும் எழுச்சியையும் ஏற்படுத்துகின்றபோது, இலங்கைத் தமிழர் அரசியலில் இத்தேர்தலில் ஏற்பட்ட இரண்டு தோல்விகள் இலங்கைத் தமிழ் மக்களுடைய அரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தின. தமிழ் அரசுக் கட்சியின் தளபதியான அ. அமிர்தலிங்கமும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தளபதியான மு. சிவசிதம்பரமும் இத் தேர்தலில் தோற்றார்கள். தேர்தலில், லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைத்த சிறிலங்கா சுதந்திர கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க 1972இல் கொணர்ந்த புதிய குடியரசு அரசியலமைப்பு, இரண்டு தளபதிகளையும் ஓரணியில் சேர்த்தது. அது, தமிழர் அரசியலில் மிகத் துல்லியமாக வெளிப்பட்ட ஒரு பராக்கிரம பலத்தைச் சேர்த்தது.

எதிரும் புதிருமாக, பரம வைரிகளாகவிருந்த தமிழ் அரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகள் தமிழர் கூட்டணியாக இணைந்தமை, இவ் வேளையில் இன்னொரு வரலாற்றுக் காலத்துக்கு கால்கோளாய் அமைந்தது. சிறுபான்மை இனங்களுக்கு சோல்பரி அரசியலமைப்பிலிருந்த சில பாதுகாப்புகளையும் பறித்து அமைந்த புதிய அரசியலமைப்பு ஓர் அரசியல் விழிப்புணர்வை தமிழர் மத்தியில் ஏற்படுத்தியேயிருக்குமென்றாலும், பொதுவாக நினைக்க முடியாததாகவிருந்த ஓர் இன ஐக்கியம் இவ் வேளையில் இவ்விரு கட்சிகளிடையேயும் ஏற்பட்டு, மற்றும் கட்சிகளும் அதில் இணையும் ஒரு பொற் காலத்தைச் சமைத்தது, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகிய இருவரும் அத்தேர்தலில் தோற்றதன் விளைவுதான் என்பது, அரசியல் நோக்கில் ஏற்றுக் கொள்ளக்கூடியதே.

அடுத்துவந்த 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஈட்டிய வெற்றி, இந்த ஒற்றுமைத் திருப்பத்தின் தாத்பரியத்தை உணர்த்துவதை, அதன் பின்னரான அரசியல் வரலாறு உணர்த்தும். இரா. சம்பந்தன் இந்த தேர்தலில்தான் பாராளுமன்றம் வந்தார். திருகோணமலையில் அவரை வேட்பாளராக்குவதில் அமிர்தலிங்கம் காண்பித்த சறுசங்கமான முனைப்பை, சம்பந்தன் பாராளுமன்றத்தில் பின்னர் புரியவைத்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. யாக ஆனந்தசங்கரியும் அத் தேர்தலில் தெரிவாகியிருந்தார்.

‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும்’ என்பது அரசியலில் பின்னர் எப்படிப் போயிற்றோ ஆனால், அந்த தகர்க்கவியலாத ‘அமிர் - சிவா’ ஒற்றுமை, நம் இனம் கண்ட ஒரு பெரு வெற்றி. அந்த வெற்றியின் மகோன்னதத்தை மறந்ததும் மதிக்காததுமே சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் காலத்திலும் நாம் கேட்கும் ‘தொடர்ந்தும் எம்மை ஏமாற்ற முடியாது’ என்ற குரல்.

சம்பந்தன் - சங்கரி காலமாக தொடர்ந்த பின்னைய அரசியலில், அந்த தலைவர்களின் மேன்மை மதிக்கப்பட்டிருந்தால், பின்னைய அரசியல் போக்கு சிலசமயங்களில் மாறுதலாக இருந்திருக்கும். விக்கினேஸ்வரன் அல்லாமல், ஆனந்தசங்கரி வடமாகாண சபையின் முதல்வராகியிருக்க முடியும்.

ஆனால், ஆனந்தசங்கரி திட்டமிடப்பட்ட விதத்தில் அரசியலில் வஞ்சிக்கப்பட்டார் என்பது மறைத்துவிட இயலாத உண்மை. அரசியலில் அவருடைய நேர்மையிலும் - ஒளிவு மறைவற்ற கருத்துக்களிலும் - கட்சியிலும் பொதுமக்கள் மத்தியிலும் அவர் வஞ்சிக்கப்பட்டார். வஞ்சிக்கப்பட்ட அவர், பிற்காலத்தில் தன்னை நிலைநிறுத்துவதில் மேற்கொண்ட முயற்சிகள், அவரைப் பலவீனமடையச் செய்தன.

ஆனால் சங்கரி, ‘அமிர் - சிவா அடிச்சுவட்டில்’ பயணிக்கும் அரசியல் தலைவர். நீண்ட அரசியல் அநுபவத்தில், நம்முடைய அரசியல் வரலாற்றின் அசலான சாட்சியம் அவர். அமிர்தலிங்கம் தன்னுடைய சரிதையை எழுதியிருந்தால், அது நமது வரலாறாகியிருக்கும். இப்போது, அப்படியொரு வரலாற்றை எழுதவல்லவர் ஆனந்தசங்கரி.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வரலாற்று முக்கியத்துவத்துடனான தமிழர் விடுதலைக் கூட்டணி, இனிவரும் நாள்களிலாவது அதன் ஐக்கியத்தில், அதன் இலட்சியத்தை வெல்லவேண்டும். இதுவும், தலைவர் ஆனந்தசங்கரியின் பிறந்தநாள் வாழ்த்துக்களில் ஒன்றாகட்டும்.




## வியுக்தியார் பதில்கள்

**தி. துஷியந்தன், இருபாலை, கோப்பாய்.**

**கேள்வி:** *13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று வடக்கின் முக்கிய மான அரசியல்வாதி ஒருவர் தன்னிடம் கூறியமையைக் கேட்டு தான் அதிர்ச்சியடைந்தேன் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியிருக்கிறாரே?.*

**வியுக்தியார்:** அவருக்கு இப்படி யார் கூறியிருப்பார் என்பது தெரிந்ததுதான். கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரியின் 90வது பிறந்தநாள் வைபவத்தில் பேசிய மனோ கணேசன், அப்படி கூறியபோது நானும் அங்கே இருந்தேன். அப்படி தன்னிடம் கூறியது யார் என்பதை தன்னை அடித்து தன்புறுத்திக்கேட்டாலும் தான் சொல்லப்போவதில்லை என்ற பூடகத்துடன் தான் மனோ அந்தத் தகவலைக் கூறினார் என்றாலும், அவருக்கு யார் இப்படி சொல்லியிருப்பார்கள் என்பது நமக்கு தெரியாததல்லவே. அது வேறு ஒன்றுமல்ல, பதின்மூன்று ஒழிக்கப்படாமல் இருந்தால், அதன் கீழான மாகாண சபைக்கு தேர்தல் வந்தால் அந்த அரசியல்வாதியின் கட்சியும் தேர்தலில் போட்டியிடும். அதில் வெற்றி பெறுபவர்கள் மாகாண மட்டத்தில் அரசியலில் வளர்ந்துவிட்டால் அவருக்கு நெருக்கடி ஆகிவிடுமே என்று பயப்படுகின்றார் வேறு ஒன்றுமல்ல. மாநகர சபையில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தனது கட்சிக் காரரைக் கண்டே பயந்து நடுங்கியவர், அப்படித்தானே சொல்லுவார்.

---

**கந்தசாமி நிதர்சன் தவசிகுளம், கொடிகாமம்.**

**கேள்வி:** *யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குழு மோதல்கள், போதைப் பொருள் கடத்தல், கால் நடைகள் கடத்தல், மணல் கடத்தல் போன்ற சட்ட விரோத செயல்பாடுகளை தடுப்பதற்கு இராணுவத்தினர் ஒத்துழைக்க வேண்டும் என்று யாழ்ப்பாண அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் யாழ். மாவட்ட படைகளின் தளபதியிடம் கேட்டுள்ளாரே. இனி இவையெல்லாம் நடைபெறுவது குறைந்துவிடும் என்று நம்புகின்றீர்களா?*

**வியுக்தியார்:** பாவம் அரச அதிபர், நமது மக்கள் பிரதிநிதிகள் இவைபற்றி தெரிவிக்கும் புகார்களை அறிந்ததில்லைப் போல தெரிகின்றது. யாழப்பாணத்தில் நடக்கும் இதுபோன்ற குற்றச்செயல்களின் பின்னணியில் படையினர்தான் இருக்கிறார்கள் என்று நமது மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். அதனைத் தெரிந்துகொண்டு அவர் இப்படி படைத்தளபதியிடம் கோரிக்கை விடுத்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை. மனுசன் இவற்றை தடுக்க வேண்டும் என்ற இதயசுத்தியுடன்தான் கேட்டிருப்பார். ஆனால் நமது மக்கள் பிரதிநிதிகள் இனி, திருடனையே பொலிஸ்காரன் வேலை பார்க்க சொல்வதா என்று கேள்வி எழுப்பாமல் இருந்தால் சரி.

---

**கே. ரமணன், மாமாங்கம், மட்டக்களப்பு.**

**கேள்வி:** *அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வடக்கு-கிழக்குக்கு பாரிய இராணுவப் பட்டாளங்களோடு சென்று வருகிறார். அவருடைய பணிப்புரையின் கீழ்தான் சட்ட விரோத காணி அபகரிப்புகள் இடம்பெற்று வருகின்றன. அதனால் விதுர விக்ரமநாயக்கவை ஜனாதிபதி பதவி விலக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறாரே.*

**வியுக்தியார்:** அமைச்சர் விதுரவின் பணிப்பின் கீழ்தான் சட்டவிரோத காணி அபகரிப்புக்கள் இடம்பெறுகின்றன என்றால், ‘எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர்”’ என்று ரணிலாலேயே பாராட்டைப்பெற்ற நமது சுமந்திரன், சட்டரீதியாகவே அதனை அணுகியிருக்கலாம். அது சரி... ராணுவ பாதுகாப்புடன் ஓர் அமைச்சர் வடக்கு கிழக்குக்கு சென்று வருவதை அவரெல்லாம் விவகாரமாக்கலாமா என்பதுதான் தெரியவில்லை. தனக்கு வாக்களித்த மக்கள் மத்தியிலேயே அதிரடிப் படையின் பாதுகாப்புடன் நடமாடித்திரிந்ததை அவர் மறந்துவிட்டாரோ தெரியவில்லை.

---

**எஸ். சிவராமகிருஸ்ணன், வெள்ளவத்தை, கொழும்பு 6.**

**கேள்வி:** *கண்ணாடி முன் நின்று பார்க்கும் போது நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரை காண்பதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளாரே.. அவர் ராணுவத்தை வழிநடத்துவதுபோலத்தான் நாட்டை வழிநடத்துவதும் என்று நினைத்துவிட்டாரோ?*

**வியுக்தியார்:** என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? அவர் இந்த நாட்டை வழிநடத்துவார் என்று நம்பித்தானே நமது பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டது. நாமும் அவருக்கு வாக்களித்தோம். ஆனால் அவர் ரணிலின் வீட்டு கண்ணாடியின் முன்னால் நின்று தன்னைப் பார்த்தபோது பின்னால் ரணில் நின்றதும் கண்ணாடியில் தெரிந்திருக்குமோ தெரியவில்லை. ஏனெனில் அவர் சஜித்தின் கட்சியில் இருந்தாலும் சஜித் நாட்டை ஆளுவதற்கு தகுதியில்லாதவர் என்று பலதடவை சொல்லிவிட்டாரே.

---

**டேவிட் நிரஞ்சன், உம்குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** *ஊடகங்களை நசுக்கும் வகையில் அரசாங்கம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ள சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அனுமதிக்கப்படமாட்டாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்திருக்கிறாரே?*

**வியுக்தியார்:** ஊடகங்களை கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் கொணடுவரவிருக்கும் புதிய சட்டம் தொடர்பாக பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஆனால் அந்த சட்டமூலம் தொடர்பாக இன்னமும் முழுமையான விபரம் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அது ஊடகங்களை நசுக்கும் வகையில் இருக்குமானால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதுதான். ஆனால் அதுவல்ல இப்போது பிரச்சினை, நாடாளுமன்றில் அதனை நிறைவேற்ற அனுமதிக்கமாட்டோம் என்கின்ற ஜேவிபி தலைவரிடம் மூன்று எம்.பிக்கள்தானே இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு எப்படி இவர் சவால்விடுகிறார் என்பதுதான் தெரியவில்லை.



# திவ்ய தரிசனம்

மனோ சின்னத்துரை

திவ்யமூர்த்தி மாமாவின் அறை காலை ஏழுமணியாகியும் பூட்டிக் கிடந்தது. காலை ஏழுமணிக்கெல்லாம் எழும்பி சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிடுவார். சிலவேளைகளில் நான்கு மணிக்கே அவரது அறையிலிருந்து வெளிச்சம் வரும் ஏதாவது புத்தகம் படித்துக்கொண்டிருப்பார். இன்று இவ்வளவு நேரம் அவர் தூங்குவது அதிசயமாக இருந்தது.

கதவைத் தட்டிப் பார்ப்பதற்கும் எங்களுக்குப் பயமாக இருந்தது. அவர் எப்போது சீறிவிழுவார் எப்போது அன்பாகக் கதைப்பார் என்பதை புரிந்துகொள்வது சிரமமாக இருந்தது.

நான் பிறந்த நாள்முதலே மூர்த்தி மாமா எங்களுடன்தான் இருக்கிறார்.

அம்மாவின் தூரத்து உறவு முறையான திவ்யமூர்த்தி எப்படி எங்களுடன் வந்து சேர்ந்தார் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது.

நாங்களும் அவரை மாமா என்றே அழைத்தோம். அப்பாவின் நண்பராகவும் பல சமயங்களில் ஆலோசகராவும் அவர் இருந்தார். அம்மாவுக்கு அவர்மீது அளவுகடந்த பாசம் இருந்தது. அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவரிடம் நிறைய நில புலன்கள் இருந்தன. அவற்றை எங்களுக்கு அவர் கொடுத்தபோது அப்பாவும் அம்மாவும் ஒருசேர மறுத்துவிட்டனர். அவர் அதை ஆதரவற்றோர் இல்லங்களுக்கு எழுதிக் கொடுத்தார். எங்கள் குடும்பத்திற்கு அவர் எல்லா வழிகளிலும் தாராளமாக உதவினார். எங்கள் குடும்பத்தின் மரியாதைக்குரிய மூர்த்திமாமா இதுநாள் வரை நோய் என்று படுத்ததில்லை. ஒய்வுக்காலத்திலும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார். அவர் இயங்குவதற்கு நிறைய வேலைகள் அவர் முன்னால் குவிந்துகொண்டிருந்தன. அவர் தனக்குரிய வேலைகளை எப்போதும் உற்பத்தி செய்துகொண்டே இருந்தார். வேலைகள் தலைக்குமேலே கூடிய போது சூழ இருப்பவர்மேல் தன் சினத்தைக் கொட்டினார்.

மாமாவின் கதவைத் தட்டிப்பார்க்கும்படி அம்மா என்னைக் கேட்டுக் கொண்டா. எனக்கென்றால் ஏச்சுக் குறைவாகவிழும் என்பது அம்மாவின் எதிர்பார்ப்பு. இரவு முழுவதும் மாமா நித்திரையின்றி இருந்ததாக அம்மா சொன்னார். வழமையைவிட அதிகமாக கழிப்பறையை பயன்படுத்தியாகவும் சொன்னா. நேற்று அவரது அக்கா இறந்த செய்தி வந்ததிலிருந்து அவர் அசாதாரண நிலையில்தான் இருந்தார். அவரை பலர் தொலைபேசியில் அழைத்தனர்.

இருபது ஆண்டுகள் இல்லாத தொடர்பு. அக்கா, தம்பி என்ற பந்த பாசம் அறுந்த உறவு. ஒரு மரணத்தில் துளிர்க்கிறதா?

மூர்த்திமாமா ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமானார். அவருக்கு வந்த அழைப்புகள் பலரகம். துயர் பகிர்ந்தன சில. புதினம் அறியத் துடித்தன சில. உறவுகளை திரும்பவும் சேர்க்கமுயன்றன சில. மாமா தனக்கும் அக்காவுக்குமான இடைவெளியை கொஞ்சமும் வெளிக்காட்டிக்கொள்ளாது மிகவும் சாதுரியமாக உரையாடிக்கொண்டிருந்தார்.

சிலர் சமாதானத்தூதுவராகி சிக்கல்களை மேலும் சிக்கலாக்கிக் கொண்டிருந்தனர். இது மாமாவுக்கு எரிச்சலைத் தந்தது.

மாமா எப்போதும் தன்மீது அதீத நம்பிக்கை கொண்டவர். யார் பேச்சையும் இலகுவில் கேட்கமாட்டார். ஆனால் அவர்கள் சொல்வதிலிருக்கும் நேர்மறைகளை திரும்பத்திரும்ப அலசுவார். உடனடி முடிவுகள் எடுக்கமாட்டார். நேற்று இரவு முழுவதும் தன் மூளையைப்போட்டு கசக்கிப் பிழிந்திருப்பார். அதனால் நித்திரையின்றி உளன்றிருப்பார்.

மாமா கதவைத்திறந்து வெளியே வந்தார். அவரது கண்கள் உப்பிக்கிடந்தன. அவர் புன்முறுவல் செய்தார். ‘மாமா ரீ போடவா?’ என்றார் அம்மா. அவர் எதுவும் சொல்லாது குளியல் அறைக்குள் சென்றார். நீண்ட நேரம் குளித்துக்கொண்டிருந்தார்.

சாப்பாட்டு மேசையில் அம்மா ரீயையும், பாணையும் வைத்தா. அவர் மாத்திரைகளுடன் வந்தமர்ந்தார்.

‘என்ன மாமா போன் பண்ணிக் கதைச்சியளே?’

அம்மா கேட்டா.

அவர் தலையை அசைத்தார். ஓமா இல்லையா என்பது தெளிவில்லாதிருந்தது. திரும்பக்கேட்க அம்மாவுக்கு பயமாக இருந்தது.

‘இப்ப நான் போன் பண்ணி என்ன நடக்கப்போகுது?’ பிள்ளையள் வளந்திட்டுதுகள். ஏதோ நடக்கும்தானே?’ மாமா ரீயை உறிஞ்சியபடி சொல்லிக் கொண்டிருந்தார்.

‘இல்லை மாமா என்ன இருந்தாலும் அக்கா. இந்த நேரத்தில் நீங்கள் எடுத்து ஆறுதல் சொல்றதுதான் முறை.’

‘இருபதுபது வரிசமாக இல்லாத ஆறுதல் இப்ப மட்டும் என்னத்தைச் செய்துவிடப்போகுது?’

‘அப்பிடியெண்டில்லை மாமா. நாளைக்கு நாலு பேர் நாலு விதமாய்க் கதைப்பினம்..’ அம்மா இழுத்தா.

‘கதைக்கட்டுமன். எனக்கென்ன! எனக்குச் சரியெண்டு படுகிறதைத்தான் நான் செய்யேலும்.’

மாமாவோட கதைக்கேலாது. ஒரு முடிவு எடுக்கமாட்டார். முடிவெடுத்தா அவரிடமிருந்து அதைப் பிடுங்குவது கடினம். மாமாவின் மனம் சிலவேளைகளில் கடுமையாகவே இறுக்கிடந்தது.

மாமாவிடம் ஏதோ ஆழ்மனத் தாக்கம் இருப்பதை எங்களால் உணர முடிந்தது.

மாமா தன்னுடைய பால்ய பருவத்துக் கதைகள் பலவற்றை எங்களோடு பகிர்ந்திருக்கிறார். அதில் பல உளச்சிக்கல்கள் இருந்தன. அவிழ்க்கப்படாத முடிச்சுகள் இருந்தன. பலருடைய முடிச்சுகளை அவிழ்க்கத்தெரிந்த மாமாவுக்கு தன்னுடைய முடிச்சுகளை அவிழ்க்கத் தெரியாதிருந்ததுதான் விந்தையானது.

மாமாவுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். அவர்களிடம் நிறையக் கதைகள் இருந்தன. நாப்பது ஐம்பது வருடக்கதைகள் மாமாவிடம் பசுமையாக இருந்தன. காலம் கோபங்களைத் தணித்திருந்தாலும் இடைவெளிகளைக் குறைக்க மாமாவால் முடியவில்லை. பாடசாலைக் காலங்களில் தான் பல நண்பர்களுடன் பேச்சை நிறுத்தியதாகச் சொன்னார். விளையாட்டுப் பருவங்களில் ஏற்பட்ட சின்னச்சின்னக் காயங்களும் மாமாவுக்குப் பெரிதாய்த் தெரிந்தன. காயங்களை தனக்குள்ளே வைத்து அமுக்கினார். தனக்குள்ளேயே வெந்து தணித்தார். நண்பர்களுக்கே தெரியாத காயங்கள் அவை. மாமாவால் மற்றவர்களுக்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடாது. தன்னைத்தானே வருத்தும் ஒருவகை நோயாளி மாமா.

மாமாவிடம் இன்னொரு சிக்கலும் இருந்தது. உலகோடு ஒத்தோடத் தெரியவில்லை. எதிலும் சுத்தம். எதிலும் நூறுவீதம் தூய்மையை எதிர்பார்த்தார். பொய்யாகச் சிரிக்க மாமாவுக்கு வராது. போலியாகச் சிரிப்பவர்களையும் மாமாவுக்குப் பிடிக்காது. மொத்தத்தில் நடிக்க அவர் சிரமப்பட்டார். அதனால்தான் அவரது வாழ்க்கை தனித்தும் கிடந்தது.

மாமா வெளிக்குத் தெரியாத ஒரு வெட்கப்பேர்வழி. கோபம் போட்டுவிட்டு எப்படி திரும்பக் கதைப்பது என்ற சிறுபிள்ளை மனநிலை மாமாவிடம் இன்னும் தேங்கிக்கிடக்கிறது.

மிக அண்மையில் ஒரு நாள், தன்னை சிறுவயதில் பாதித்த நாடகங்கள் பற்றிச்சொன்னார்.

ஏழுபிள்ளை நல்லதங்காள். அரிச்சந்திர மாயான காண்டமே அவை. இது நாள் வரையில் அந்த நாடகங்களைப் பற்றிச் சிலாகித்துப்பேசிவந்த அவர் அந்த நாடகங்கள் தன்மீது ஏற்படுத்திய எதிர்மறைத் தாக்கங்கள் பற்றிப் பேசினார். தான் அந்த நாடகங்களைப் பார்த்தபோது தனக்கு ஒன்பது பத்து வயதிருக்கும். அவை தன் வயதுக்கு மீறிய நாடகங்கள் என்பதை தான் இப்போது உணருவதாக அவர் கூறினார்.

பசி, வறுமை, ஏழ்மையின்பால் இரக்கம் கொள்ளவைத்த நாடகம் நல்லதாங்காள். உண்மை நேர்மை சத்தியத்தைப் போதித்த நாடகம் அரிச்சந்திர மயானகாண்டம். ஓம். நல்ல விடயம் தான். அதுவே தன்னை நேர்வழிவழிப்படுத்தியதாக அவர் இன்னமும் நம்புகிறார். ஆனால், அதன் எதிர்மறை விளைவுகள் பற்றிய அவரது புதியகோணம் வித்தியாசமாகவே இருந்தது. தனது ஏழுபிள்ளைகளையும் பசிதாங்கமுடியாது கிணற்றுக்குள் போட்டுவிட்டு நல்லதங்காள் தானும் தற்கொலை செய்து கொண்டபோது மாமாவுக்கு வயது ஒன்பது. அந்தப் பிள்ளைகளுள் ஒருவராக மாமா தன்னையும் வைத்துப்பார்த்து துடிதுடித்திருக்கிறார். தனக்குள்ளேயே குமுறியிருக்கிறார். யாரிடமும் சொல்லமுடியாத அல்லது சொல்லத் தெரியாத பால்யப் பருவம் அது.

அரிச்சந்திரனும், சந்திரமதியும் பட்ட பாட்டை விட லோகிதாசன் மாமாவை அதிகம் பாதித்திருக்கிறான். தன்னை லோகிதாசனாக கற்பனை செய்து மாமா துவண்டு போயிருக்கிறார். இந்த உளத்தாக்கங்கள் மாமாவை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. இதிலிருந்து விடுபட மாமா வெகுவாகப் போராடி வருகிறார்.

தொலைபேசி அடித்தது. அம்மா தொலைபேசியை எடுத்தா. அம்மாவின் முகத்தில் ஆச்சரியத்தின் குறிகள் அப்பித்தெறித்தன. செத்துப்போன மாமாவின் அக்காவின் மகள் அது.

‘மாமா உங்களுக்குத்தான் போன்’

மாமா திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

# தாய்லாந்தில் கேள்விக் குறியாகும் மன்னர் ஆட்சி!

## ஜனநாயக தேர்தலால் முடிவுக்கு வந்த இராணுவ ஆட்சி!!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

நீண்ட காலமாக தாய்லாந்து நாடு முழுவதும் மன்னர் ஆட்சி மற்றும் இராணுவ ஆட்சிக்கு எதிராகத் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இராணுவ ஆட்சிக்கு முடிவுக்கு வந்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் தாய்லாந்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி ஜனநாயக ஆட்சியைக் கலைத்தது.

இதனைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி மற்றும் மன்னர் முறைக்கு எதிராக தாய்லாந்து இளைஞர்கள் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தி வந்தனர். இதன் விளைவால் தாய்லாந்தில் இராணுவ ஆட்சிக்கு முடிவுக்கு வந்துள்ளது. ஆயினும் அங்கே மன்னர் ஆட்சிக்கும் முடிவு வருமா என்பது கேள்விக்குறியே ?

தொடர்ந்த போராட்டங்களுக்கு மத்தியில், தாய்லாந்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, கடந்த மே மாதம் 14 ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில், இராணுவத்திற்கு ஆதரவான கட்சிக்கும், எதிர்க்கட்சிகளான போர்வர்ட், பியூதாய் கட்சிகளுக்கு மிடையே போட்டி நிலவியது.

இதில், பியூதாய் கட்சி 141 இடங்களிலும், போர்வர்ட் கட்சி 11 இடங்களிலும் வெற்றி பெற்றதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், அந்த நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.



### தாய்லாந்தில் மன்னராட்சி

தாய்லாந்து என்றதும் நீண்டு உயர்ந்த புத்த ஆலயங்களும், புன்னகை அரசிகளின் இரவைப் பகலாக்கும் வீதிகளும் நினைவுக்கு வரும். அது மாத்திரமின்றி தாய்லாந்தில் தமிழர்களின் பாரம்பரிய விழுமியங்களையும் காணலாம்.

உலகில் விரல்விட்டு எண்ணக் கூடிய ஓரிரு நாடுகளுள் தாய்லாந்திலும் மன்னராட்சி இன்னமும் தொடர்கிறது. அந்நாட்டின் அரசுத் தலைவரும், இராணுவப் படைகளின் தலைவரும், பௌத்த மதத்தை மேனிலைப் படுத்துபவரும், அனைத்து நம்பிக்கைகளுக்கும் பாதுகாவலருமாக மன்னர் விளங்குகிறார்.

71 மில்லியன் மக்கள் தொகை கொண்ட தாய்லாந்தில் அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி மற்றும் மக்களாட்சி முறை நடைபெறுகிறது. அதாவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதமர் அரசின் தலைவராகவும், மன்னர் நாட்டிற்குத் தலைவராகவும் இருப்பார்கள். மன்னரின் கையே எப்போதும் ஓங்கி இருக்கும்.



> தாய்லாந்தில் இராணுவ ஆட்சிக்கு முடிவுக்கு வந்துள்ளது. ஆயினும் அங்கே மன்னர் ஆட்சிக்கும் முடிவு வருமா என்பது கேள்விக்குறியே

ஆயினும் தாய்லாந்தில் அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்ட மன்னராட்சி இணைந்த மக்களாட்சி முறை இருந்தாலும், மன்னரே நாட்டிற்குத் தலைவராகவும் இருப்பார். அத்துடன் மன்னரின் கையே ஆட்சி அதிகாரத்தில் ஓங்கி இருக்கும்.

1946 முதல் 70 ஆண்டுகள் தாய்லாந்தை தொடர்ச்சி யாக ஆட்சி செய்து வந்தவர் ஒன்பதாவது ராமா என்ற ழைக்கப்பட்ட பூமிபால் அதுல்யதேஜ். நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னர் என்ற பெயரும் இவருக்குண்டு. தாய்லாந்து மக்களுடன் நல்ல உறவை பேணி வந்த இவர் கடந்த 2016 அக்டோபர் மாதம் உயிரிழந்தார்.

இதனால், மகன் வஜிரலங்கோன் தந்தையின் மரணத் திற்கு ஒரு வருடம் துக்கம் அனுசரிக்க உத்தரவிட்டார். அனைத்து கொண்டாட்ட நிகழ்வுகளும் தடைபட்டது. தந்தையின் மரணத்திற்குப் பின், மூன்றாண்டுகள் கழித்து 2019-ம் ஆண்டு வஜிரலங்கோனுக்கு முடிசூட்டு விழா பிரமாண்டமாக நடைபெற்றது. ஆனால் மன்னரின் நடவடிக்கைகள் மக்களை பெரிதும் ஈர்க்கவில்லை.

வஜிரலங்கோனின் மோசமான சட்டங்களை யாரும் எதிர்க்க முன்வரவில்லை. மீறி எதிர்த்தால், சிறை. அதையும் மீறி எதிர்ப்பை தொடர்ந்தவர்கள் கடத்தப்பட்டு மாயமானார்கள். இதுவே தாய் இளைஞர்களையும், மாணவர்களையும் கோபத்தில் ஆழ்த்தியது.

மன்னரின் கீழான நாடாளுமன்ற சபையைக் கலைக்க வேண்டும், மக்களை அச்சுறுத்தும் சட்டங்களை அகற்ற வேண்டும், புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்தனர்.

ஆனால் மன்னரோ, தன் மனைவியுடன் ஓய்வெடுக்க ஜெர்மனிக்கு பயணம் செய்து விட்டார். மன்னராட்சி முடிவுக்கு வந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதே தாய் மக்களின் தற்போதைய அவாவாக இருந்தது.

### மக்களாட்சி தோல்வியுற்றதா ?

1973 ஆம் ஆண்டு முதல் தாய்லாந்தின் மக்களாட்சி பலமுறை ஆட்டம் கண்டது. 1976 ஆம் ஆண்டு சதிப் புரட்சியை அடுத்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. 1980களின் பெரும்பாலான காலப்பகுதியில் பிரேம் தின்சுலாநந்தா பிரதமராகப் பதவியில் இருந்தார்.

இவர் நாடாளுமன்ற ஆட்சியை மீள அமுல் படுத்தி மக்களாட்சியைப் படிப்படியாகக் கொண்டு வந்தார். அதன் பின்னர் 1991-1992 காலப்பகுதியிலும் இராணுவ ஆட்சியில் இருந்த தாய்லாந்தில் மக்கள் பல எதிர்ப்பு போராட்டங்களை நடாத்தினர்.

பிரபலமான தாய் ராக் தாய் கட்சியின் தலைவர் தக்சின் சினவாத்ரா பிரதமராக இருந்து 2001 முதல் 2006 வரை ஆட்சி நடத்தினார். ஆயினும் மீள 2006 செப்டம்பர் 19 இல் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவம் அரசியலமைப்பை இடைநிறுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்து இராணுவ ஆட்சியை அமைத்தது.




இதன் பின்னர் தாய்லாந்தில் மக்களால் தேந்தெடுக்கப்பட்ட ஆட்சி கடந்த 2014 ஆம் ஆண்டு இராணுவத்தினால் கலைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தாய்லாந்தின் முன்னாள் இராணுவ தளபதி பிரயுத் சான் ஈ சா அந்நாட்டின் பிரதமரானார்.

### மக்களாட்சி மீண்டும் நிலைக்குமா ?

இவரது தலைமையிலான இராணுவ ஆட்சிக்கு எதிராகவும், மன்னர் முறைக்கு எதிராகவும் அந்நாட்டு இளைஞர்கள் போராட்டம் நடத்தினர்.

தாய்லாந்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

கடந்த மே 14 ஆம் திகதி தாய்லாந்தில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில், பிரதான எதிர்க்கட்சியான பார்வர்டு கட்சியின் தலைவர் பிடா லிம்ஜாரோ என்ரட்டா பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். 41 வயது தொழிலதிபரான அவருக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது.

இந்த நிலையில் தேர்தலில் இராணுவ ஆதரவு கட்சிகளை எதிர்க் கட்சிகள் விழ்த்தியுள்ளன. 500 உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் சபையில், எதிர்க் கட்சிகளான பார்வர்டு கட்சியும், பியூ தாய் கட்சியும் சுமார் 286 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.

இதில் 147 இடங்களை பார்வர்டு கட்சி பெற்றுள்ளது. மேலும், சில கட்சிகளின் ஆதரவுடன் பார்வர்டு கட்சி ஆட்சி அமைக்கும் என்றும் பிடா லிம்ஜாரோ என்ரட்டா பிரதமராக பதவி ஏற்பார் என அறிவிக்கப்பட்டது.

நாட்டினில் கடந்த சில வருடங்களாகவே பார்வர்டு கட்சிக்கு இளைஞர்களிடம் தீவிரமான ஆதரவு இருந்து வந்ததாகவும், அது பொதுத் தேர்தலிலும் எதிரொலித்துள்ளது. இத்தேர்தல் முடிவை அடுத்து, ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இராணுவ ஆட்சி இல்லாத ஜனநாயக முறையிலான ஆட்சி தாய்லாந்தில் அமையவுள்ளது.

படு தோல்வி அடைந்த இராணுவத்தின் ஆதரவு பெற்ற ஆளும் கூட்டணியில் உள்ள இரண்டு கட்சிகள் வெறும் 15% வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.



## நுவரெலியாவில் மண் மேடு சரிந்து மாமனாரும் மருமகனும் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 18

நுவரெலியாவை அண்மித்த பழைய கச்சேரியை அண்மித்த வீடொன்றில் கொங்கிறீட் சுவர் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த கொத்தனார்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவர் மீதும் நேற்று முன் தினம் பிற்பகல் மண் மேடு சரிந்து விழுந்ததினாலேயே உயிரிழந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் கூறினர்.

இச்சம்பவத்தில் காலி வெலிஹேன பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பி.எம்.சி.ருக்ஷான் (வயது-23) மற்றும் கே.நிலந்த (வயது-43) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

மண்மேட்டில் சிக்கியிருந்த இருவரையும் பிரதேச வாசிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பெரும் முயற்சியுடன் மீட்டு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த கொங்கிரீட் சுவர் அமைக்க ஒப்பந்தம் பெற்றுள்ள ஒப்பந்ததாரர் எந்தவித பாதுகாப்பு உபகரணங்களையும் பயன்படுத்தவில்லை என பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட வைத்தியரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சீனிகம துப்பாக்கிச் சூட்டில் காயம்

கொழும்பு, ஜூன் 18

மீட்டியாகொட சீனிகம தேவாலயத்திற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ரத்கம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

அவர் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர் பயணித்த வாகனத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்றும் அவர் வாகனத்தை ஹிக்கடுவ பொலிஸ் நிலையத்திற்கு ஓட்டிச் சென்றார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அதிகாரிகள் அவரை சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் துப்பாக்கிச் சூட்டின் பின்னணி குறித்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை. (அ)

# வடமராட்சி கிழக்கில் இடம்பெறும் சுருக்குவலை தொழிலால் பாதிப்பு

### அன்னராசா குற்றச்சாட்டு

வடமராட்சி, ஜூன். 18

வடமராட்சி கிழக்கில் இடம்பெறும் சுருக்குவலைத் தொழிலால் வடமராட்சியிலிருந்து காங்கேசன் துறை கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும், இதனால் கடற்றொழில் சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் வடக்கு மாகாண மீனவர் அமைப்பு பிரதிநிதியும் முன்னாள் யாழ். மாவட்ட மீனவர் சம்மேளனத் தலைவருமான அ.அன்னராசா தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆயிரக்கணக்கான மீன்களை சுருக்குவலை மூலம் பிடிப்பதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சுருக்குவலை தொழில் குறைந்திருந்தது.

இந்த பிரதேசத்தில் மீனவர்கள் சூடைத் தொழிலில் ஈடுபடும்போது குறிப்பிடத்தக்க சூடைகளைப் பிடித்து தங்களுடைய வாழ்வாதாரத்தை ஈட்டக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது.

ஆனால் மீண்டும் இந்த சுருக்கு வலை தொழில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

வடமராட்சி கிழக்கில் சட்ட விரோத சுருக்குவலைத் தொழிலில் ஈடுபடுவதனால் பருத்தித்துறையில் இருந்து காங்கேசன் துறை வரையான மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்திலேயே நாங்கள் எந்தவிதமான சட்ட விரோத தொழில்களிலும் சுருக்கு வலை தொழில்களிலும் ஈடுபடுவதில்லை.

இது தொடர்பில் நாங்கள் எடுத்துக் கூறினால் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

சுருக்குவலை என்பது எங்களுக்கு மிகப்பெரிய ஆபத்தானது. எங்கள் கடல் வளங்களையும் கடத்தொழிலாளர்களையும் கருவறுகின்ற செயல்பாடு-என்றார். (அ-2)

# முதலீட்டு செயல்முறைகளை எளிமையாக்க புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானம்

### அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

இலங்கையில் தற்போதுள்ள சிக்கலான சட்டங்களுக்குப் பதிலாக இந்த வருட இறுதிக்குள் முதலீடுகள் தொடர்பான புதிய சட்டம் கொண்டுவரப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், இலங்கையில் முதலீடு செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல்கள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்த உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வுகள் உட்பட வசதிகளை வழங்க உலக வர்த்தக மையத்தில் முதலீட்டாளர் வசதி மையம் நிறுவப்பட்டுள்ளது என்றும் இந்த மையம் அனைத்து அரச நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படும் என்றும் திலும் அமுனுகம தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் தமது பிரச்னைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களிடம் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும், தமது பிரச்னைகளை தாமதமின்றி தீர்த்துக்கொள்ள இந்த நிலையம் அவர்களுக்கு உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படும் வரை தற்காலிக தீர்வாக இந்த நடைமுறை அமுலில் இருக்கும் என்றும் இலங்கையில் முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் சிக்கலான சூழ்நிலைகள் அடுத்த வருடத்திற்குள் களையப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (அ)






# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவ அலகு பீடமாகியது

மட்டக்களப்பு, ஜூன் 18

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிறேமஜெயந்தவினால் கையொப்பமிடப்பட்டு, இம்மாதம் 12 ஆம் திகதி, அதி சிறப்பு வர்த்தமான அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரகடனத்தின் படி, இதுவரை காலமும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழ் இருந்த சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. அடிப்படைத் தத்துவம், குணபாடம், நோய் நாடல் மற்றும் சிகிச்சை ஆகிய மூன்று கற்றல் துறைகள் சித்த மருத்துவ பீடத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் பாரம்பரிய வைத்திய முறைமையான சித்த வைத்தியத்தை முறையாகக் கற்பித்து அங்கீகரிக்கும் முனைப்புடன் கிழக்கு மாகாண சித்த வைத்தியர்கள் சங்கத்தினால், சித்த மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை 2004 ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக் கழகத்திடம் முன்வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடத்தைத் தாபிப்பதற்கு கிழக்கு பல்கலைக்கழகப் பேரவை தீர்மானித்ததுடன், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக திருகோணமலை, கப்பல்துறை ஆயுர்வேத வைத்தியசாலையில் விசேட சித்தமருத்துவ நிபுணர் மருத்துவர் என். வர்ண குலேந்திரன் கல்விசார் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்.

அதன்பின் 2007 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுதேச வைத்தியத்துக்கான நிலையியற் குழு, கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சை மாணி பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியை வழங்கியது. அதன்படி 20 மாணவர்கள் சித்த மருத்துவத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

2010 ஆம் ஆண்டளவில் இந்திய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க சித்த மருத்துவ பீடத்துக்குத் தேவையான சகல பௌதிக வளங்களும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதோடு, ஆறு ஆய்வு கூடங்களும் அமைக்கப்பட்டன. அத்துடன் சித்த மருத்துவ அலகில் கற்கின்ற மாணவர்களின் பயிற்சிகளுக்காக கோணேசர்புரியில் அரசாங்கத்துக்குச் சொந்தமான 7 ஏக்கர் காணியில் சித்த மருத் துவ போதனா வைத்தியசாலை யும் அமைக்கப்பட்டது. இதன் மூலம் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சைமாணிப் பட்டதாரிகள் ஒரு வருட உள்ளகப் பயிற்சியையும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சை மாணி பட்டதாரிகள் இலங்கை ஆயுர்வேத மருத்துவப் பேரவையில் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட சித்த மருத்துவர்களாக சிகிச்சையில் ஈடுபட வழிசெய்யப்பட்டது.

இந்நிலையில், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடத்தைத் தாபிப்பதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிறேம ஜெயந்தவினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பீடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

(அ)

# கடனுக்கு மேல் கடனைப் பெற்று அரசு மக்களை கஷ்டத்திற்கு உள்ளாக்குகிறது

## மயந்த திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 18

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் இன்றி, எதிர்க்கட்சியின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாது, அரசாங்கம் கடனுக்கு மேல் கடனை பெற்று நாட்டு மக்களை கஷ்டங்களுக்கு உள்ளாகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இணையத்தளம் ஒன்று இலங்கையின் வறுமை நிலைமை தொடர்பாக அண்மையில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் 30 லட்சமாக இருந்த வறிய மக்களின் எண்ணிக்கை தற்போது 70 லட்சமாக அதிகரித்துள்ளது.

இலங்கை மக்கள் தொகையில் 50 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் பொருளாதார கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனினும் அரசாங்கம் பொருளாதாரம் வழமைக்கு திரும்பி வருவதாக கூறி, கடனைப் பெற்று பொருளாதாரம் வீழ்ச்சியடைய நடவடிக்கை எடுத்து வருகிறது.

எமது பொருளாதாரத்தை வளர்ச்சி நிலைமைக்கு கொண்டு செல்ல வேலைத்திட்டம் ஒன்று அவசியம்.

பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் எமது கட்சியின் தலைவர் மற்றும் கட்சியின் பொருளாதார குழு சுட்டிக் காட்டி வந்துள்ளது.

நாங்கள் கூறுவதை பெரிதாக கவனத்தில் கொள்ளாது, அரசாங்கம் கடனுக்கு மேல் கடனை வாங்கி மக்களை கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகிறது.

இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய திறமையான அணி ஐக்கிய மக்கள் சக்தியிலேயே இருக்கின்றது - என்றார்.

(அ)

# தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் கோரவில்லை

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஜூன் 18

அரசாங்கத்தின் புதிதாக முன்மொழியப்பட்ட தொழிலாளர் சட்ட சீர்திருத்தங்கள் சர்வதேச நாணய நிதியம் அல்லது வேறு ஏதேனும் ஒரு அமைப்பால் இயற்றப்பட்டதோ அல்லது முன்மொழியப்பட்டதோ அல்ல எனத் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

புதிய தொழிலாளர் சட்டங்களை இயற்றுமாறு சர்வதேச நாணய நிதியமோ அல்லது வேறு எந்த சர்வதேச நிறுவனமோ இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய சீர்திருத்தங்களில், பாரபட்சம் மற்றும் பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட எந்த விதமான துன்புறுத்தலையும் தடுக்க சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் கூறினார்.

சட்ட சீர்திருத்தங்களில் பகுதி நேர வேலையும் அடங்கும், அதே நேரத்தில் பெண் தொழிலாளர்களுக்கான இரவு ஷிப்ட் விதிமுறைகளும் தளர்த்தப்படும் என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறினார்.

(அ)

# தமிழக அரசியலில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதை பாஜக தலைவர் மறந்துவிட்டார் என்ற பொருளில்) அண்ணாமலை கூட்டணி தர்மத்தை மீறிவிட்டதாக முன்னாள் அதிமுக அமைச்சர் டி ஜெயக்குமார் குற்றம் சாட்டினார். ஆனால் அண்ணாமலை அசராமல், “எனக்கு யாரும் கூட்டணி தர்மம் குறித்துக் கற்றுத் தர வேண்டாம்” என்று பதிலடி கொடுத்தி ருக்கிறார்.

அதிமுக தலைவர்களுக்கும் அண்ணாமலைக்கும் இடையே நடந்த இந்தச் சொற்போர், தமிழ் அரசியல் வட்டாரங்களிலும் ஊடகங்களிலும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி, வரும் மே மாதம் நடைபெறவுள்ள பாராளு மன்றத் தேர்தலில் அதிமுகவுடனான கூட்டணியை பாஜக முறித்துக்கொள்ளக்கூடும் என்ற கணிப்பையும் ஏற்படுத்தியது.

அண்மையில் இம்மாநிலத்திற்கு வந்திருந்த அமித்ஷா, தமிழகத்தில் குறைந்தது 25 இடங்களையாவது வெல்ல பாஜக உறுதிகொண்டுள்ளதாகவும் மூன்றாவது முறையாக மோடி பிரதமராவார் என்றும் கூறியிருந்த நிலையில், கூட்டணி முறிவுக்கெல்லாம் இப்போது போது மான நேரமில்லை. தமிழகத்தில் பாஜகவிற்கு 8-க்கு மேல் வாக்கு சதவிகிதம் இல்லை. அதிமுக தொண்டர் படை பலம் ஒன்றரை கோடிக்கும் அதிகம் என்று ஒரு முறை ஜெயலலிதா மார்தட்டிக்கூறியுள்ளார். (கடந்த 2021 சட்ட மன்றத் தேர்தலின் போது, தமிழ்நாட்டின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை ஆறு கோடிக்கும் அதிகமாக இருந்தது) எனினும், அரசியல் ஊழல் குறித்து மட்டுமே தான் பேசியதாகவும் தனது மதிப்பிற்குரிய ஜெயலலிதா குறித்து எந்தக் கருத்தையும் தான் கூறவில்லை என்றும் அண்ணாமலை பேசியிருப் பது அதிமுகவுடனான சுமுக உறவு தொடரவும் கூட்டணி முறிவு பற்றிய பேச்சு ஓயவும் வழிவகுத்திருக்கிறது. செந்தில் பாலாஜி விவகாரம் குறித்தும் அதனால் திமுகவிற்கும் அதன் அரசுக்கும் ஏற்படக்கூடிய தாக்கம் குறித்தும் நான் இன்னும் விரிவாக உரையாட விரும்பினேன். நடிகர் விஜயின் அரசியல் நுழைவுத் திட்டம் குறித்தும் சிறிது பேச விரும்பினேன்.

ஆனால், உங்களின் அழகான ஞாயிறு காலையில் அதிக நேரத்தை ஏற்கெனவே நான் கபளீகரம் செய்து விட்டேன். இந்த இரு விஷயங்கள் குறித்து அடுத்த ஞாயிறு உரையாடலாம்.

# தனியார்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களின் இலாபம். தனியார்கல்வி பெற்றால் சித்தி நிச்சயமெனில் அங்கு செல்லும் எல்லா மாணவர்க ளும் சித்தி பெற்றிருக்கவேண்டுமே. எங்கு போனாலும் மீத்திறன் கொண்ட, முயற்சியும் அக்றையும் கொண்ட மாணவர்களே சிறந்த பெறுபேற்றைப் பெறுகிறார்கள் என்பதுதான் யதார்த்தம். பாடசாலையில் கிடைக்காத அவசியமானவிடயங்களையும் பரீட்சை நோக்கிலான பயனுள்ள பல உத்திகளையும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளையும் மாணவர்கள் அங்கு பெறுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. போட்டிப்பரீட்சைக்கு இவை அவசியமானவை.எனினும் இந்நிலையங்கள் அரைத்த மாவையே மீண்டும் அரைத்தாலும் அதைப் பொருத்தமான முறையில் அரைத்து கவர்ச்சிகரமாகப் பொதி செய்துவிற்பனைப்படுத்துகின்றன. பாடசாலைகளில் போடப்படும் அத்திபாரங்களில் இந்த நிறுவனங்கள்அவசியமான, அழகான வேலைப்பாடுகளைச் செய்து கொள்கின்றன. அதேவேளை மாணவர்கள் தனியேகல்விக்காக மட்டும் தனியார் கல்வி நிலையங்களை நாடுவதில்லை.அதில் வேறு பல காரணங்களும்செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதும் உண்மை. தனியார் கல்வி நிலையங்களின் வளர்ச்சியில் பாடசாலைகளின் பலவீனங்கள் மட்டுமன்றி வேறு காரணிகளும் செல்வாக்குச் செலுத்துவதால்இவ்விடயத்தில் பாடசாலைகள் தோல்வி கண்டுள்ளன என்று கூறமுடியாது.

# தேர்தல்களில்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களிலும் நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு திட்டம் இருப்பதாக சில வாரங்களுக்கு முன்னர் செய்திகள் வெளியாகின. ஆனால் அதைப்பற்றி இப்போது கதையைக் காணவில்லை.

தேர்தல்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று விக்கிரமசிங்க கூறிய போது அவர் தேர்தல் வரை படத்தை சுருட்டிவைக்க முயற்சிக்கிறார் என்று எதிரணி அரசியல்வாதிகள் கூறினார்கள். 1977 ஜூலை பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பாராளு மன்றத்தில் ஆறில் ஐந்து ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்த பிறகு ஜே.ஆர். ஜெயவர்தன தேர்தல் வரை படத்தை சுருட்டிவைப்பது குறித்துப் பேசினார். பிறகு அவர் பொதுத் தேர்தலுக்கு பதிலாக அன்றைய பாராளு மன்றத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு 1982 டிசம்பரில் முறைகேடுகள் நிறைந்த ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினார்.

ஆனால், அவரின் மருமகனான விக்கிரமசிங்கவை பொறுத்தவரை அவ்வாறு ஜனநாயக விரோதமான செயற்பாடுகளில் இறங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை. கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியை ஜனாதிபதி படை பலத்தைப் பயன்படுத்தி அடக்கியொடுக்கியிருந்தாலும், இலங்கை வரலாறு காணாத அத்தகைய பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக் கூடிய சிந்தனை மாற்றத்தை பரிசோதித்துப் பார்ப்பதற்கு தேர்தல் ஒன்றுதான் ஜனநாயக ரீதியான மார்க்கம். அதற்கான வாய்ப்புக்களுக்கு இடையூறுகளைச் செய்துகொண்டு மக்கள் தேர்தல்களில் நம்பிக்கை இழந்துவிட்டதாக கூறுவது எந்த வகையிலும் ஜனநாயக விரோதமான செயலாகும்.

## இராணுவம்...

இருப்பதை உறுதி செய்யவேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள் ளது.

அதுமாத்திரமன்றி உள்ளகப் பொறி முறை நிறுவுதல், வெறுப்புணர்வுப் பேச்சு மற்றும் அடக்குமுறைகளை தடுப்பதற்கு ஏற்ற செயன்முறையொன்றை நிறுவுவதன் மூலம் தேசிய நல்லிணக்கம் தொடர்பான கொள்கையை மேலும் வலுப்படுத்துமாறும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த மீளாய்வினைக் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மேற்கொண்டிருந்த நிலையில், இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை கள் பற்றிய பரிந்துரைகளை உள்ளடக் கிய 24 பக்க அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மின்சார...

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி இன்னும் வெற்றிடமாக இருப்பதால், எதிர்வரும் முதலாம் திகதி முதல் அமுலாக்க தீர்மா னிக்கப்பட்டுள்ள புதிய மின்சார கட்டணத் திருத்தம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களை பெறமுடியாமலும், தீர்மா னம் ஒன்று எடுக்கப்படாமலும் இருப்பதாக குறித்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள் ளது.

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் புதிய மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பான யோசனைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கினால் மாத்திரம், எதிர்வரும் முதலாம் திகதி முதல் புதிய மின்சார கட்டணத் திருத்தத்தை அமுல் படுத்த முடியும் என மின்சார சபை தலைவர் நளிந்த இலங்கக்கோன் தெரிவித்தார்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றி டமாக உள்ளதனால் கடந்த மூன்று மாதங்க ளாக ஆணைக்குழு கூடவில்லை எனவும், இதுகுறித்து உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு மேலும் குறிப் பிட்டுள்ளது. (அ)

## மேற்குலகு...

உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும் ஜனாதிபதி பயணித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் அழைப்பின் பேரில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க பிரான்சில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

"இன்று உலகம் எதிர்கொள்ளும் நெருக்கடியான சவால்களுக்கு தீர்வு காண்பது" என்ற தொனிப்பொருளில் ஜூன் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

உலக சமூகத்தை பாதித்துள்ள பல்வேறு நெருக்கடிகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்பது குறித்து இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப் படும் என்று கூறப்படுகிறது. (அ)

## சொகுசு...

சந்தியில் நேற்று காலை சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த பஸ்ஸை வழி மறித்து அதில் சோதனை முன்னெடுத்தனர்.

இதன்போது பஸ்ஸில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட 1 கிலோ900 கிராம் கேரள கஞ்சாவை மீட்டனர்.

அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற் படுத்துவதற்கான நடவடிக்கையை மேற் கொண்டுள்ளதாக தெரிவித்தனர். (அ)

# முல்லைத்தீவு மீனவர் பிரச்னைகளை நேரில் ஆராய்ந்தார் அமைச்சர் டக்ளஸ்

முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட கடற்றொழி லாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளார்.

அந்தவகையில், வட்டுவாகல் பிரதேச கடற்றொழிலாளர்களின் மீன்பிடி இறங்கு துறைக்கு செல்வதற்கு பொருத்த மான வீதியைப் புனரமைத்து கடற்றொ ழிலாளர்களின் பாவனைக்கு வழங்குவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் கடற்கரை வீதி இரா ணுவ முகாம் பகுதிக்குள் காணப்படுவ தால் கடற்றொழிலாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக நேற்று முல்லைத் தீவு மாவட்ட கட்டளைத் தளபதியுடன் கடற்றொழில் அமைச்சர் கலந்துரையா டிய நிலையில், வட்டுவாகல் இறங்கு துறைக்கான கடற்கரை வீதி முழுமை யாக விடுவிக்கப்படும் வரையில், தற்காலிக ஏற்பாடாக பாடசாலை வீதியை புனரமைக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த வீதியை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர், பாதையை புனரமைப்ப தற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

அத்துடன், வட்டுவாகல் சப்தகன்னி (கண்ணகி அம்மன்) ஆலயத்தின் தீர்த் தோற்சவ காலத்தில் பாரம்பரிய வழி பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற, தெய் வீகத் தன்மை வாய்ந்த வேப்ப மரப் பிரதேசம் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் முயற்சியினால் நேற்று மீண்டும் மக்கள் பாவனைக்கு முழுமை யாக திறந்து விடப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசம் கடந்த காலங்களில் இராணுவ முகாம் வளாகத்தினுள் அமைந்திருந்த நிலையில், பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடி குறித்த இடத்தை விடுவிப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதேபோன்று, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கடலந்துரையா டலில் பல்வேறு விடயங்கள் பிரஸ்தா பிக்கப்பட்டன.

குறிப்பாக, சட்டவிரோத தொழில் முறையான வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடிப்பதை கட்டுப்படுத்தும் வகையில் ஆரோக்கியமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை.

இந்த வருடத்தில் சுமார் 38 படகு களை கைப்பற்றி நீதிமன்ற நடவடிக் கைக்கு உட்படுத்தியிருப்பதாக கடற் றொழில் திணைக்களத்தினர் தெரிவிக் கின்ற போதிலும் வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடிப்பதை நூற்றுக்கணக்கான மீன்பிடிப் படகுகள் தொடர்ந்தும் மேற்கொண்டுவருவதாக கடற் றொழில் சங்க பிரதிநிதிகளினால் குற்றச்சாட்டப்பட்டது.

அதேபோன்று, நந்திக்கடல், நாயாறு போன்ற களப்பு பகுதிகளிலும் தொடர்ந் தும் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட விரோத தொழில் முறைகள் காரணமாக சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுவதா கவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவை தொடர்பாக அவதானம் செலுத்திய கடற்றொழில் அமைச்சர், சட்ட ஏற்பாடுகளில் காணப்படுகின்ற குறைபாடுகளும் இவ்வாறான சட்ட விரோத தொழில் முறைகள் தொடர்வ தற்கு ஏதுவாக இருப்பதானால், இந்த வருட இறுதிக்குள் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட வர்த்தமானியை வெளியிடுவதற்கான பணிகள் முன்னெ டுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மேலும், நாயாறு, நந்திக்கடல், சாலை போன்ற களப்பு பகுதிகளை துப்பரவு செய்வதற்கான அனுமதிகள் தேவையான திணைக்களங்களில் இருந்து கிடைத்திருப்பதனால் சுத்தப்படுத்தும் பணிகளை விரைவுபடுத்துமாறு கடற் றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, கரைவலை தொழில் மேற்கொள் வதற்கான இடங்களை அளவீடு செய்து, அவை சரியானவர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டதுடன், கரைவலைத் தொழிலில் வின்ஞ் எனப்படும் சுழலி பயன்படுத்துவதற்கு அனுதிக்கப்படு கின்ற போதிலும், வின்ஞ் பொருத்தப் பட்ட உழவு இயந்திரங்கள் ஒரு இடத் தில் நிலைத்து நின்றே செயற்படடே வண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இவ்வாறு பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்ட இன்றைய கலந்து ரையாடலில், மேலதிக அரசாங்க அதி பர், பிரதேச செயலாளர்கள், கடற் றொழில் திணைக்களத்தினர், கடற்படை - இராணுவம் - பொலிஸ் ஆகியவற்றின உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாய்த்தர்க்கம்...

உயிரிழந்தவரின் சடலம் நானாட் டான் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், முருங்கன் காவல்துறையினர் மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (அ)

## வவுனியாவில்...

குறித்தும் விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

இதுதவிர, கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர், ஊடகப் பேச்சாளர் போன்ற நியமனங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## மா விலை...

மொத்த விற்பனையாளர்கள் கோதுமை மாவை இறக்குமதி செய்தனர்.

அண்மைய நாட்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கோதுமை 160 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தோடு, மேற்படி வர்த்தமானி அறிவித் தலுடன், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 200 ரூபாவாக அதிகரித்துள்ளது.

பிரிமா மற்றும் செரண்டிப் ஆகிய நிறுவனங்கள் கோதுமை தானியங்களை இறக்குமதி செய்து கொழும்பு மற்றும் திருகோணமலைத் துறைமுகங்களில் அவற்றை மாவாக்கி விநியோகிப்பதாக வும்,

ஒரு கிலோ கோதுமை விதைக்கு இறக்குமதி வரியாக 30 ரூபாவாக இருந்தாலும் கோதுமை மா இறக்குமதி யின்போது ஒரு கிலோவுக்கு 40 ரூபா வரி அறவிடப்படுவதாகவும் பேக்கரி உரிமை யாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# செந்தில்-பந்துல சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 18

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் போக்குவரத்து, தபால் அமைச் சர் அமைச்சர் பந்துல குணவர்த்த னவுக்கிடையில் கலந்துரையா டல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத்திற்கான ரயில் இணைப்பை அதிகரிப்பது குறித்தும், ரயில் சேவையை நவீனமயப்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப் பட்டுள்ளது.

அத்துடன், தபால் சேவையில் நியம னம் பெற்ற பெருந்தோட்ட இளைஞர் கள் அடிப்படை சம்பள விகிதத்தில் பிரச்னைகளை எதிர்கொள்கின் றனர் எனவும், அப்பிரச்னைக்கு தீர்வு வழங்க கவனம் செலுத்துமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பந்துல குணவர்த்த னவிடம் கோரிக்கை விடுத்தார்.



இந்த பிரச்னைக்குத் தீர்வு வழங்க போக்குவரத்து அமைச்சர் பந்துல குண வர்தன ஒப்புக்கொண்டதுடன், அவரது வாழ்க்கை வரலாற்று புத்தகத்தையும் கையளித்தார். (அ)

## விரும்பியோ...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆளும் கட்சியினர் என தென்னிலங்கை அரசியல்வாதிகளின் தெரிவிக்கும் கருத் துக்கள், விரைவில் தேர்தல் ஒன்று இடம் பெறும் என்ற எதிர்பார்ப்பை தூண்டி யுள்ளது.

பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டிய இந்தச் சூழலில் ஜனாதி பதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முரண்பாடு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என வெளிநாட்டு நிறுவங்கள் கொண்டிருக் கும் இலங்கை மீதான நம்பிக்கை இழக்கக் காரணமாகிவிடும்.

நாட்டில் ஸ்திரத்தன்மை இல்லாமல் போனால் நாடு மேலும் சரிவை சந்திக் கும் என்பதனால் விரும்பியோ விரும் பாமலோ ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, விரைவாக ஒரு தேர்தலுக்கு செல்ல வேண்டும்-என்றார். (அ)

## சூழ்ச்சி...

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

தற்போது தேர்தல்கள் நடத்துவதற் கான காலம் அல்ல. ஆனால், ஜனாதிபதி நினைத்தால் எந்தத் தேர்தலையும் இந்த வருடம் நடத்துவ தற்கான அதிகாரத் தைக் கொண்டுள் ளார். எனினும், இந்த வருடம் தேர்தல்களை நடத்த அவர் விரும்ப வில்லை. நாட்டின் பொருளா தாரத்தை முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்வதே ஜனாதிபதியின் நோக்கம்.

ஜனாதிபதிக்கு பொதுஜன பெரமுன உள்ளிட்ட அரச பங்காளிக் கட்சிகள் அனைத்தும் முழு ஆதரவைத் தொடர்ந்து வழங்குகின்றன. எதிரணி வரிசையில் உள்ள பெரும்பாலான கட்சி களும் ஜனாதிபதியின் வேலைத்திட்டங் களுக்கு ஆதரவு வழங்குகின்றன. எனவே, அனைவரும் ஓரணியில் நின்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு வோம் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஒய்வின் பின்னரும் உயர்பதவிக்கு நியமிக்கப்படும் சிரேஷ்ட அதிகாரி

## கொழும்பு அரசியலில் சலசலப்பு

கொழும்பு, ஜூன் 18

**பாராளுமன்றத்திலிருந்து அண்மையில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட அதிகாரி ஒருவர் விசேட குழு வொன்றில் உயர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**அவர் முன்னைய பதவியின் முழுச் சம்பளத்தை யும் ஓய்வூதியத்துடன் வாகனங்கள் உட்பட சகல வசதிகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.**

சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இவரது இந்த நடவடிக்கை குறித்து அதிகாரிகள், ஊழியர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டு வருவதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ள தாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்திலிருந்து ஓய்வு பெற்ற இந்த அதிகாரி பல நாட்களாக பாராளுமன்றத் துக்கு வருகை தருவதாகவும் ஒவ்வொரு முறை வரும் போதும் பாராளுமன்றத்தில் இருந்து சொகுசு வாகனங்க ளையும் பெற்றுக் கொள்வதாகவும் தெரியவந்துள்ளது.

மூத்த அரசாங்க அதிகாரி ஒருவரின் ஒப்புதலின் பேரில் அவர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக வும், ஆனால் பல அமைச்சர்களும் அவரது நியமனம் குறித்து தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, நாட்டில் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில் இவ்வாறான நியமனங்களை வழங்குவதும் ஏனைய வசதிகளை வழங்குவதும் பாரிய பிரச்சினையாக உள்ளதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# சஜித் கட்சியால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது!

## சொல்கின்றார் அனுரகுமார

கொழும்பு, ஜூன் 18

ஐக்கிய மக்கள் சக்தி என்பது நாட்டைக் கட்டியெ ழுப்பக்கூடிய அரசியல் கட்சி அல்ல என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தங்காலையில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியால் மாத்திரமே நாட்டை கட்டி யெழுப்ப முடியும் என்பதை தற்போது மக்கள் உணர்ந்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட்டிருந்த பொதுமக்களின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் கைமாற வாய்ப்பிருந்தது.

அரசாங்கம் தற்போது தவறான பொருளாதார கொள்கைகளை கையாண்டு வருகிறது.

வர்த்தகங்கள் சீர்குலைந்து, மருந்துகூட இல்லாத பின்னணியில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ள தாக சிலர் கூறுகின்றனர்-என்றார். (அ)

# சுங்க உயரதிகாரிகளின் பாதுகாப்புக்கு துப்பாக்கி

கொழும்பு, ஜூன் 18

போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஈடுபடும் சுங்க அதிகாரிகளின் பாதுகாப்புக்காக துப்பாக்கிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

118 துப்பாக்கிகளைச் சுங்க அதிகாரிகளுக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு இதனை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டார். (அ)

# சில பொருள்கள் விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 18

சந்தையில் பொருட்களின் விலைகள் துரிதமாக அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின் றனர்.

இறக்குமதியாளர்கள் விலைகளை உயர்த்தியுள்ளதால் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் கூறினர்.

உருளைக்கிழங்கு, உப்பு மற்றும் பருப்பு ஆகியவற் றின் மொத்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, டொலரின் பெறுமதி அதிகரிப்பால் பெரிய வெங்காயத்தின் விலையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கொழும்பு-யாழ். ரயில் சேவை ஜூலையில் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 18

அனுராதபுரத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் போக்குவரத்து அடுத்த மாதம் மீள ஆரம்பிக்கப் படும் என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான ரயில் சேவைகள் வழமையான நேர அட்ட வணையின் அடிப்படையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

அனுராதபுரத்துக்கும் ஓமந்தைக்கும் இடையிலான ரயில் மார்க்கம் திருத்தப்பணிகளுக்காக கடந்த ஜனவரி மாதம் மூடப்பட்டது.

62 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்த ரயில் மார்க் கம் இந்திய கடன் உதவியின் கீழ் 33 பில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட ரயில் மார்க்கத்தில் மணித்தியா லத்துக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்கள் பய ணிக்க முடியுமென ரயில் திணைக்களம் தெரிவித்துள் ளது. (அ)

# ஒஸ்மானியா யுனைட்டெட் சம்பியன்






யாழ்ப்பாணம், ஜூன் 18

நாவந்துறை பிறீமியர் லீக் கிரிக்கெட் மென்பந்து சுற்று போட்டியின் இறுதி ஆட்டத்தில் புளூ ஸ்கை கிங்ஸ் அணியை எதிர்த்து ஆடிய ஒஸ்மானியா யுனைட் டெட் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.

நாவந்துறை பிறீமியர் லீக் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்று நாவந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு அணிகள் பங்குபற்றிய நாவந்துறை பிறீமியர் லீக் கிரிக்கெட் மென்பந்து சுற்று போட்டியில் இறுதிப்போட்டிக்கு புளூ ஸ்கைகிங்ஸ் அணியும் ஒஸ்மானியா யுனைட்டெட் அணியும் தெரிவாகியிருந்த நிலையில் நேற்றைய தினம் 2 அணி களும் மோதிக்கொண்டன. இதில் ஒஸ்மானியா யுனைற்டெற் அணி வெற்றி வாகை சூடியது

அன்ரன் நிலோசன் தலைமையில் இடம்பெற்ற இறு திப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக டான் குழு மத்தின் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் கலந்து சிறப்பித்தார். போட்டியில் வெற்றி ஈட்டிய அணிகளுக்கான வெற்றிக் கேடயத்தையும் பரிசில்களையும் அவர் வழங்கினார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் கிருபாகரன், வர்த்தகர்களான மயூரன், பிரியங்கன் கலந்துகொண்டு வெற்றியீட்டிய அணிகளுக்கு பரிசில்களை வழங்கினர். (அ)

# சர்வதேச யோகா தினத்தையொட்டி கொழும்பில் நேற்று விசேட நிகழ்வு

கொழும்பு, ஜூன் 18

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்திய தூதரகம் ஏற் பாடு செய்திருந்த விசேட யோகா நிகழ்வு நேற்று கொழும்பு, சுதந்திர சதுக்கத் தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பால்கே, அமைச்சர்களான பந்துல குணவர்தன, சுசில் பிரேம ஜயந்த், அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்த குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், ஹற்றன் , கொட்ட கலை பகுதியில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று விசேடயோகா நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)




# சைபர் குற்றங்கள் குறித்து 1,187 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஜூன் 18

2023 ஆம் ஆண்டில் இது வரையில் சைபர் குற்றங்கள் தொடர்பான 1,187 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

இதுபோன்ற முறைப்பாடுகள் தொடர்பாக 75 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவற்றில் 108 முறைப்பாடுகள் சமூக ஊடகங்கள் மற்றும் பிற ஒன்லைன் ஊடகங்கள் மூலம் செய் யப்பட்ட நிதிக் குற்றங்கள் தொடர் பானவை என பொலிஸார் தெரிவித்தனர்.

சலுகைகள் மற்றும் விளம்பரப் பொருட்கள் தொடர்பான சமூக ஊடகங்கள் மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் மற்றும் செய்திகளை கவனத்தில் கொள்ளுமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் தெரியாத நபர்களுக்கு தனிப்பட்ட தகவல்களை வழங்குவதை தவிர்க் குமாறும் பொலிஸார் பொது மக்களை வலியுறுத்தியுள் ளனர்.

இதற்கிடையில், கொவிட்-19 நெருக்கடி காலத்தில் சைபர் குற்றங் கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.